திருக்கோயில்

ஏப்ரல் 1980 ரூ. 1-25

இந்தியப் பிரதமர் மாண்புமிகு இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தந்தபோது, அறக்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள், பிரதமர் அவர்களுக்குத் திருக்கோயிலின் திருநீறு குங்குமப் பிரசாதம் வழங்குதல்.

அருள்மிகு
சக்கரபாணி சுவாமி
திருக்குடந்தை

முகப்பு: கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்பட்டீச்சுரம் அருள்மிகு தேனுபுரீசுவரர் கோயிலின் அழகிய தோற்றம்.

திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை: 22 | இரவுத்திரி ஆண்டு-சித்திரைத் திங்கள்-ஏப்ரல்-1980 | மணி: 7

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைத் குறிப்பிட்டு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

வேதாந்தம்
—டாக்டர். திரு டி.எம்.பி. மகாதேவன், எம்.ஏ., பிஎச்டி

இளங்கோ அடிகள்
—திரு கி.வா. ஜகந்நாதன், எம்.ஏ.,

நம்மாழ்வார் உபதேச நலன்கள்
—திரு பி.ப. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்

பாண்பெருமாள் கண்ட பெரியபெருமாள்
—வங்கிபுரம் நவநீதம் சீராம தேசிகாசாரியார் அவர்கள்

குன்றைமுனிவர்
—திரு சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள்

மூவகைப் பக்தர்கள்
—ஆசிரியர்

வைணவர்களுக்குரிய பண்பு நலன்கள்
—பிள்ளை லோகாசார்யர்

திருமாலின் ஐவகை நிலைகள்
—ஆசிரியர்

இந்தளூர் அந்தணன்
—திரு டாக்டர். ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.

திருவரங்கத்து அந்தாதி
—ஆசிரியர்

மாணிக்கவாசகரும், சங்கநூல்களும்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

சிவபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவம் எனப்படும். அச் சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். எனினும் சைவம் என்பதும், சைவசித்தாந்தம் என்பதும், தனித்தனிப் பொருட் குறிப்புடையன ஆகும். சைவம் என்பது இமயம் முதல் குமரி வரையில் இந்திய நாடு முழுவதிலும் பரவியுள்ளது. ஆயினும், காசுமீரச் சைவம் என்றும், கன்னட நாட்டு வீர சைவம் என்றும், பெயர்கள் வழங்கக் காண்கின்றோம். அதுபோல, நம் தமிழ்நாட்டுக்கே தனிச் சிறப்பாக உரிய சைவக் கொள்கையே, சைவ சித்தாந்தம் என வழங்கி வருகின்றது. வசுகுப்தர், கல்லடர், சோமானந்தர், அபிநவகுப்தர் முதலிய சான்றோர்களால் காசுமீர நாட்டில் பரப்பப்பெற்றது, காசுமீரச் சைவம். பசவேசுவரர், சென்ன பசவேசுவரர், சித்தராமையர், அல்லமாப்பிரபு முதலிய அருளாளர்களால் வளர்க்கப்பெற்றது, கன்னட நாட்டு வீரசைவம். அங்ஙனமே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் சமயாசிரியர்கள் நால்வராலும், மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் என்னும் சந்தான ஆசிரியர்களாலும், அவர்தம் வழிவந்த மற்றும் பற்பல அருட்பெருஞ் சான்றோர்களாலும், தமிழ்நாட்டிற் பரப்பி வளர்க்கப்பெற்றதே, சைவ சித்தாந்தம் எனப்படும்.

சைவசித்தாந்தத்தின் சிறப்பு :

இத்தகைய சைவசித்தாந்தச் செந்நெறியின் சிறப்பினையும், அருமை பெருமைகளையும், நம் முன்னோர் தம் நூல்களில் பலவகைகளில் விதந்து குறிப்பிட்டுள்ளனர். ''சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும்'' - ''தற்சிவம் கண்டுள்ளோர் சைவ சித்தாந்தரே'' - ''சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே'' என்பன போல வரும் திருமூலர் திருமந்திரத் தொடர்கள், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டு உணர்த்துதல் காணலாம்.

சிவப்பிரகாசம் என்னும் நூலில், ஆசிரியர் உமாபதிசிவம் ''சைவ சித்தாந்தமானது, புறச்சமயத்தவர்களுக்கு இருளாய், அகச் சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும்; அளவை நெறிக்கு அளவையாகத் திகழும்; இறைவனையும் உயிர்களையும், பொன்னும் பணியும் போல் அபேதம், இருள் ஒளிபோல் பேதம், சொற்பொருள் போல் பேதாபேதம் என்று கூறும் பிற சமயங்கள் போலாமல், இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும்போல் ஒன்றாகவும், கண்ணும் சூரியனும் போல் வேறாகவும், கண்ணொளியும் உயிரறிவும்போல் உடனாகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும்; வேதாந்த நூல்களின் பிழிவாகவும் தெளிவாகவும் திகழும்'' என்கின்றார்.

புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்ப்
புகல் அளவைக்கு அளவாகிப், பொற்பணி போல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும், சொற்பொருள் போல்
பேதாபேதமும் இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவிதம்ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்

— சிவப்பிரகாசம்.

மற்றும், இச் சைவ சித்தாந்தமானது, ''உலகாயதம் முதலாகச் சிவாத்துவைதம் ஈறாக உள்ள பல்வேறு மதங்கள் கூறும் கொள்கைகளை எல்லாம் கடந்தது. வேதத் தலைதரு பொருளாய் விளங்குவது. ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆரா இன்பம் அளிப்பது. உள்ளதே தோழிற்படும் என்னும் கொள்கை (சற்காரிய வாத) நெறியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது'' என்றும், சைவ சித்தாந்தத் தத்துவக்கொள்கையின் சிறப்புக்களை, ஆசிரியர் உமாபதி சிவம் தொகுத்துக் கூறியருள்கின்றார்.

---

* அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 'தமிழ்க்கடல்' 'சிவமணி' திரு. இராய. சொக்கலிங்கம் அவர்கள் நினைவு அறக்கட்டளையின் சார்பில், ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (23.3.80)

நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக் கொள்கைய தாகி,வேதத்
தலைதரு பொருளாய், இன்பாய்த், தாவில்சற்
காரி யத்தாய்,
மலைவறும் உணர்வாற் பெத்த முத்திகள் மதித்
தாம் அன்றே''

—சிவப்பிரகாசம்

தமிழ்ப் பண்பாடு :

சைவ சித்தாந்தக் கொள்கை நெறியினைச் ''சித்தாந்த சைவம்'' என்றும் பெரியோர்கள் வழங்குவர். இது நம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய, பழமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறியாகும். ''சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியத் தமிழர் (திராவிடர்)களின் பேரறிவின் பெருவிளைவாகும். அது மிகப் பெரிய மாட்சிமை வாய்ந்ததுமாகும். இதனைத் தென்னிந்தியாவிற்கே, குறிப்பாகத் தமிழர்க்கேயுரிய சமயம் எனலாம்''. 1. ஏனெனில், இதனுடைய முதன்மையான அடிப்படை மேற்கோட் பெருநூல்கள் அனைத்தும் தமிழிலேயே தமிழகத்துச் சான்றோர் பெருமக்களால், ஒழுங்காக வகுத்து வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளன. ''சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட நூல்கள் பதினான்கும், அவற்றிற்கு மாறுபடாமல் அவற்றைத் தழுவிச் செல்லும் ஏனைய பிறநூல்களுமே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை முதன்மை நூல்களாக விளங்குகின்றன'' என்பது, அருட்டிரு மறைமலை அடிகளார் போன்ற பேரறிஞர்களின் துணிபு. 2

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் தமிழ் வேதமே பசுவாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகமமே அப்பசுவின் பாலாகவும், அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமுறைகளே அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார் அருள்நந்திசிவம் உமாபதிசிவம் என்னும் சந்தான ஆசிரியர்கள் இயற்றிய நூல்களே அந்நெய்யின் சுவையாகவும் அமையச் சிறந்து விளங்குவது, சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை. இவ்வாற்றால் சைவ சித்தாந்தம் நம் தமிழ்நாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், உரிய தமிழ்நெறியே யாதல் தெளியற்பாலது.

''வேதம் பசு; அதன்பால் மெய்யா கமம்; நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறும்நெய்;-போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணை மெய்
கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்''

—தனிப்பாடல்.

தருக்க இயல் :

சைவ சித்தாந்தத் தத்துவ ஆராய்ச்சி, காரணகாரிய அடிப்படையில் (Logical), அறிவு நெறிக்கு ஏற்ப (Rational)அமைந்து திகழ்வது. பலவகை ஐய வினாக்களுக்கும் நல முற விடையளிப்பது. துணிபொருள், ஏது, காட்டு, இணைத்தல், முடித்தல் (பிரதிஞ்ஞை-ஏது-திருட்டாந்தம்-உபநயம்-நிகமனம்) என்னும் ஐவகை யுறுப்புகள் அமையச் சான்றுகள் காட்டி, மெய்ப்பிக்கப்பட்ட கொள்கையே சித்தாந்தம் எனப்படும் முறைமைக்கு ஏற்பத், தருக்க நெறிமுறைகள் பிறழாது ஆராய்ந்து காட்டி விளக்கிச் செல்வது. இதற்குப் பின் வரும் சிவஞானபோதப் பேருரைப் பகுதி, சிறந்த இனிய எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையினை வகுத்து விளக்கிய நம்முடைய சைவப் பெருஞ் சான்றோர்கள், திருவாசகத்தை நன்றாக ஓதி உணர்ந்தவர்கள்; அதன்கண் பெரிதும் தோய்ந்து ஈடுபட்டுத் திளைத்தவர்கள். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும், அவர்கள் பெரிதும் நுனித்து ஆய்ந்துணர்ந்து, அவற்றின் அடிப்படையிலும் அவற்றிற்கு ஒருசிறிதும் மாறாகாத வகையிலுமே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுத்து வரையறை செய்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. சமய ஞானத் தத்துவக் கொள்கைகளில் தெளிவு ஏற்படாத பொழுதும், சிக்கல்கள் நேரும் பொழுதும், இன்னதுதான் ஏற்புடைத்து என்று எண்ணித் துணிந்து முடிவு செய்வதற்கு, நம் முன்னோர்கள் திருவாசகத்தினை ஒரு மேல்வரிச் சட்ட நூலாக மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனலாம்.

கவிதையும் தத்துவமும் :

கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு. மனித வாழ்க்கை

---

(1) "The Saiva Siddhanta system of philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian and Tamil religion'".

—Dr.G.U.Pope

(2) "The fact must be borne in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta, whereas in Sanskrit either in the Vedic or in the post-Vedic period not even a single systematic work on the philosophy is to be met with......"

—Maraimalai Adigal

"The recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all othe fundamental doctrines that are peculiar only to the Saiva Siddhanta and not to any other religion or philosophy, ancient or modern".

—Maraimalai Adigal

படிப்படியே முன்னேறி, வளர்ந்து சிறந்து ஓங்குவதன்மூலம், நாகரிகம் தழைக்கின்றது. நாகரிகத்தின் செழிப்பும் சிறப்புமே பண்பாடாக மலர்கின்றன. வாழ்க்கையின் வளமும் பண்பாட்டின் மாட்சிமையும் வளர்ந்து ஓங்குந்தோறும், சிறந்த கவிதைகள் தோன்றுகின்றன. கவிதைகள் பல்கிப் பெருகுவதனால் இலக்கியங்கள் தோன்றுகின்றன. இலக்கியங்களின் பிழிவும் சாரமுமாக ஒருங்கு திரண்டு உருவாகும் அறிவு அனுபவக் கொள்கைகளே, தத்துவம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன.

எனவே கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிகமிக நெருங்கிய இயைபும் தொடர்பும் உண்டு எனலாம். ''சிறந்த தத்துவ ஞானியாக இல்லாத எவனும் இதுவரையில் ஓர் உயர்ந்த கவிஞனாக விளங்கியதில்லை''(No man was ever yet a great poet without being at the same time a profound philosopher".) என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. ஆதலின் திருவாசகம் ஒரு சிறந்த கவிதைநூல் என்பது மட்டுமேயன்றி, மிகச் சிறந்த ஒரு தத்துவஞானநூலும் ஆகும் என்று, நாம் கூறுதல் பொருந்தும்.

சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையினை வகுத்து விளக்கிய நம்முடைய சைவப்பெருஞ் சான்றோர்கள், திருவாசகத்தை நன்றாக ஓதி உணர்ந்தவர்கள்; அதன்கண் பெரிதும் தோய்ந்து ஈடுபட்டுத் திளைத்தவர்கள். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும், அவர்கள் பெரிதும் நினைத்து நுனித்து ஆய்ந்துணர்ந்து அவற்றின் அடிப்படையிலும், அவற்றிற்கு ஒரு சிறிதும் மாறாகாத வகையிலுமே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுத்து வரையறை செய்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

சமய ஞானத் தத்துவக் கொள்கைகளில் தெளிவு ஏற்படாதபொழுதும், சிக்கல்கள் நேரும்பொழுதும், இன்னதுதான் ஏற்புடைத்து என்று எண்ணித் துணிந்து முடிபு செய்வதற்கு நம் முன்னோர்கள் திருவாசகத்தினையே ஒரு மேல்வரிச் சட்ட நூலாக மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனலாம்.

நச்சினார்க்கினியர் :

தமிழ்நூல் உரையாசிரியர்கள் பலருள் தலைசிறந்த ஒருவர் நச்சினார்க்கினியர். 'உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்றும், 'நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்றும், தமிழறிஞர்கள் அவரைப் பெரிதும் போற்றிப் பாராட்டிப் புகழ்வர்.

(1) அவர், திருமுருகாற்றுப் படையில், 'சேவடி படரும் செம்மல் உள்ளம்' என்னும் தொடருக்குப் பொருள் விளக்குங்கால், திருவாசகத்தினையே மேற்கோள் காட்டுகின்றார்:

''திருவடியே வீடாய் இருக்கும் என்றார்; அது, 'தென்னன் பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி' என்பதனாலும், பிறரும் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க''

என்று அவர் எழுதியிருத்தல் காண்க.

(2) இங்ஙனமே, கந்தழி என்னும் சொற்பொருள் பற்றி விளக்குங்கால்,

''கந்தழியாவது ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்; இதனை, 'உற்றஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்றலாவதோர்நிலை யிலாப் பரம்பொருள்' என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றான் உணர்க''

என வரைந்திருத்தலும் அறிந்து மகிழ்தற்குரியது. தமிழ்நெறியியல் அறிந்த சான்றோர் ஆகிய நச்சினார்க்கினியர் இவ்விரண்டு இடங்களிலும் வேறுபிற எத்தனையோ நூல்களினின்று மேற்கோள்கள் காட்டலாமாயினும், திருவாசகத்தினையே சிறப்புற விதந்தெடுத்துக் காட்டியிருத்தல் கருதி மகிழ்தற்குரியது.

இவ்வாறே சைவசித்தாந்தப் பெருஞ் சான்றோர்களும், தத்துவக் கொள்கைகளை வரையறை செய்து உணர்த்துவதற்குத் திருவாசகத்தையே, மிகச் சிறந்த பிரமாண நூல்களுள் ஒன்றாக மேற்கொண்டுள்ளனர். இவ்வுண்மையைத் தெள்ளிதின் விளக்குகின்ற, ஒருசில சான்றுகளை மட்டும் ஈண்டுக் காண்போம்.

(1) குருவும் சிவமும் :

இறைவனே குரு வடிவமாக மானுடச் சட்டை தாங்கி எழுந்தருளி உயிர்களையெல்லாம் ஆட்கொண்டருளுகின்றான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. மாணிக்கவாசகரின் அருள் வாழ்க்கையையும், திருவாசகத்தையும் அடிப்படையாகக்கொண்டே, இக்கொள்கை வரையறை செய்யப்பெறுவதாயிற்று. எல்லாம் வல்ல சிவபெருமான் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலில் குருவடிவம் கொண்டு போந்து மணிவாசகரை ஆட்கொண்ட திறத்தினை நினைத்தே மெய்கண்டார் பெருமான்,

''ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த
விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''

எனச் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்தினை அருளிச் செய்தனர். அருவ நிலையில் உள்ள இறைவன் உருவம்கொண்டு வருதல் இயலுமோ? எனச் சிலர் ஐயுற்று வினவலாம். அதற்குத் திருக்களிற்றுப் படியாரில், திருக்கடவூர் உய்யவந்த தேவர் விடை கூறுகின்றார். உவர்ப்பு என்னும் சுவை அருவமேயாயினும், அது உப்பு என்னும் உருவப் பொருளாகத் திரண்டு குவிந்து நிற்றலைக் காண்கின்றோம். ஆதலின் இறைவன் அருவநிலையில் இருப்பினும், தனது அன்பர்களை ஆட்கொண்டு காத்

தருள உருவம் கொண்டு போதருதல் இயலும் என்பது, அவர் கூறும் விளக்கம். (91) இவ்வுண்மையை வலியுறுத்துவதற்கு அவர்,

''கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க''

''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகிய அருளிய பெருமை''

என்னும் திருவாசக வரிகளையே நினைவு கூர்ந்து, மேற்கோள் காட்டியிருக்கின்றார். ''சிவன் எனவே தேறினன்யான் என்றமையால், இன்றும் சிவன் அவனி வந்தபடி செப்பில்....'' எனவரும் திருக்களிற்றுப்படியார் (91) செய்யுளில், திருவாசக வரியே மேற்கோள் நிலையில் வந்திருத்தல் காண்க. திருவருட்பயன் என்னும் சைவசித்தாந்த நூலின்கண் வரும் ''அருளுரு நிலை'' என்னும் தலைப்பு முழுவதும் திருவாசகத்தை அடியொற்றியதே யாகும்.

(2) ஒளியும் இருளும் :

இறைவன் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்' நிற்கின்றான். எனினும் உயிர்கள் பொருள்களை உள்ளவாறு அறியமாட்டாமல், பொறிபுலன்களுடன் இயைந்து மயங்கியே நிற்கின்றன. இஃது எது போலும் என்னில், சூரியன் எவ்வளவுதான் பேரொளி பரப்பித் திகழ்ந்தாலும், பிறவிக் குருடர்கள் அதனை ஒரு சிறிதும் காண முடிவதில்லை. அவ்வாறே, உயிர்களும் மலங்களினால் மயங்கி அறிவிழந்து, இறைவனை அறியமாட்டாமல் துன்புறுகின்றன. ''இங்கும்தான் அந்தகருக்கு இரவி இருள் ஆகும்; ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருள் ஆம்'' என்பது சிவஞானசித்தியார் (317). ''எங்கும் நீர், நீரேயாயினும், பருகுவதற்கு ஒரு துளியும் இல்லை'' என அலமந்து ஆங்கிலக் கவிஞர் ஒருவர் பாடுகின்றார். அங்ஙனமே, இறைவனது திருவருள் வெள்ளம் எங்கும் பரவிப் பெருகிக் கிடப்பினும், உயிர்கள் இறைவனை அறியமாட்டாமல் அலமந்து உழலுகின்றன என்கின்றார் உமாபதிசிவம். இந்நிலையை உன்னும்போது, அவருக்குத் திருவாசகமே நினைவிற்கு வருகின்றது. ''வெள்ளத்துள் நாவற்றி யாங்கு உன் அருள்பெற்றுத் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேன்'' (118) எனவரும் நீத்தல் விண்ணப்ப வரிகளை நினைவுகூர்ந்தே,

''வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்''

எனத் திருவருட் பயனில், உமாபதிசிவம் அருளிச் செய்திருக்கின்றார். ''முன்னோர் மொழி பொருளே யன்றி, அவர் மொழியும் பொன்னே போற் போற்றுதும் யாம்'' என்பதற்கு, இஃது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

(3) நீரும் தீயும் :

இறைவன், சடம்-சித்து, உயிரில் பொருள்-உயிர்ப்பொருள் ஆகிய எல்லாவற்றுள்ளும் விரவிக் கலந்து நிற்கின்றான். ஆயினும், அவன் அவைகளில் ஒன்றல்லன்; அவற்றின் வேறுபட்டவன்! வேறுபட்ட அவன் அவைகளுள் எங்ஙனம் பிரிவற இயைந்து நிற்றல் இயலும்? எனச் சிலர் வினவுதல் கூடும். இவ்வினாவுக்கு ஒரு வகையில், திருவருட் பயன் என்னும் சைவ சித்தாந்த நூல், சிறந்ததொரு விளக்கம் தருகின்றது. நீர் தண்மையுடையது. தீ வெம்மையுடையது. நீரும் தீயும் தம்முள் வேறுபட்டவை, மாறுபட்டவை; எனவே நீரும் தீயும் தம்முள் ஒன்று கலக்கமாட்டா. ஆயினும், தண்மை மிக்கநீரின்கண், ஒரோவழி தீயினது வெம்மை கலந்து நிற்றலும் உண்டு; நீரும் தீயும் தம்முள் அறவே மாறுபட்டனவாயினும், வெந்நீரின்கண் அவையிற்றின் இரண்டு தன்மையும் பிரிவற விரவிக் கலந்து நிற்கக் காண்கின்றோம். அது போலவே, சடமும் சித்தும் ஆகிய உலகியற் பொருள்களிலெல்லாம் அறவே வேறுபட்டவனாயினும், ஒரோவழி இறைவன் அவற்றோடு கலந்து ஒன்றி உடனாகவும் நிற்கின்றான். இறைவனின் இரண்டன்மை ஆகிய இவ்வியல்பினையே 'அத்துவிதம்' அல்லது 'வேறாய்உடனாதல்' எனச் சைவசித்தாந்த நூல்கள் சாற்றும். இறைவனின் இவ் வியல்பினையே,

''எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும்அவன் தானே தனி''

எனத் திருவருட்பயன் தெளிவிக்கின்றது. இதற்கு உரிய ஆதாரமும் மேற்கோளும், ''பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படரொளிப் பரப்பே! நீருறு தீயே நினைவதேல் அரிய நின்மலா'' (395) எனவரும் திருவாசகப் பகுதியேயாகும்.

(4) இருவினை ஒப்பு :

இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்பன, சைவசித்தாந்தத்தில் அடிக்கடி வழங்கப்பெறும் குறியீடுகள். இருவினையொப்பு என்பது, மலபரிபாகம் அடைதற்கும், சத்திநிபாதம் என்பது, ஞானம் பெறுவதற்கும் உரிய வாயில் ஆகும்.

''இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனாம் ஞானத்தை வைத்து''

என்பது சிவஞானபோதம். இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் இரண்டும், சரியைகிரியை யோகம் என்னும் சிறந்த தவத்தின் பயனாகத் தராசுத் தட்டுகளைப் போல, நேராக நின்று சமநிலையை அடைதலே, இருவினையொப்பு எனப்படும். 'ஒட்டு இருவினைச் சமம், கட்டவிழ் பருவம்' என்பது பாம்பன் சுவாமிகள் அருளிய ஞானவாக்கியம்.

ஒரு பொருளில் விருப்பும், பிறிதொரு பொருளில் வெறுப்பும் கொள்ளுதல் செய்யாமல், புண்ணிய பாவம் இரண்டிலும், அவற்றின்

பயன்களிலும் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வுடன் இருக்கப்பெறும் நிலையையே, இருவினையொப்பு எனக் கொள்ளுதல் பொருந்தும். இதனைச் 'செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடாநிலைமை' எனத் தொல்காப்பியத்திற்கு உரைவரைந்த பேராசிரியர் குறிப்பிடுவர். இதனைச் 'சாந்தம்' அல்லது 'சமநிலை' என்றும் நூல்கள்கூறும்.

''ஊழால் விளையும் இன்ப துன்பங்களை எவன் இறையருளின் கொடை என்று சமநோக்கோடு ஏற்றுக் கொள்ளுகின்றானோ- எவனுடைய உணர்ச்சியும் நுண்ணுணர்வும் முரண்படாமல் நன்கினிது ஒன்றுபட்டு இணைந்து நின்று, ஊழ்த் தேவதையினுடைய விரல்களின் விருப்பப்படியெல்லாம் ஒலிப்பதற்கு ஊதுகுழலாக இருக்கமாட்டாவோ, - எவன் பொறி புலனுணர்ச்சிகளுக்கு அடிமைப் படாதவனோ - அத்தகையவனை எனக்குக் காட்டுக! அவனை என் இதயத்தின் ஆழத்தில், உள்ளத்தின் உள்ளுக்குள்ளே, பொன்போற் பொதிந்து வைத்துக்கொண்டு போற்றுகின்றேன். அத்தகையோர் இறையருள் பெற்ற பெரியோர்கள் ஆவர்''*

என்று ஆங்கிலப் பெருஞ்கவிஞர் ஆகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) தாம் இயற்றிய ஹாம்லெட் (Hamlet) என்னும் நாடக நூலிற் கூறியிருத்தலும், ஈண்டு நாம் சிந்தித்து மகிழ்தற்கு உரியது. இந்நிலையினையே, சைவசித்தாந்த நூல்கள் 'இருவினையொப்பு' என இயம்புகின்றன.

''உணக்கி லாததோர் வித்துமேல் விளையாமல்
என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

எனவரும் திருவாசக வரிகளில், இருவினையொப்புப் பற்றிய சைவசித்தாந்தக் கருத்திற்கு அடிப்படைமூலம், அமைந்திருத்தல் காணலாம்.

(5) உருமூன்று :

இறைவனைப் பல்வேறு சமயங்களும், பல பல வகையிற் கூறுகின்றன. ஒரு சில சமயங்கள் கடவுளை அருவம் என்றே கொள்கின்றன. ஒருசில சமயங்கள் கடவுளை உருவம் என்றே உரைக்கின்றன. இங்ஙனம் இவ்விரு நிலைகளுள் ஒவ்வொன்றனையே பற்றிக் கொண்டு, சமயங்கள் பலவும் தம்முள் இகலிக் கலாம் விளைத்து நிற்க, இவ்விருதிற நிலைகளையும் ஏற்று உடன்பட்டுக் கொள்வதுடன், இவற்றின் வேறாக உருவாருவம் என்னும் ஒரு நிலையும் இறைவனுக்கு உண்டு எனச் சைவசித்தாந்தம் சாற்றுகின்றது. இதனை,

''அருவமும், உருவா ரூபம் ஆனதும், அன்றி
நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு
உள்ள வாமே'

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுள் (சு.58) கொண்டு தெளியலாம். பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் ஆகிய மூர்த்தங்கள் நான்கும் உருவம்; விந்து நாதம் சத்தி சிவம் என்பன நான்கும் அருவம்; சதாசிவம் என்னும் சிவலிங்கத்திருமேனி அருவுருவம் (சித்தியார் 164). கண் காது மூக்கு முகம் முதலிய உறுப்புகள் காணப்படாமையால் அருவமாகவும், கண்ணாற் காணப்படுகின்ற பருவடிவப் பிழம்பாகப் புலனாகி நிற்றலின் உருவமாகவும், சிவலிங்கம் திகழ்கின்றது. ஆதலின் அதனை 'உருவாருவம்' என்றும், 'சகளநிஷ்களம்' என்றும் நூல்கள் நுவலும்.

''காணாத அருவி னுக்கும் உருவி னுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவ
லிங்கம்''

என்பது பெரியபுராணம். இங்ஙனம் இறைவன் அருவம் உருவம் அருவுருவம் என்னும் மூன்று நிலைகளிலும் விளங்குகின்றான் எனச் சைவ சிந்தாந்தம் கூறுவதற்கு,

''உருமூன்றும் ஆகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரம்மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ''

எனவரும் திருவாசகப் பகுதியே, மூலமும் ஆதாரமும் ஆகும் எனத்துணிந்து மொழியலாம்.

(6) மறக்கருணை :

உலகில் உள்ள சமயங்கள் பலவும், இறைவன் பாவிகளைச் சபிக்கின்றான்; தீயவர்களைத் தண்டிக்கின்றான் எனப் பல செய்திகளைக் கூறக் காண்கின்றோம். இறைவன் கோபங் கொள்கின்றான், கோபம் கொண்டால் தண்டிக்கின்றான்; அழிக்கின்றான் என்றே பல சமயங்கள் கருதுகின்றன. ஆனால் சைவசித்தாந்தமோ, கடவுள் ஒரோவழி தண்டிக்க நேரினும், அத்தண்டனையும்கூட, அவர்தம் அளவற்ற பெருங் கருணைத் திறத்தினாலேயே நிகழ்கின்றது என விளக்குகிறது.

தந்தையும் தாயும், தாம் பெற்றெடுத்த மைந்தர்கள் தம்முடைய சொற்படி நடவாமல் தவறுகள் செய்வார்களாயின், ஒரோவழி அவர்களை அடித்தும் தண்டிப்பதுண்டு. அஃது, அவர்கள் தமது மைந்தர்களின்மீது வைத்துள்ள அளவற்ற அன்பின் காரணமாகவே அன்றிப் பிறிதொன்று பற்றியன்று.

---

*"A man that Fortune's buffets and rewards
Hast taken with equal thanks; and blest are
those
Whose blood and judgement are so well
commingled
That they are not a pipe for Fortune's finger
To sound what stop she pleases.....
Give me that man,
That is not passion's slave and I will wear him
In my hearts core, ay, in my heart of heart,
As I do thee....."
—Shakespeare, Hamlet.

''தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள், தம் சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி, வளாரினால் அடித் துத் தீய
பந்தமும் இடுவர்: எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ? ஈசனார் முனிவும் என்றும்''

—சித்தியார் 105

சிறந்த மருத்துவ அறிஞர் ஒருவர், ஒரு நோயாளருக்கு மிகவும் கசப்பான மருந்தை யளித்துக் கடும் பத்தியங்களை விதிக்கின்றார்; மற்றொரு நோயாளருக்கு மிகவும் சுவையான மருந்தைக் கொடுத்துப் பாலும் பழமும் உண் ணச்செய்கின்றார்; வேறொரு நோயாளருக்கு மிகவும் துயரம் தருகின்ற அறுவைச் சிகிச்சை புரிகின்றார். இஃது அம்மருத்துவரின் விருப்பு வெறுப்பு, அல்லது பரிவு சினம் என்பன பற்றி நிகழ்வதன்று! அவ்வவர்க்குள்ள நோயின் இயல் புக்கு ஏற்ப அமைவது.*

''மண்ணுளே சில வியாதி, மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும்; சில நோய்எல்லாம்
கண்ணிய கட்டி பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே, வினை அறுப்பன்''

—சித்தியார் 125

இம்முறையிலேயே, இறைவனும் உயிர் களுக்கு ஏற்றபெற்றி அருள்புரிந்து அவைகளை ஆட்கொள்கின்றான் (சித்தியார், 125). ஆத லின், ஒரோவழி இறைவன் தண்டனைகள் அளிப்பதும், அவன் நம்மீது கொண்டுள்ள அள வற்ற பேரருட் பெற்றியினாலேயே ஆகும்; ''நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய் வது'' (சித்தியார், 105) என்பது, சைவசித் தாந்தக் கொள்கை. இதனை ''மறக்கருணை'' எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும். (போற் றிப்பஃறொடை 51-53)

''ஏற்று வந்தெதிர் தாமரைத் தாள்உறும்
கூற்றம் அன்னதோர் கொள்கைஎன் கொள் கையே'' (1)

''உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே'' (2)

''நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித் தால்
சயம் அன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ''(3)

*"A good physician, when a disease is so bad and so great that he has to cut off a hand, foot, ear eye, or let it decay, does so in order to save the body. Looked at from the point of view of the member, that he cuts off, he seems a cruel and merciless man; but when looked at from the point of view of the body, which he intends to save, it turns out that he is a fine and true man and does a work that is good and Christian, as far it goes".

—*Martin Luther.*

''காமன்உடல் உயிர்காலன் பல்காய் கதிரோன்...
தூய்மைகள் செய்தவா தோள்நோக்கம் ஆடாமோ''(4)

என்பன போலவரும் திருவாசகப் பகுதிகளே, இறைவனின் மறக்கருணை பற்றிய விளக்கத் திற்கு ஏதுவாகும் எனலாம்.

(7) அடியார் உறவு :

இறைவனின் அருளைப் பெறுவதற்கு அடி யார் கூட்டுறவு வேண்டும் என்பதனைச் சைவ சித்தாந்தம் பெரிதும் வற்புறுத்துகின்றது. '-அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில் லார்'' என்பது சிவஞானசித்தியார். (323). ''சிவ பக்தர்களோடு இணங்குக; அல்லாதா ரோடு இணங்கற்க'' எனக் கட்டளையிடுகின் றது சிவஞானபோதம். அப்பகுதிக்கு உரை வரைந்தருளும்போது, மாதவச் சிவஞானசுவா மிகள், சிவபக்தர் அல்லாதாரோடு இணங்கிய வழி விளையும் தீங்குகளை விளக்குதற்கு,

''தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்,
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறு மாயைகள் தொடங்கின;
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்;
விரத மேபரம் ஆக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்..''

எனவரும் போற்றித் திருவகவல் திருவாசகப் பகுதியையே எடுத்துக் காட்டியுள்ளனர். ''உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீ இருத்தி; அடியேன் நடு வுள் இருவீரும் இருப்பதானால், அடியேன் உன் அடியார் நடுவுள்இருக்கும் அருளைப் புரியாய்'' என மணிவாசகர் இறைவன்பால் வேண்டிக் கொள்வது அனைவரும் அறிந்தது.

(8) செய்தனவே தவமாதல் :

பெரிய புராணத்தில் வரும் சண்டேசுர நாயனார் வரலாறு, நாம் அனைவரும் அறிந் தது. சண்டேசுரர், வேதியரும் தமது தந்தை யும் ஆகிய எச்சதத்தரின் இருகால்களையும் தடிந்தார். அது மிகப்பெரிய குற்றமும் பாவ மும் ஆகும். ஆயினும் சிவபிரான் அவருக்குத் திருவருளைச் சொரிந்து அவரை அண்டர் தமக்கு அதிபன்ஆக்கித் 'தொண்டர்க்கு நாய கமாம்' பேறும் அளித்துச் சிறப்பித்தார். இது பொருந்துமோ? என நம்மனோர்க்கு ஐயம் எழலாம். அதனை நுண்ணிதின் எண்ணி யுணர்ந்த சேக்கிழார் பெருமான்,

''வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்;
இந்த நிலைமை அறிந்தார் யார்?
ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமாம் அன்றோ? சாற்றுங்கால்''

என வினவி விடையளித்துத் தெளிவுறுத்தி முடித்தருள்கின்றார். அப்போது சேக்கிழார் பெருமான் தம் திருவுள்ளத்தில் நினைவு கூர்ந்தது, ''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணையினால் தோள்நோக்கம் ஆடாமோ'' என்பன போன்ற திருவாசகப் பகுதிகளையேயாகும் எனலாம்.

(9) விளையாட்டு :

இறைவன் உலகைப் படைக்கின்றான்; அழிக்கின்றான் என்பதனை, இறையுண்மையை உடன்படும் சமயங்கள் பலவும் கூறும். ஆயினும் இங்ஙனம் இறைவன் உலகைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் எற்றுக்கு? என வினவினால், எல்லாச் சமயங்களும் ஒரேவகையில் விடை தருவதில்லை. தன்பொருட்டு என்றும், பிறர் பொருட்டு என்றும், வீணுக்கு என்றும், விளையாட்டுக்கு என்றும், வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகையில் விடைகள் புகலும்.

(1) தன்பொருட்டு எனின், வரம்பில் இன்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதொரு பயன் இல்லை. *(2)* உயிர்களாகிய பிறர்பொருட்டு எனின், உயிர்களும் இறைவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? என வினா நிகழும். *(3)* அபேதமாயின், அது தன் பொருட்டேயாம். *(4)* பேதமாயின் ,தன்னின் வேறுபட்ட உயிர்களுக்காக அதனைச் செய்வதற்கு ஓர் இயைபும் இல்லை. *(5)* பேதாபேதம் எனின், ஒரு பொருட்கே இரண்டு மாறுபட்ட தன்மை கோடல் பொருந்தாது. *(6)* இனி, வேறு பயன் எதுவும் கருதாமை ஆகிய வீணுக்கு எனின், அது பித்தர் செய்யும் தொழிலோடு ஒக்கும். *(7)* விளையாட்டுக்கு எனின், அஃது அறிவு வளரப் பெறாத இளஞ்சிறார்களின் இயலும் செயலுமாக முடியும். ''விளையாட்டு என்னில் சிறுமழவு இறையது ஆகும்'' என்பர், பௌத்தர். எனவே, இறைவன் உலகத்தைப் படைத்தலும், காத்தலும் அழித்தலும் விளையாட்டிற்காக என்னும் கொள்கை, சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடு அன்று.

ஆயினும், சைவசித்தாந்தச் சான்றோர்கள் ஆகிய அருள்நந்திசிவமும், உமாபதிசிவமும் 'விளையாட்டு' என்னும் கொள்கையை அறவே மறுத்துவிடாமலும், முற்றிலும் தழுவிக் கொள்ளாமலும், ஓரளவில் ஏற்று உடன்பட்டுக் கொள்ளக் காண்கின்றோம். ''முன்னவன் விளையாட்டு என்று மொழிதலும் ஆம்'' என எச்ச உம்மை கொடுத்து உரைத்துத் தழுவிக் கொள்கின்றார் அருள்நந்திசிவம். *(சித்தியார் 56).* ''ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்'' எனக் குறிப்பிடுகின்றார் உமாபதி சிவம் *(சிவப்பிரகாசம், 18).*

இங்ஙனம் இறைவன் முத்தொழில் இயற்றுதல் திருவிளையாட்டின் பொருட்டு என்னும் கொள்கையினை முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவேனும் சைவசித்தாந்த ஆசிரியர்கள் தழுவிக் கொள்ள நேர்ந்தமை,

''காத்தும் படைத்தும் கரந்து விளையாடி...''

''ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்''

எனத் திருவாசகம் திருவெம்பாவைப் பாடல்களில் *(11,12)* மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தலை, நினைவு கூர்ந்தமை பற்றியேயாம் எனத் துணிந்து கூறலாம்.

அற்றேல், முற்கூறிய குற்றம் என்னாவது? எனின், ''ஈண்டு விளையாட்டு என்றது 'ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு' என்புழிப்போல், அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை குறித்தேயாகலின், அதனை அறிவில்லாத இளஞ்சிறார்களின் செயலோடு ஒக்கும் என்றல் பொருந்தாது'' என்று ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள் அரிய முறையில் அமைவுரை கூறியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

(10) திரோதான சத்தி :

சைவசித்தாந்த நூல்களில், திரோதான சத்தி என்பதுபற்றி ஆங்காங்கே பேசப்படும். திரோதான சத்தியாவது, உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களும் தத்தம் தொழில்களைச் செய்யுமாறு ஏவி இயக்குவது. உயிர்கள் உலகியல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் தத்தம்வினைப் பயன்களை நுகர்ந்து தீர்த்தற் பொருட்டு, உலகியல் வாழ்வில் நேரும் நன்மை தீமைகள் ஆகியவற்றை உயிர்கள் உணராதபடி மறைத்துவைப்பது திரோதான சத்தியாகும். ''ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன் தனதோர் சத்தி திரோதன கரியது'' என்பது சித்தியார்.

---

*''Heaven from all creatures hides the book of fate
All but the page prescribed, their present state;
From brutes what men, from men what spirits know,
Or Who could suffer being here below?
The lamb thy riot dooms to bleed today,
Had he thy reason, would he skip and play?
Pleas'd to the last, he crops the flow'ry food,
And licks the hand just rais'd to shed his blood,
Oh, blindness to the future! kindly given
That each may fill the circle marked by Heaven
Who sees with equal eyes, as God of all,
A hero perish, or a sparrow fall.''

—*Alexander Pope.*

இங்ஙனம் மலங்களைத் தொழிற்படும்படி ஏவி இயக்கி, உயிர்களுக்கு மறைப்பினை விளைவிக்கும் திரோதான சக்தியே, உயிர்களுக்கு மல பரிபாகம் வந்தபின்னர் அநுக்கிரக சத்தியாக மாறிநின்று, எல்லா நலங்களையும் விளைவிக்கும். சேயின் குற்றம் கண்டு சினந்து கடிந்து ஒறுக்கும் தாயே, பிறகு அதன் நற்றம், கண்டு உவந்து, அன்புசெய்து நலம்புரிதல் போல்வது இஃது!

இவ்வாறு இறைவனின் திருவருள் ஆகிய அம்மையே, முதற்கண் மறைப்பாற்றலாக இருந்து, பின்னர் அருளாற்றலாக மாறி நலம் விளைவித்தலை,

''முற்சினம் மருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநி பாதம் திகழும் அன்றே''

எனச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் கூறும். (20,32). முதலிற் சினம் மருவித் திரோதாயி என்னும் மறைப்பாற்றலாக இருப்பதே, பிறகு அந்நிலையின் வேறுபட்டு அநுக்கிரக சத்தி என்னும் அருளாற்றலாக மாறி நிற்கும் என்னும் சைவ சித்தாந்த உண்மைக்கு மூலமும் சான்றும், ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' எனவரும் திருவாசகத் திருவெம்பாவை (14)யின் அழகிய தொடரேயாகும்.

(11) ஐந்தொழில்கள் :

உலகமானது அறிவில்லது (அசேதனம், சடம்), அறிவுடையது (சேதனம், சித்து),என இருதிறப்படும். பிற சமயங்கள் கூறும் ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்கள், அறிவும் உயிரும் அற்ற சடவுலகுக்கு மட்டுமே பொருந்தும். சேதனப் பொருள்கள் ஆகிய உயிர்களுக்கு அவை பொருந்தா. ஏனெனில் இறைவன் உயிர்களைப் படைப்பதும் இல்லை; அழிப்பதும் இல்லை. 'என்று நீ அன்று நான்' எனத் தாயுமானவர் பாடுவதற்கு ஏற்ப, உயிர்களும் இறைவனைப் போலவே அநாதி நித்தியப் பொருள்களாகும். ஆதலின் அறிவுடைப் பொருள்கள் ஆகிய உயிர்களின் நலம் கருதியே இறைவன் மறைத்தல் அருளல் ஆகிய இரு தொழில்களைச் சிறப்பு முறையிற் செய்கின்றான்.

சடவுலகத்துக்காக ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும், சித்துலகத்திற்காக மறைத்தல் அருளல் என்னும் இரு தொழில்களும் ஆக, ஐந்து தொழில்களை இறைவன் முறையே இயற்றியருள்கின்றான் என்பது சைவசித்தாந்தம்.

''அழிப்புஇளைப் பாற்றல்; ஆக்கம் அவ்வவர்
கன்ம மெல்லாம்
கழித்திடல்; நுகரச் செய்தல் காப்பது; கன்ம
வொப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பு; அருட்
செய்திதானும்
பழிப்பொழி பந்தம்வீடு; பார்த்திடின் அருளே
எல்லாம்''

—சித்தியார், 57

''ஏற்றஇவை அரனருளின் திருவிளையாட் டாக
இயம்புவர்கள், அணுக்கள் இடர்க் கடல்நின்
றும் எடுத்தே
ஊற்றமிக அருள்புரிதல் ஏதுவாக
உரைசெய்வர்; ஒடுக்கம்இளைப் பொழித்தல்
மற்றைத்
தோற்றம்,மல பாகம்வரல்; காத்தல் போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்த லாகும்;
போற்றலரும் அருள்அருளே யன்றி, மற்றுப்
புகன்றவையும் அருளொழியப் புகலொ
ணாதே!''

இவ்வாறு, இறைவனின் ஐந்தொழிற்றிறம் குறித்துச் சைவசித்தாந்த நூல்கள் விளக்குவதற்கு உரிய, அரிய சான்றாக அமைந்தது, திருவாசகத்திலுள்ள சிறந்த திருவெம்பாவையேயாகும்.

''போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்;
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்
கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடி
கள்,
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்
மலர்கள்''

எனவரும் திருவெம்பாவை (20) வரிகளையே, மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் சைவசித்தாந்தப் பேருரையாசிரியர், இறைவனின் ஐந்தொழிற்றிறத்தினை விளக்கும் சிறந்த பெருமேற்கோளாக எடுத்துக் காட்டியருள்கின்றார்.

(12) ஐந்து மலங்கள் :

உயிர்களை ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்கள் பற்றியுள்ளன. ஆணவ மலம் உயிர்களுக்கு அறியாமையை விளைவித்து நிற்கும். மாயாமலம் உயிர்களுக்குரிய தனு கரண புவன போகங்களைத் தோற்றுவிக்கும். கன்மமலம் உயிர்களின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக அமையும். உயிர்களை இம் மும்மலங்களும் பற்றி நிற்கும் தன்மை, நெல்லில் உமியும் தவிடும் முளையும் பொருந்தியிருப்பது போலும். நெல்,மலங்களால்பிணிப்புண்ட உயிர் (பெத்தான்மா). ஆணவம், நெல்லின்கண் உள்ள உமிபோலும். உமி அரிசியின் வடிவம் தெரியாமல் அதனை முழுவதும்மறைக்கும்; அதுபோல ஆணவமலம் உயிரறிவை முழுவதும் மறைத்து நிற்கும். மாயை தவிடு போலும். தவிடு அரிசியின் இயல்பைச் சிறிது விளக்கும்; அதுபோல மாயாமலம் உயிரின் அறிவைச்சிறிது விளங்கச் செய்யும். கன்மம், நெல்லினின்று தோன்றும் முளை போலும். முளை தோன்றுமிடத்து அரிசியின் தன்மை விளங்காதவாறு போல, கன்ம மலமாகிய நல்வினை தீவினைகள் செய்யப்படுங்கால் உயிர் அவற்றில் மயங்கிக் கிடத்தலால், அதன் இயல்பு விளங்காது நிற்கும். நெல்லினின்று உமியும் தவிடும் முளையும் நீங்கிய நிலையில் உள்ள அரிசி, முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் நீங்கித் தூய்மை அடைந்து வீடுபேறு எய்திய நல்லுயிர் (முத்தான்மா) போலும்.

உயிர்களைப் பற்றி நிற்கும் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களுடன், இறைவன் மாயேயம், திரோதாயி என்னும் வேறு இருமலங்களையும் உயிர்களின் நலங் கருதிச் சேர்த்தருள்கின்றான். இவற்றுள் மாயேயம் என்பது, மாயையினின்று தோன்றி உயிர்களின் அறிவை மயக்குகின்ற தத்துவப் பொருள்களின் தொகுதியாகும். திரோதாயி என்பது, உயிர்களுடன் ஒன்றி மறைந்து நின்று, ஏனைய மலங்கள் தத்தமக்குரிய தொழில் களைச் செய்யுமாறு தொழிற்படுத்தி உயிர் களுக்குப் பக்குவத்தை வருவிக்கும் மறைப்பு ஆற்றல் ஆகும்.

''மும்மலம், நெல்லி னுக்கு முளைபொடு தவிடு மிப்போல்,
மம்மர்செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங் கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்'' (1)

''மாயையின் காரி யத்தை மாயேய மலமதென் றும்
ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வர்; இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்'' (2)

எனவரும் சிவஞானசித்தியார் பாடல்களால், உயிர்களைப் பற்றி நிற்கும் ஐந்து மலங்களின் இயல்பினை நாம் இனிதறியலாம். இவ் ஐந்து மலங்களாலும், உயிர்கள் பிறப்பும் இறப்பும் உற்று, உலகம் நிரயம் துறக்கம் என்னும் மூன்றி லும், கொள்ளி வட்டமும் கறங்கும் போல மாறிமாறிச் சுழன்று உழன்று வருகின்றன.

''மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலஆ ணவம் ஒன்று; முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று;
பகர்மாயை ஒன்று; படர் கன்மம் ஒன்று;
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்று;என்று
ஆகமலம் ஐந்தென்பர்; ஐந்தும் மாறா(து)
அருளென்ப தரிதென்பர் அறிந்து ளோரே.

என்று, சிவப்பிரகாசம் என்னும் சைவசித்தாந்த நூலில், உமாபதிசிவாசாரியரும் இந்த ஐந்து மலங்களின் இயல்பினை விளக்கியிருத்தல் காணலாம்.

இங்ஙனம் சிவஞானசித்தியாரில் அருள் நந்திசிவாசாரியரும், சிவப்பிரகாசத்தில் உமா பதி சிவாசாரியரும் விளக்கியருளிய மலங்கள் ஐந்தினைப் பற்றிய குறிப்பு, சைவத்திருமுறை கள் வேறு எதனினும் (திருமந்திரம் தவிர) காணப்பெறவில்லை. எனவே இக்கருத்துக்கு மூலமும் முதலுமாக விளங்குவது ஒருவகையில் திருவாசகமேயாகும் எனலாம்.

''குலம் களைந் தாய், களைந் தாய்என்னைக் குற்றம், கொற் றச்சிலையாய
விலங்கல் எந்தாய் என்னை விட்டிடுதி கண்டாய்:
பொன்னின் மின்று கொன்றை
அலங்கல்அந் தாமரை மேனிஅப்பா! ஒப்பி லாத வனே!
மலங்கள் ஐந்தாற்சுழல் வன்தயி ரிற்பொரும் மத்துறவே''

என்னும் திருவாசகம் நீத்தல் விண்ணப்பச் செய்யுளில் (29), ''மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற் பொரும் மத்துறவே'' என்னும்பொருள் பொதிந்த வரியே, மலங்கள் ஐந்து என்னும் சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துக்கு அடிப் படையும் ஆதரவுமாய் அமைந்தது என்று கொள்ளலாம்.

(13) ஒன்றாதல்-வேறாதல்-உடனாதல் :

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை உலகிலுள்ள பல்வேறு சமயங் களும் வெவ்வேறு வகைகளில் தத்தமக்கு ஏற்ப விளக்குகின்றன. நமது இந்து சமயம் அதனை 'அத்துவிதம்' என்னும் சொல்லாற் குறிப்பிடு கின்றது. அத்துவிதம் என்னும் இவ்வரும் பெறற் சொற்றொரின் பொருட்டிறம் குறித் துச், சங்கரர் இராமாநுசர் மத்துவர் முதலிய பற்பலரும், தத்தமக்கு ஏற்ப ஒவ்வொரு வகை யில் விளக்கம் செய்துள்ளனர். அவ்விளக்கத் திற்கு ஏற்ப எத்தனையோ பல நூல்களும், கொள்கைகளும், மரபுகளும், சமயப் பாகுபாடு களும் ஏற்பட்டு நிலவி வருகின்றன.

அத்துவிதம் என்னும் இச் சொற்றொட ருக்குச் சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோ ராகிய ஆசிரியர் மெய்கண்டார் பெருமானும், தமக்கு முற்பட்ட தமிழகத்துச் சிவநெறிச் சான்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பொருள் விளக்கம் கண்டுள்ளார்.

''பொய்கண்டார் காணாப் புனிதம்எனும் அத்து வித
மெய்கண்ட நாதன்அருள் மேவும்நாள் எந் நாளோ?''

என வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் சான் றோராகிய தாயுமானவ அடிகள், அத்துவிதம் என்னும் சொற்றொடருக்கு மெய்கண்டார் விளக்கியருளிய பொருளை வியந்து போற்றி யிருத்தல் காணலாம்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை, ஒரு சிலர் பொன்னும் பணியும் போல் அபேதம் என்பார்; மற்றும் சிலர் இரு ளும் ஒளியும்போல் பேதம் என்பர்; வேறுசிலர் சொல்லும் பொருளும் போற் பேதாபேதம் என்பர். இறைவனும் உயிர்களும் தம்முள் பொருட்டன்மையால் இரண்டாயினும், பிரிக்க முடியாத கலப்புத் தொடர்புடையன என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. 'அத்துவிதம்' என்னும் சொற்றொடருக்கு ஆசிரியர் மெய் கண்டார் 'இரண்டு அன்மை' எனப் பொருள் விளக்கினார். பிரிக்க முடியாதபடி சேர்ந்துள்ள

இருபொருள்களின் கலப்பே, அத்துவிதம் எனப் பெறும்.

இவ் அத்துவிதமாகிய கலப்பு, ஒன்றாய் நிற்றலா? வேறாய் நிற்றலா? உடனாய் நிற்றலா? எனின், இம்மூன்றுமாயும் நிற்றலே, அத்துவிதம் என்பது சைவ சித்தாந்தம். உயிர்கள் நிலைத்தற்கு இறைவன் அவற்றோடு ஒன்றாய் நிற்கின்றான். பொருள்களை உயிர்கள் அறியும்படி செய்தற்கு, இறைவன் உயிர்களுக்கு வேறாக நிற்கிறான். பொருள்களை உயிர்கள் நுகரும்படி செலுத்துவதற்கு, இறைவன் உயிர்களோடு உடனாக நிற்கின்றான்.

கலத்தற்றன்மையால் உடலின் உயிர் போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையால் கண்ணிற் சூரியன்போல உயிர்களுக்கு வேறாகியும், உயிர்க்கு உயிராதற்றன்மையால் கண்ணொளியின் உயிருணர்வுபோல் உயிர்களுக்கு உடனாகியும், இறைவன் நிற்கின்றான். உயிர்கள் நிலைத்தல், அறிதல், நுகர்தல் என்னும் மூன்று பயன்களையும் எய்துதற்கு இறைவன் உயிர்களோடு முறையே ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் நிற்பது, இன்றியமையாததாக இருக்கின்றது எனச் சைவ சித்தாந்த நூல்கள் பலவும் சாற்றுகின்றன.

இங்ஙனம் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கின்றான் என்னும் சைவ சித்தாந்த உண்மையினைத் திருவாசகப் பாடல்கள் ஆங்காங்கே சிறப்புறக் குறித்து விளக்குதல் காணலாம்.

''வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையு மாய்க்
கோனாகி யானென தென் றவரவரைக் கூத் தாட்டு
வான்ஆகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்து வனே''

எனவரும் திருவாசகச் செய்யுளில் ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி'' என்றதனால்'' ஒன்றாதலும்; ''உண்மையுமாய் இன்மையுமாய்'' என்றதனால் உடனாதலும்; ''கோனாகி யானெனது என்று அவர் அவரைக் கூத்தாட்டுவான் ஆகி'' என்றதனால் வேறாதலும் ஆகிய மூவகை நிலைகளும் இறைவனுக்கு உரியனவாதல் உணர்த்தப்பெற்றிருத்தல் காணலாம். இவ்வாறே,

''இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை, யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே?''

எனவரும் திருவாசகச் செய்யுளின்கண், ''நீயலாற் பிறிது மற்றில்லை'' என்பது ஒன்றாதலையும்; ''ஒன்றும் நீயல்லை'' என்பது வேறாதலையும்; ''அன்றி ஒன்றில்லை'' என்பது உடனாதலையும் உணர்த்தி நிற்றல் நாம் பெரிதும் உளம்கொளத்தக்கது.

சிவபுராணத்தில் வரும் ''ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க'' என்னும்வரி, அன்பர்கள் அனைவரும் அறிந்தது. இதன்கண் 'ஏகன்' என்பது ஒன்றாதலையும்; 'அநேகன்' என்பது வேறாதலையும்; 'இறைவன்' என்பது உடனாதலையும் முறையே குறித்து நிற்கின்றன, என்று கொள்ளுதல் பொருந்தும். பொருத்தம் மிக்க இப் பொருட் குறிப்பின் சிறப்பினை உணர்ந்து வியந்தே, இத் திருவாசக வரியினைப் பெரிதும் அடியொற்றி,

''ஏகனும் ஆகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனான்என்று உந்தீபற
நம்மையே ஆண்டான் என்று உந்தீபற''

என்று திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் என்னும் சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த சிலவற்றால், திருவாசகம் சைவசித்தாந்தம் என்பவற்றின் சிறப்பும், அவைகள் இரண்டற்கும் உரிய தொடர்பும் பிறவும் பற்றி, ஓரளவேனும் யாவரும் இனிதுணரலாம். திருவாசகம் என்னும் தெய்விக இலக்கியமும், சைவசித்தாந்தம் என்னும் தமிழகத் தெய்விகத் தத்துவக் கொள்கையும், தமிழ் மக்களாகிய நாம் பெற்றுள்ள சிறந்த பெருஞ் செல்வங்களாகும். இத்தகைய பல பெருஞ் சிறப்புகளை உடைய நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாக அமைந்து விளங்குகின்றது. ''ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்'' எனத் திருமூலர் பாடுவது போல, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ்மொழியின் அகலமும் நீளமும் ஆழமும் ஆய்ந்து இன்புற விழைவோர் அனைவரும், சைவத் திருமுறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலப் பெருங் கவிஞர் பாடுவது போல,

''எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ,
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே''

—ந.ரா. முருகவேள்

என்று, நாமும் நமது சைவ சித்தாந்தம் பற்றிப் பாடி மகிழலாம். கிரேக்க நாட்டுத் தத்துவஞானியாகிய தேல்சு (Thales) என்பார், தாம் ஒரு விலங்காக அல்லாமல் மனிதனாகவும், பெண்ணாக அல்லாமல் ஆணாகவும், கானகனாக அல்லாமல் கிரேக்கனாகவும் பிறந்ததற்குப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்றார். அதுபோல நாமும் ''நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து'' தமிழராகவும், சைவராகவும், சைவசித்தாந்தச் செந்நெறியாளராகவும் பிறக்கப்பெற்றமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழலாம்.

''மனிதனாய், ஆணாய்க், கிரேக்கனாய் பிறந்த
மாட்சிமைக்கு அறிஞர்தாம் ஒருவர்
தனிமிக மகிழ்ந்தார்; நலம்மிகு தமிழன்,
நற்சைவன், சைவசித்தாந்தி,
எனஇவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்
துனியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுய்வாம்''

—ந.ரா. முருகவேள்

சிவபிரானின் திருவுருவங்கள்

சிவபிரானின் நடத்த வடிவங்கள் ஆகிய மாகேசுவர வடிவங்கள் இருபத்தைந்து என நூல்கள் கூறும். அவைகள் வருமாறு :—

1. நடராசர்
2. சந்திரசேகரர்
3. உமாமகேசுவரர்
4. இடபாரூடர்
5. கல்யாண சுந்தரர்
6. பிட்சாடனர்
7. காமாரி
8. காலாரி
9. திரிபுராரி
10. சலந்தராரி
11. மாதங்காரி
12. வீரபத்திரர்
13. அரியர்த்தர்
14. அர்த்தநாரீசுவரர்
15. கிராதர்
16. கங்காளர்
17. சண்டேசானுக்கிரகர்
18. நீலகண்டர்
19. சக்கரப்பிரதர்
20. கசமுகாநுக்கிரகர்
21. சோமாஸ்கந்தர்
22. ஏகபாதர்
23. சுகாசனர்
24. தட்சிணாமூர்த்தி
25 இலிங்கோற்பவர்

— ஆசிரியர்.

பக்தியின் ஒன்பது வகைகள்

பாகவதம், நாரத பக்தி சூத்திரம் ஆகிய நூல்கள் பக்தியினைப் பின்வருமாறு 9 வகைப்படுத்தி விளக்கிக் கூறுகின்றன.

1. யாதனம் — கோயில்கள் எடுப்பித்தல், திருநந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் செய்தல்.
2. சிரவணம் — இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத்தக்கவர்கள் சொல்லக் கேட்டு மகிழ்தல்.
3. கீர்த்தனம் — இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், இசையுடன் பாடல்களைப் பாடுதல்.
4. அர்ச்சனம் — நீராட்டிப் பூச்சூட்டி நிவேதனம் படைத்துப் பூசித்தல்.
5. ஸ்துதி — இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது பாடுதல்.
6. வசனம் — இறைவனின் அருட்பெருமைகளை எடுத்துப் பலருக்கும் கூறிவிளக்குதல்
7. வந்தனம் — இறைவனை அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலிய வகைகளிற்பணிந்து வணங்குதல்.
8. ஸ்மரணம் — இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்.
9. தியானம் — சுகாசனம் முதலிய நிலைகளில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப்படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை வழிபடுதல்.

—ஆசிரியர்

வேதாந்தம்

"வேதாந்த வித்தகர்"

திரு. டாக்டர் டி. எம். பி. மகாதேவன், M.A., PH.D.

தமிழாக்கம் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

வேதாந்தம் :

வேதமானது கருமகாண்டம் எனவும், ஞானகாண்டம் எனவும், இருதிறப்படும். இவற்றுள் கருமகாண்டம் பூர்வமீமாம்சம் எனவும், ஞானகாண்டம் உத்தரமீமாம்சை அல்லது வேதாந்தம் எனவும் பெயர்பெறும். வேதத்தின் முடிவுப் பகுதிகளாகிய உபநிடதங்களினின்று பெறப்படும் தத்துவக் கருத்துக்களை ஆராய்ச்சி செய்து விளக்குவது, வேதாந்தமாகும். வேதத்தின் அந்தமாக விளங்கும் உபநிடதங்களைத் தழுவிய எல்லாத் தத்துவக் கொள்கைகளுமே, 'வேதாந்தம்' என்று வழங்கப்படுவதற்கு உரிமையுடையன எனினும், கேவலாத்வைதம்-ஏகான்மவாதம்-மாயாவாதம்-பிரச்சின்ன பவுத்தம் என்றெல்லாம் பிறராற் சுட்டப்பெறும் சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கே, வேதாந்தம் என்னும் பெயர் பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகின்றது.

வேதவியாசர் :

ஒவ்வொரு தத்துவ நெறிக்கும் ஓர் அடிப்படைச் சூத்திர நூல் அமைந்துள்ளது. சூத்திரநூல்கள், ஒவ்வொரு குறிப்பிட்ட தத்துவத்தின் கொள்கைகளைத் தொகுத்து வரிசைப்படுத்தித் தெளிவான முறையில் விளக்குகின்றன. அம்முறையில் வேதாந்த சூத்திரம் என்பது, பாதராயணர் எனப்படும் வியாசர் இயற்றியதாகும். ஒவ்வொரு துவாபர யுகத்திலும், திருமால் வியாசராகத் தோன்றி, வேதங்களைத் தொகுத்து வகைப்படுத்துகின்றார் எனப் பெரியோர்கள் கூறுவர். வியாசர் என்னும் சொல், தொகுத்தவர் -ஒழுங்குபடுத்தியவர் எனப் பொருள்படும். வேதங்களைத் தொகுத்து ஒழுங்குபடுத்தியதனால், பாதராயணருக்கு வேதவியாசர் எனப் பெயர் ஏற்பட்டது. இந்த யுகத்தின் வியாசருக்குக் கிருஷ்ணத்துவைபாயனர் என்பது பெயர். வியாசர், பராசரமுனிவருக்கும் சத்தியவதிதேவிக்கும் தோன்றிய மைந்தராவர். அவர் கருமை நிறம் வாய்ந்தவராகவும், ஒரு தீவில் பிறந்தவராகவும் இருப்பதனால், அவருக்குக் கிருஷ்ணத்துவைபாயனர் என்னும் காரணப்பெயர் ஏற்பட்டது. அவர் நெடுங்காலம் பதரிகாசிரமத்தில் வாழ்ந்ததனால், அவருக்குப் பாதராயணர் என்றும் ஒரு காரணப்பெயர் வழங்குவதாயிற்று. அசுவத்தாமர், மகாபலி, அனுமன், விபீடணர், கிருபர் பரசுராமர் என்பவர்களுடன், இவரும் ஒரு சிரஞ்சீவி (நெடுங்காலம் வாழ்பவர்) என்று கருதப்பெறுகின்றார்.

வியாசர் வேதங்களை நான்காகப் பகுத்தார். அவைகள் முறையே இருக்கு, எசுர், சாமம் அதர்வணம் எனப்படும். வியாசர் இந்த நான்கு வேதங்களையும் முறையே பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்னும் நான்கு முனிவர்களுக்குக் கற்பித்தார். வேதங்களைத் தொகுத்து வகுத்தது மட்டுமன்றி, மகாபாரதம் என்னும் இதிகாசத்தையும் வியாசர் இயற்றினார். அது ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்றது. இவைகளை மட்டுமேயன்றி, வியாசர் பதினென் புராணங்களையும் கூட, இயற்றியருளினார். வேதம் தலைவனின் கட்டளை (பிரபுசம்மிதை) போன்றது; இதிகாசம் நண்பனின் நயவுரைகள் (சஇருத் சம்மிதை) போன்றது; புராணங்கள் காதலியின் கனிவுரைகள் (காந்தா சம்மிதை) போன்றவை. இதிகாசங்களும் புராணங்களும், வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் உரிய விளக்கவுரைகள் போல்வனவாகும். அவைகள், எளிய பொதுமக்கள் வேதத்தின் அரிய கடினமான பொருள்களை விளங்கிக் கொள்ளத் துணை புரிகின்றன.

வேதாந்த சூத்திரம் :

வியாசர் இயற்றிய வேதாந்த சூத்திரம் பிரமசூத்திரம் எனவும் வழங்கப்பெறும். இவைகள் வேதாந்த தத்துவக் கொள்கையின் அடிப்படை நூல்களாகும். உபநிடதங்கள் சுருதிப் பிரஸ்தானம் எனவும், பகவத்கீதை ஸ்மிருதிப் பிரஸ்தானம் எனவும், வேதாந்த சூத்திரம் நியாயப் பிரஸ்தானம் எனவும் கூறப்பெறும். பிரமசூத்திரத்திற்குச் சாரீரகசூத்திரம், பிட்சு சூத்திரம், உத்தரமீமாம்ச சூத்திரம் எனவும், வேறு பெயர்கள் வழங்கும். வேதாந்த சூத்திரம் நான்கு அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயமும், நான்குபாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாதமும், பல அதிகாரங்களை உட்கொண்டது. ஒவ்வொரு

அதிகரணமும், ஒன்று அல்லது பல சூத்திரங்களால் அமைந்தது. வேதாந்த சூத்திரம் 192 அதிகரணங்களைக் கொண்டது. அதன் சூத்திரங்கள் 555 ஆகும்.

1. சமன்வயம் :

வேதாந்த சூத்திரத்தின் நான்கு அத்தியாயங்களும், சமன்வயம் அவிரோதம் சாதனம் பலன் என்பனவற்றை முறையே விவரிக்கின்றன. சமன்வயம் என்னும் முதல் அத்தியாயம் பிரமப்பொருளைப் பற்றி விவரிக்கின்றது. பிரமம் அல்லது ஆத்மாவைப் பற்றிக்கூறும் சூத்திரங்களின் பொருளை உணர்வதில், எத்தகைய சிக்கலும் நேர்வதில்லை. ஆனால் உபநிடதங்களின் பல பகுதிகள், பிரமம் ஆத்மா என்பனவற்றை மட்டும் குறிப்பிடவில்லை. 'ஆகாசம்' என்னும் சொல், வெறும் வானத்தைக் குறிக்காமல், பல இடங்களில் பரம்பொருளைக்குறித்து வருகின்றது. ஏனெனில் எல்லாப் பொருள்களும் அதிலிருந்தே தோன்றி, அதிலேயே ஒடுங்குகின்றன. இவ்வாறே 'பிராணன்' என்று சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் சொல், பிராணவாயுவைக் குறிக்காமல், எல்லாப் பொருள்களும் சென்று ஒன்றுகின்ற பிரமத்தைக் குறிக்கின்றது. இங்ஙனமே அதே உபநிடதத்தில் வரும் 'மனம்' அல்லது 'மனோமயம்' என்பதும், மனத்தைக் குறிக்காமல், மனத்தால் தியானிக்கப்படும் பொருளைக் குறிக்கின்றது. அது பிரமப்பொருளாக இருக்க முடியுமேயன்றி, தனிப்பட்ட ஆத்மாவாக இருக்க இயலாது.

இத்தகைய எல்லா இடங்களிலும், ஒரு சொல்லின் பொருளை உணர்த்துவன, அது வழங்கப்பெற்றுள்ள இடமும் குறிப்புமேயாகும். ஆதலின் உபநிடதங்கள் ஆகிய வேதாந்தத்தின் உண்மைக் கருத்துக்களைச் சிக்கறுத்துத் தெளிவுபடுத்துவதன் பொருட்டே, வியாசர் வேதாந்த சூத்திரம் இயற்றியருளினார். இத்தகைய பெயர்களால் குறிப்பிடப்பெறும் பொருள்தான் பிரமம். உலகம் தோன்றுவதற்கு மூலகாரணம் எதுவோ, அதுவே பிரமம் எனப்படுகின்றது. அது சத்து சித்து ஆனந்தம் என்னும் மூவியல்புகளுடையதாகத் திகழ்கின்றது. அதுவே தியானத்திற்குரிய பொருள். அதுதான் ஆன்மிக விடுதலை பெற்ற முத்தர்களால் அடையப்படும் அநுபூதிப் பொருளாகும் என்றெல்லாம், வேதாந்த சூத்திரம் பிரமத்தின் இயல்புகளை விளக்கிக் கூறுவதனால், அதற்குப் பிரமசூத்திரம் என்றும் ஒரு பெயர் வழங்குவதாயிற்று.

சாங்கிய தத்துவம், உலகமானது மூலப் பிரகிருதியினின்று தோன்றுகின்றது என்று கூறுகின்றது. ஆனால் பாதராயணர் என்னும் வியாசர், இக்கொள்கையைத் தம்முடைய வேதாந்த சூத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் விரிவாக மறுக்கின்றார். சாங்கிய தத்துவக் கொள்கை, உபநிடதங்களின் கருத்துக்களுக்கு மாறாக உள்ளது என்பது, சங்கரரின் விளக்கம். 'அவ்வியக்தம்', 'மகத்' என்று உபநிடதங்களில் வரும் சொற்கள், சாங்கிய தத்துவம் கூறும் தத்துவக் கூறுகளைக் குறிக்கவில்லை. சுவேதாசுவதர உபநிடதம், செம்மை வெண்மை கருமை நிறங்களை உடையதாகக் குறிப்பிடும் அஜம் என்பதுகூட, சாங்கிய தத்துவம் கூறும் மூலப் பிரகிருதியைக் குறிப்பதன்று.

உபநிடதங்களின் கூற்றுப்படி உலகத்திற்கு மூலகாரணம், அறிவுப் பொருள் ஆகிய சேதனம் ஆதலின், சாங்கியம் கூறும் அறிவற்ற அசேதனம் ஆகிய பிரதானம் என்பது, உலகிற்கு மூலகாரணம் ஆகாது. சாங்கிய தத்துவ நூல் கூறும் பிரதானம் என்பது, கைவிடுவதற்குரியது; உபநிடதங்கள் கூறும் உலகமூலகாரணம் ஆகிய பிரமம், அடைதற்குரியது. ஆதலின் உலகிற்கு மூலகாரணம், பிரதானம் என்பது அன்று. உபநிடதங்கள் கூறும் பிரமாத்மானாகிய பரம்பொருளே, உலகத்தின் தோற்றத்திற்கு மூல அடிப்படைக் காரணம் என்று, இப்பகுதியில் பாதராயணர் விளக்க முயல்கின்றார்.

2. அவிரோதம்:

வேதாந்த சூத்திரத்தின் இரண்டாவது அத்தியாயம், அவிரோதம் என்பது என்று முன்னர்க் கண்டோம். இதன்கண், வேதாந்தக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துக்களையும், தடைகளையும் பாதராயணர் மறுத்துரைக்கின்றார். இவ்வத்தியாயத்தில், மேற்கூறிய சாங்கியக் கொள்கையே பெரிதும் மறுக்கப்படுகின்றது. ஏனெனில், அதுதான் ஏனைய கொள்கைகளிலும், முதன்மையும் சிறப்பும் உடையதாக விளங்குகின்றது. அதனை மறுத்துவிட்டால், அதனைச் சார்ந்துள்ள பிற கொள்கைகள் எல்லாம், எளிதில் தாமாகவே மறுக்கப்பட்டுவிடும். உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமாகச் சாங்கியம் கூறும் பிரதானம் என்பது, அறிவற்ற சடப்பொருள். ஆனால் இவ்வுலகமோ, அறிவினால் இயக்கப்பெறும் ஒருவகை வடிவமும் ஒழுங்கும் இயக்கமும் உடையதாகத்திகழ்கிறது. ஆதலின் உலகமானது அறிவற்ற அசேதனப் பொருளால் தோற்றுவிக்கப்பட்டது ஆகாது. உலகம் எங்ஙனம் இயங்கத் தொடங்குகின்றது? எவ்வாறு இயங்காமல் நின்று விடுகின்றது? என்பதனை விவரித்தல் இயலாது.

அணுக்களும், அதிர்ஷ்டம் என்னும் காண முடியாத ஓர் ஆற்றலும், உலகின் படைப்பிற்குக் காரணம் என்று வைசேடிகம் கூறுகிறது. இதுவும் ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. காணப்படாத ஆற்றல் என்பது, அணுக்களிலோ அல்லது உயிர்களிலோ அமைந்திருப்பதாகக் கொள்ளினும் அணுக்களின் இயக்கம் எவ்வாறு நிகழ்கிறது! என்று அறிய இயலவில்லை. அணுக்கள் அறிவற்றவை. காணப்படாத ஆற்றல் என்பதும் அத்தகையதே. இவைகள் எவ்வாறு உலகின் படைப்

பிற்குக் காரணமாதல் கூடும்? அணுக்கள் அவயவப் பகுப்புடையன. அநித்தியமாக இருப்பன. அவைகளால் உலகம் தோன்றியது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

பௌத்தர்கள், உலகப் படைப்பிற்கு ஒன்றோடொன்று இணைந்து, சங்கிலிபோன்ற ஒருவகைத் தொடர்பு, காரணம் என்கின்றனர். அதனை ஒத்துக் கொண்டாலும், இக்காரண காரிய முறைக்கு அவர்கள் கூறும் கணபங்க வாதம் முரண்படுகின்றது.

சமணர்கள், ஒன்றற்கொன்று முரண்பட்ட ஒற்றுமையிலும் வேற்றுமையிலும், நித்தியத்திலும் அநித்தியத்திலும், நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால், ஒரே பொருளில் இத்தகைய இயற்கைக்கு மாறுபட்ட பண்புகள் எங்ஙனம் அமைந்திருத்தல் கூடும்? மேலும், சமணர்கள் உயிருக்குப் பெருமை சிறுமை முதலிய அளவுகளைக் கூறுகின்றனர். இதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அளவுடைய பொருள்களெல்லாம் சடப்பொருள்கள் ஆகும். அவைகள் அழிந்துபடுவன. அவைகள் ஒருபோதும் அறிவுடைய பொருள்கள் ஆகா. இத்தகைய பல முரண்பாடுகள் காணப்படுவதனால், சமணர்களின் கொள்கையும் ஏற்கத் தகுந்ததாக இல்லை.

இக்கொள்கைகளெல்லாம் பொருந்தாமையினால், வேதாந்தமானது பிரமம்தான் முடிவான பரம்பொருள், அதுதான் உலகின் நிலைக்களம் என்று கருதுகிறது. சில கொள்கையாளர்கள், கடவுள் உலகத்திற்கு நிமித்த காரணர் (Efficient Cause) ஆக மட்டும் விளங்குகின்றார் என்கின்றனர். அது தக்க பொருத்தமான கருத்தாகத் தோன்றவில்லை. ஏனெனில், அங்ஙனம் கொண்டால், கடவுள் என்பவர் ஒரு வரையறைப்பட்ட, குறைபாடு உடைய பொருளாய் முடிவர். கடவுளிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன. இவ்வுலகின் படைப்பு, கடவுளால் முயன்று வருந்திச் செய்யப்படுவதன்று. உலகப் படைப்பு கடவுளுக்கு ஒரு விளையாட்டுப் போன்ற எளிய செயலேயாகும். பாலானது தானாகவே தயிராகப் பரிணமித்தல் போல, பிரமமானது தானாகவே உலகமாகப் பரிணமிக்கின்றது. படைப்பு என்பது, புதியதாகத் தோற்றுவிக்கப்படுவதொன்றன்று. ஓர் ஆடை மடிக்கப்படுவதும் விரிக்கப்படுவதும் போலவே, இவ்வுலகமும் ஒடுங்குகின்றது, வெளிப்படுகின்றது. உண்மையில், உலகமானது பிரமத்திற்குத் தனியே இருக்கவில்லை; உலகம் பிரமத்திற்கு வேறானதன்று; காரியம் என்பது காரணத்தின் வேறுபட்டதன்று. வேறுவகையாகச் சொல்லவேண்டுமாயின், காரணம் ஒன்று மட்டுமே உண்மையானது. அக்காரணமாகிய பிரமமே உலகமாகின்றது.

உலகமானது பிரமத்தின் தோற்றமே எனின், தனிப்பட்ட சீவனுக்கும் பிரமத்திற்கும் உள்ள உறவும் தொடர்பும் யாவை? சீவனும் கூட ஒரு படைக்கப்பட்ட பொருளா? அல்லது பரிணாமமா? சீவன் கடவுளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது என்பது, பாஞ்சராத்திரக் கொள்கை. வாசுதேவரிடமிருந்து சங்கர்ஷணர் தோன்றினார் எனப் பாஞ்சராத்திரம் கூறுகின்றது. பாதராயணர் இக்கொள்கையை மறுக்கின்றார். ஆன்மாவுக்குத் தோற்றம் என்பது இருத்தல் இயலாது. ஒரு பொருளும் அதன் நிழலும் போல, ஆன்மாவானது பிரமத்தோடு தொடர்புடையது. பிரமம்தான் தொழிற்படுகின்றது, அநுபவிக்கின்றது, பல பிறவிகளை எடுக்கின்றது, முத்திபெற முயற்சிக்கின்றது, முத்தியை அடைகின்றது.

3. சாதனம் :

வேதாந்த சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயம், சாதனத்தைப் பற்றியது. இஃது, ஆன்மாவானது உடல் அழிந்த பிறகு எந்தெந்த வழிகளில் பயணம் புரிகின்றது என்பது பற்றி ஆராய்கிறது. உடம்பின் வேறாக உயிர் என்பது ஒன்றில்லை, என்று கூறும் சார்வாகர்களின் கொள்கை ஏற்புடையதன்று; ஏனெனில் இறந்துபோன உடலின்கண், அறிவின் அறிகுறிகள் காணப்படுவதில்லை. உடல் அழிந்தபிறகு ஆன்மாவானது, தேவயானம் எனப்படும் தேவர்களின் பாதையிலோ, அல்லது பிதிர்யானம் எனப்படும் இறந்த முன்னோர்களின் பாதையிலோ செல்லக்கூடும். இங்ஙனம் செல்லுங்கால், ஆன்மாவானது தன்னோடு இருந்த இந்திரியங்களையும், அந்தக்கரணங்களையும், நுண்ணிய நிலையில் உடன் கொண்டு செல்லுகின்றது.

இப்பிறவியில் செய்த தியானத்தின் பயனாகத் தேவயானத்தின் மூலம் பிரம்மலோகத்திற்கும், வேள்வியின் பயனாகப் பிதிர்லோகத்திற்கும் ஆன்மா செல்லுகின்றது. இவ்விரண்டிலும் செல்லாத உயிர்கள், பிறந்தும் இறந்தும் உழலுகின்றன. தேவலோகம் சென்ற உயிர்கள் தமது நல்வினைப் பயன்களை நுகர்ந்து முடித்தபின், இவ்வுலகிற்கு மீளவும் வந்து பிறக்கின்றன. ஆன்மாவானது எவ்வாறு இவ்வுலகத்திற்கு வருகின்றது? எவ்வாறு தாயின் கருப்பையில் நுழைகின்றது? எவ்வாறு புதிய உடலைப் பெற்று அதனுள் இயங்குகின்றது? என்பவைகளை, இப்பகுதியின் சூத்திரங்கள் கூறுகின்றன.

ஒரு பிறவியில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதுகூட, ஆன்மாவானது சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி (நனவு கனவு உறக்கம்) என்னும் வெவ்வேறு நிலைகளை அடைகின்றது. வெவ்வேறான இந்நிலைகளிலெல்லாம், ஓர் உயிரே தொடர்ந்து நின்று விளங்குகின்றது. பிரமத்துடன் அத்துவிதமாகக் கலக்கும்போதே, உயி

ரின் பிறப்பு இறப்புகள் ஆகிய நிலைகள், முடிவுறுகின்றன.

பிரமப் பொருள், தன்னிலையில் உருவமும் குணமும் அற்றது. உபநிடதங்களில் சில இடங்களில் பிரமத்திற்குக் குணங்கள் கூறப்படுகின்றன. அங்ஙனம் கூறப்படுதல், உபாசனை ஆகிய தியானம் செய்வதின் பொருட்டேயாகும். ஒளிக்கு உருவம் இல்லாதது போலப் பிரமத்திற்கும் உருவம் இல்லை. பிரமம் என்பது அறிவே வடிவமான சுத்த சைதன்யப் பொருள் ஆகும். சூரியன் ஒன்றே பல நீர்க்கலங்களில் பிரதிபலிப்பதுபோல, பிரமமும் பல சீவர்களைப் போலக் காட்சி யளிக்கின்றது. பிரமத்தின் இயல்பினை இத்தகையதென்று வரையறுத்து ஆராய்ந்து கூறுதல் இயலாது. அதனாலேயே தத்துவசாத்திர நூல்கள் பிரமத்தினை ''அல்லை ஈது'', ''அல்லை ஈது''–''நேதி நேதி'' என்று குறிப்பிடுகின்றன.

சீவனின் அவிச்சை அல்லது அறியாமை அழிகின்றபோது, பிரம்மத்துடன் தான் அத்துவிதமாகக் கலந்திருத்தலைச் சீவன் அறிகின்றது. இந்தப் பிரம அத்துவிதக் கலப்பினை உணர்ந்து கொள்ளும் உபாயங்களாகவே, வித்தைகள் எனப்படும் பல்வேறு தியானமுறைகள், நூல்களிற் கூறப்பட்டுள்ளன. வித்தைகள் பலவேறு வகைப்பட்டிருப்பினும் அவைகளெல்லாம் ஒரே பயனையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஒரு வித்தையின் இயல்பு, அதனைச் செய்யும் முறை ஆகியவை, அது கூறப்படும் இடம் குறிப்பு என்பவற்றைக் கொண்டே, முடிவு செய்யப்பெறுதல் வேண்டும். ஒருவர் எல்லா வித்தைகளையும் செய்ய மேற்கொள்ளவேண்டும் என்பது இல்லை. ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செய்தலே போதுமானது.

வித்தைகளெல்லாம் சகுணப் பிரம்ம உபாசனையாகும். சகுண உபாசனை செய்பவர்கள் இறப்பிற்குப் பின் தேவயானத்தில் செல்வார்கள். நிர்க்குணப் பிரம்ம உபாசனை செய்பவர்கள், இவ்வுலகிலேயே பிரம்ம நிலையை அடைவார்கள். சந்நியாச ஆச்சிரம நிலையில் உள்ளவர்கள், ஞானம் பெறுதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர். அவர்கள் எத்தகைய சடங்குகளும் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏனையவர்களுக்கே கிரியைகள் ஆகிய சடங்குகள் விதிக்கப் பட்டுள்ளன. ஏனைய நிலையில் உள்ளவர்கள், தத்தமக்கு விதிக்கப்பட்ட கிரியைகள் ஆகிய சடங்குகளைச் செய்தற்கு உரியவராவர். அவைகள் மன அழுக்குகளைப் போக்கி, மனத்தூய்மை பெறுதற்குத் துணைபுரிகின்றன. ஞானநெறியைப் பின்பற்றுபவர்கள், இறுதியில் முத்திநிலையை அடைகின்றார்கள். முத்திநிலையை இறந்தபின்பே அல்லாமல், இவ்வுலக வாழ்க்கையிலேயேகூடப் பெறலாம். முத்திநிலையில் உயர்வு தாழ்வுகளோ, வேறுபாடுகளோ இல்லை. முத்திநிலை என்பது பிரம்மநிலையே யாகும்.

(4) பலன் :

வேதாந்த சூத்திரத்தின் நான்காவதுபகுதி, 'பயன் அத்தியாயம்' என்பது. அது பிரம்ம ஞானத்தினால் எய்தும் பலன்களைப் பற்றி முதன்மையாக விவரித்துரைக்கின்றது. இடையிடையே வேறு பல துணைச் செய்திகளும் கூட, அதன்கண் விளக்கப் பெறும். சகுண உபாசனை புரிவோர் தேவயானத்தில் செல்வதும், அப்பயணத்தின் பல்வேறு நிலைகளும், பருவுடல் அழிந்தபின் ஆன்மா நுண்ணுடல் கொண்டு செல்வதும், இருதய வட்டத்தினின்று சுழுமுனைநாடி வழியாக ஆன்மா சூரியனின் கதிர்களைத் தொடர்ந்து பிரமலோகம் செல்வதும், அங்கங்கே அதுவதற்குரிய தேவதைகள் ஆன்மாவை வழிநடத்திச் செல்வதும் போன்ற பல செய்திகள், இப்பகுதியில் கூறப்படுகின்றன. பிரமத்தை உணர்வதன்மூலம் எல்லாப் பாவங்களும் நீங்குகின்றன. பிறப்பு இறப்புகள் ஒழிகின்றன. இவ்வுலகில் சீவித்துக் கொண்டிருக்கும்போதே பிரம்மத்தை உணர்ந்த சீவன்முக்தனின் உடல்,' பிராரத்த கன்மம் நீங்கும்வரையில் உள்ளது. பிராரத்த கன்மம் நீங்கியதும் உடலைவிடுத்துச் சீவன்முக்தன் பிரமநிலையினை அடைகின்றான்.

இவ்வாறு வேதாந்த சூத்திரம், பல்வேறு செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் சிறப்புற விளக்குகின்றது. பாதராயணர் என்னும் வேத வியாசருக்கு முன்னரே வேதாந்தத்தை விளக்கியவர்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும். அஸ்மராத்தியர், ஆதுலோமி, கார்ஷ்ணாஜினி, காசகிருஷ்ணர் என்பவர்களின் பெயர்களைப் பாதராயணர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். ஆயினும் அவர்களின் நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

பாதராயணரின் வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கரர் உரை வகுத்துள்ளார். மற்றும் பாஸ்கரர், யாதவப் பிரகாசர், இராமாநுசர், கேசவர், நீலகண்டர், மத்துவர், பலதேவர், வல்லபர், விக்ஞானபிட்சு, என்னும் பற்பலர் பேருரைகள் இயற்றியுள்ளனர். இப் பேருரைகளுக்கு மற்றும் துணைவிளக்கவுரைகள் பலப்பல எழுதப்பெற்றுள்ளன. சங்கரரின் சம்பிரதாயத்திலேயே, சங்கரபாஷ்யத்திற்கு வாசஸ்பதி என்பவர், பாமதி என்னும் விளக்கவுரை இயற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து கல்பதரு, பரிமளம் என்னும் உரைகள் எழுந்துள்ளன. பத்மபாதர் சங்கரபாஷ்யம் குறித்து, பஞ்சபாதிகம் என்னும் விளக்கவுரை எழுதியுள்ளார். அதற்கு விவரணம் என்றும், தத்துவதீபனம் என்றும், விளக்கவுரைகள் தோன்றியுள்ளன.

இங்ஙனமே வேதாந்தம் பற்றியஒவ்வொரு சம்பிரதாயத்திலும் பற்பல பேருரைகளும், துணைவிளக்க உரைகளும், ஏராளமாகஇயற்றப் பட்டுள்ளன. தமிழில் தத்துவராயர் அருளிய பாடல்களும், தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்யநவநீதம் என்னும் நூலும், பிறவும் ,வேதாந்தக் கருத்துக்களை விளக்குவனவாகும்.

***

இளங்கோ அடிகள்

'செந்தமிழ்ச் செல்வர்'

திரு கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.,

வஞ்சிமா நகரத்தில் அரண்மனையில் அரசவைக் கூடத்தில் சேர அரசன் நெடுஞ் சேரலாதன் அமர்ந்திருந்தான். அவனுடைய இருமருங்கும் அவனுடைய புதல்வர் இருவரும் அமர்ந்திருந்தனர். இளவரசு பட்டம் சூடிய செங்குட்டுவன் வலப்பக்கத்திலும், பெருநம்பிப் பட்டம் சூடிய இளங்கோ இடப்பக்கத்திலும் வீற்றிருந்தனர். அவையில் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் பெருங்குடி மக்களும் இருந்தார்கள்.

அப்போது ஒரு நிமித்திகன் வந்தான்; அங்க அடையாளங்களைக் கொண்டு வருங் காலத்தைச் சொல்லும் ஆற்றல் இருப்பதாகச் சொல்லிக்கொண்டான்; பிறகு இளங்கோவைப் பார்த்து, ''இவருடைய உறுப்பு நலன்களைக் கண்டால் இவரே மன்னர் பிரானுக்குப் பிறகு அரியணை ஏறும் பேறு பெறுவார் என்று தோன்றுகிறது'' என்றான். அதைக் கேட்ட யாவரும் திடுக்கிட்டனர். மூத்தவன் இருக்க இளையவன் அரசனாவது முறையன்றே! அரச னும் சற்றே திகைப்படைந்தான். செங்குட்டுவ னுக்கோ கண்கள் சிவந்தன. அவன் தன் தந் தையை நோக்கினான். 'என்ன இது? நீங்கள் யாருக்கு அரசுரிமை வழங்கப் போகிறீர்கள்?' என்று கேட்பது போல இருந்தது அந்தப் பார்வை.

சிறிது நேரம் யாவரும் ஒன்றும் பேசத் தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தனர். அப் பொழுது கணீர் என்று ஒரு குரல் எழுந்தது. இளங்கோவே எழுந்து நின்று, ''மன்னர் பெரு மானே'' என்று அழைத்த குரல் அது. அரசன் அவரை நோக்கினான். செங்குட்டுவன் பார்வை யும் அவர்மேல் பதிந்தது. மற்றவர்களும் அவ ரையே பார்த்தார்கள்.

''இதோ, இந்தச் சோதிடர் சொற்களைப் பொய்யாக்கி விடுகிறேன். எனக்கா இந்த அர சாட்சி கிடைக்கும் என்று சொன்னார். நான் இந்தக்கணத்தில் துறவு பூண்பதாகச் சபதம் செய்கிறேன். என் தமையனார் நெஞ்சில் ஐயம் இருந்தால் இப்போதே அது ஒழியட்டும். நான் இன்று முதல் துறவி. எனக்கும் இந்த அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை''.

''என்ன இது! என்ன இது!!'' என்று யாவ ரும் திணறிக்கொண்டு கேட்டார்கள். சோதி டன்கூட ஒன்றும் தெரியாமல் விழித்தான். இளங்கோ, மேலும் பேசலானார்; ''இந்தச் சேரநாட்டரசு எனக்குப் பெரிதன்று. முடிவே இல்லாத பேரின்ப அரசு எனக்குக் கிடைக்கும் படி, நான் விரதம் இருந்து நோற்பேன்!! என் றார். அரசர் ''என்ன காரியம் செய்தாய்?'' என்று குழம்பியே கேட்டார். செங்குட்டுவன் இன்னது சொல்வது என்று தெரியாமல் தடு மாறினான்.

''மறுபடியும் இளங்கோ பேசினார். நான் செய்வதுபிழையாக இருந்தாலும் பொறுத்தருள வேண்டும். நான் துறவடைந்து ஞானம் பெற் றால் இந்தக் குலத்துக்கே பெருமை. இந்த உறுதிமொழியை மாற்றுவதென்பது இனி இல்லை. இதோ, இப்போதே நான் இந்த அரண்மனையை விட்டுப் புறப்படுகிறேன். இனி எனக்கு இருப்பிடம் மடமோ, கோயிலாகவோ இருக்கும்'' என்று சொல்லிப் புறப்பட்டார்.

அன்றுமுதல் அவர் இளங்கோவடிகள் ஆனார். அவருடைய இயற்பெயர் இன்ன தென்று தெரியவில்லை; அரசிளங்குமரனும் வருங்கால மன்னனுமாகிய செங்குட்டுவனுக்குத் தம்பியாதலின் யாவரும் அவரை இளங்கோ என்றே அழைத்து வந்தனர். துறவு பூண்ட பிறகு, இளங்கோ அடிகள் என்ற பெயர் நிலைத்துவிட்டது. வஞ்சிமா நகரத்தின் கிழக்கு வாயிலுக்கு அருகே இருந்த கோட்டத்தில் அவர் தங்கி வாழலானார்.

'குணவாயிற் கோட்டத்து அரசு துறந் திருந்த குடக்கோச்சேரல் இளங்கோ' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இளங்கோ துறவை ஏற்றுக்கொள்வதற்கு முன் தமிழ்நாடு முழுவ தும் சுற்றி, அங்கங்கே உள்ள காட்சிகளையும் மக்களையும் கண்டு வந்தார்; பூம்புகார் நகரத் தையும் மதுரைமா நகரத்தையும் நன்றாகப் பார்த்தார். அந்த நகரங்களுக்குச் செல்லும் வழிகளையும் அங்கங்கே வாழும் மக்களுடைய இயல்புகளையும் தெரிந்து கொண்டார்; மதுரை மாநகரத்தில் இருந்த சங்கப் புலவர்களைக் கண்டு அளவளாவினார்; கூலவாணிகன் சீத் தலைச் சாத்தனாரிடம் நெருங்கிப் பழகி அவ ருடன் நட்புப் பூண்டார்.

இளங்கோவடிகள் துறவு பூண்ட சிலகாலத் திற்குள் மன்னன் நெடுஞ்சேரலாதன் புகழுடம்பு எய்தினான். அப்பால் செங்குட்டுவனே அரசு கட்டில் ஏறினான். மதுரையிலிருந்து சீத்தலைச்

சாத்தனார் அவ்வப்போது வஞ்சிமாநகர் வந்து செல்வார்; செங்குட்டுவனைக் கண்டு இளங்கோ வடிகளோடு சிலநாள்தங்கித் தமிழ் இலக்கியங் களைப் பற்றி உரையாடிவிட்டுச் செல்வார்.

ஒரு முறை சாத்தனார் வந்திருந்தபோது செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றான். அவன் சாத்தனாரையும் உடன் அழைத்துக் கொண்டு சென்றான். மலையைச் சார்ந்த காடுகளில் குறிஞ்சிநில மக்கள் பல கையுறை களோடு மன்னனை வந்து கண்டார்கள். அவர் கள் ஓர் அற்புதக் காட்சியைப் பற்றிச் சொன் னார்கள். கண்ணகி ஒரு நகிலை இழந்த வடி வோடு செங்குன்றத்தில் வந்து நின்றதையும் பிறகு அவளுடைய கணவனுடன் தேவர் வந்து அவளை விமானத்தில் அழைத்துச் சென்றதை யும் கூறினார்கள். அப்போது சேரனுடன் பட்டத்தரசியும் உடன் இருந்தாள்.

அருகில் இருந்த சாத்தனார் கண்ணகியின் வரலாற்றையும் கோவலனுக்கு நேர்ந்த துன் பத்தையும் எடுத்துச் சொன்னார். கேட்ட செங்குட்டுவன் கண்ணகிக்கு வஞ்சிமாநகரில் ஒரு கோயில் கட்டுவதாகத் தீர்மானித்தான்; கண்ணகியின் திருவுருவத்தை வடிக்க இமயத்தி லிருந்து கல் எடுத்துவர வேண்டும் என்றும் உறுதி பூண்டான். யாவரும் வஞ்சிமாநகர் வந் தனர். சாத்தனார் இளங்கோவடிகளைக் காண் பதற்கு வந்தார். அங்கே குன்றில் வாழும் மக் கள் சிலர் தாம்கண்ட அற்புதக் காட்சியை இளங்கோவடிகளிடம் சொல்லிக் கொண்டிருந் தனர்; ''திருச்செங்குன்றத்தில் மஞ்சள் பூக்கள் பூத்துக் குலுங்கும் வேங்கைமரம் ஒன்று உண்டு. அதன் அடியில் ஒரு பத்தினி நின்றிருந்தாள். தன் நகில் ஒன்றை இழந்த கோலத்தோடு நின் றாள். அப்போது விமானத்தில் இந்திரன் அவ ளுடைய கணவனை அமரலோகத்திலிருந்து அழைத்து வந்து, அவளுக்குக் காட்டி, அவ ளையும் ஏற்றிக்கொண்டு வானுலகு சென்றான். இதை எங்கள் கண்களாலே கண்டோம். மிக மிக வியப்பான காட்சி இது. எங்கும் கண்டதும் கேட்டதும் இல்லை. இதைத் தவமுனிவராகிய தங்களிடம் சொல்லிச் செல்லலாம் என்று வந் தோம்'' என்றார்கள்.

சாத்தனார், செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றிருந்த போது அங்கும் குறவர் கள் வந்து இச் செய்தியைக் கூறினார்கள் என் பதைச் சொல்லிக் கண்ணகியின் வரலாற்றை யும் விரித்துரைத்தார். கண்ணகி, கோவல னுடைய முன்பிறப்புக் கதையையும் எடுத்து இயம்பினார்.

இவற்றையெல்லாம் கேட்ட இளங்கோ வடிகள் நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந் தார். அவர் தம் அகக்கண்ணில் இந்த வர லாற்றுக் காட்சிகளையெல்லாம் ஒருமுறை வரி சையாகக் கொண்டுவந்து கண்டாற்போல் இருந்தது. பின்பு மெல்லச் சாத்தனாரைப் பார்த்து, ''பாவம்! பாண்டிய மன்னனுடைய முடிவு வருந்தத்தக்கது. அவன் செய்த பிழைக்கு வேறு யாரும் தண்டனை கொடுக்கவில்லை. தான் செய்தது அறமன்று என்பதை உணர்ந்த வுடன் அவன் உயிர் பிரிந்தது. அந்த அறமே அவனுக்குக் கூற்றாக நின்று ஒறுத்துவிட்டது. அரசியலில் ஈடுபட்டவர்கள் உணரவேண்டிய உண்மை இது'' என்றார்.

சாத்தனார் அப்போது, செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுப்பதாக எண்ணி யிருப்பதைச் சொன்னார்.

''அப்படியா? அது மிகவும் போற்றத்தக்க செயல். இனி நாள் ஆகஆக, அந்த வீரபத் தினியை யாவரும் போற்றுவார்கள். புகழ் மிக்க பத்தினியை உயர்ந்தவர்கள் ஏத்திப் பாராட்டுவார்கள் என்பது ஒரு பெரிய உண்மை. கண்ணகி, கோவலனுடைய முற்பிறவிக் கதை யைச் சொன்னீர்கள். அதிலிருந்து, எல்லாம் வினையின் விளைவு என்பது தெளிவாகத் தெரி கிறது. ஆகவே, கண்ணகியின் வரலாற்றினால் மூன்று உண்மைகள் தெள்ளத் தெளிவாகப் புல னாகின்றன. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந் தோர் ஏத்தலும், ஊழ்வினைஉருந்து வந்தூட் டும் என்பதும் அசைக்க முடியாத உண்மைகள்''

சாத்தனார் அதை ஆமோதித்தார். பின் னும் இளங்கோவடிகள் கூறலானார். ''இந்த மூன்று கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கதையைக் காப்பியமாக இயற்றலாம். எல்லாவற்றிற்கும் சிலம்பு கார ணமாக இருப்பதனால் சிலப்பதிகாரம் என்ற பெயரை வைக்கலாம் என்று தோன்றுகிறது. உங்கள் கருத்து என்ன?''

நன்றாகச் செய்யலாம். முடியுடை வேந் தர் மூவரும் இந்தக் கதையில் வருகிறார்கள். சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் கதை நடந்திருக்கிறது. தாங்களே ஒரு காவியத்தை அருளிச் செய்யலாம்'' என் றார் சாத்தனார்.

சாத்தனாருக்கு அந்தக் காவியத்தைத் தாமே இயற்றவேண்டும் என்ற அவா எழுந்தது. ஆயினும் அந்தக் கருத்தை வெளியிட விரும்ப வில்லை. 'இவரையே இயற்றும் படி மரியா தைக்குச் சொல்லலாம். இவர் சேர குலத்திற் பிறந்தவர். மற்ற மன்னர்களைப் பற்றிச் சொல்ல விரும்ப மாட்டார். நம்மையே இயற் றச் சொல்லி விடுவார்' என்று எண்ணியே அவர் அப்படிச் சொன்னார்.

இளங்கோவடிகளோ, ''பார்க்கிறேன். நன்றாகச் சிந்தித்து இயற்றலாம் என்ற நம் பிக்கை இருக்கிறது'' என்று சொன்னார். அது கேட்ட சாத்தனாருக்கு ஏமாற்றம் உண்டா யிற்று. ''நன்றாகச் செய்து முடியுங்கள்'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று, இமயத்தில் கல் எடுத்துக் கண்ணகியின் உரு வத்தை வடித்துக் கங்கையாற்றில் சிலகாலம் வைத்திருந்து, பிறகு வஞ்சிமாநகர் வந்தடைந் தான்; அங்கே கண்ணகிக்குக் கோயில் எடுத்து, தான் கொண்டுவந்த படிமத்தை நிறுவிப்

பூசை முதலியன நடப்பதற்கு ஆவன செய் தான். பிறநாட்டு மன்னர்களும் அந்தக் கோயி லுக்கு வந்து கண்ணகியை வணங்கினார்கள்.

இளங்கோவடிகளும் அக்கோயிலுக்குச் சென்று கண்ணகியை வாழ்த்தி வணங்கினார். அப்பால் அவர் சிலப்பதிகாரக் காப்பியத்தை நிறைவேற் றினார்; சிலப்பதிகாரக் கதையை மூன்று காண் டங்களாகப் பகுத்துக்கொண்டார்; பூம்புகாரில் கோவலன் கண்ணகியை மணம் செய்துகொண்டு வாழ்ந்ததும், பின்பு மாதவியுடன் மனம் செல்ல அவளுடன் சென்றிருந்ததும், பிறகு வந்து கண் ணகியோடு புறப்பட்டு உறையூரை அடைந்த தும் ஆகிய நிகழ்ச்சிகள் உள்ள கதைப் பகுதிக் குப் புகார்க் காண்டம் என்று பெயர் கொடுத் தார்; கோவலன் முதலியோர் காட்டின் வழியே சென்று மதுரையை அடைந்ததும், கண்ணகியை ஆயர்சேரியிலே விட்டுவிட்டுச் சிலம்பு விற்கச் சென்றதும், கொலையுண்டதும், பிறகு கண் ணகி பாண்டியன் முன் வழக்கிட்டதும், மது ரையை எரித்து விட்டுப் புறப்பட்டு மலை நாட்டை அடைந்ததும், வான விமானத்தில் கணவனோடு ஏறிச் சென்றதும் ஆகியவற்றைச் சொல்லும் பகுதிக்கு மதுரைக் காண்டம் என்று பெயரிட்டார். மூன்றாவது வஞ்சிக் காண்டம். அதில் கண்ணகி வான விமானத்தில் சென்ற தைக் குறவர்கள் செங்குட்டுவனிடம் சொன் னது, அவன் கோயில் எடுக்கத் தீர்மானித்து இமயம் நோக்கிச் சென்றது, வடநாட்டு அரச ரோடு பொருது வென்றது, இமயத்திலிருந்து கல் கொண்டுவந்து கங்கையில் நீர்ப்படை செய்தது. வஞ்சிமாநகர் வந்து பத்தினித் தெய் வத்துக்குக் கடவுள் மங்கலம் செய்து வழிபட் டது முதலிய செய்திகள் அடங்கியிருக்கின்றன.

முதலில் திங்களுக்கும் கதிரவனுக்கும் மழைக்கும் புகார் நகருக்கும் வாழ்த்துக் கூறிக் காவியத்தைத் தொடங்கினார்; இடையிலே காடு முதலிய இடங்களிலுள்ள மக்கள் தம்தம் கடவுளரை வழிபடுவதாகச் சொல்லிப் பல துதி களை அமைத்தார் இந்த வகையில் வேட்டுவ வரி என்னும் பகுதியில் துர்க்கையின் துதியும், ஆய்ச்சியர் குரவையில் திருமாலின் தோத்திர மும், குன்றக்குரவையில் முருகனுடைய வாழ்த் தும் வருகின்றன. இயல், இசை, நாடகம் என் னும் மூன்று தமிழின் கூறுபாடுகளும் இடை யிடையே விரவி வருகின்றன.

இவ்வாறு சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகள் நிறைவேற்றினார். மதுரையில் இருந்து சாத்தனார் அதற்கு முன்பே மணிமேகலையின் கதையைக் காப்பியமாகப் பாடி முடித்தார். முடித்து வஞ்சிமாநகர் வந்தார். இளங்கோவடி களும் தாம் சிலப்பதிகாரத்தை எழுதி முடித் திருப்பதைச் சொன்னார். வஞ்சிமாநகரில் அந்த இரண்டு நூல்களும் அரங்கேறின. சிலப்பதி காரம் அதுமுதல் தமிழ்மக்களின் பாராட்டுக் குரியதாகி எங்கும் பரவலாயிற்று. சேரன் செங் குட்டுவன் கட்டிய கற்கோயில் இன்று இருக்கு மிடம் தெரியவில்லை. ஆனால் இளங்கோவடி கள் சமைத்த சொற்கோவில் தமிழ்நாடு முழு வதும் பரவி விளங்குவதோடு, பிற மொழிகளி லும் சென்று தமிழின் பெருமையைப் பிறரும் அறியும்படி செய்கிறது.

சிலப்பதிகாரம் ஏனைய காப்பியங்களைப் போலன்றிப் பலவகையில் பல புதுமைகளை உடையதாய்த் திகழ்கிறது. மணிமேகலை என் னும் காப்பியம் அறம், பொருள் இன்பம்,வீடு என்ற நான்கையும் சொல்லாமல், வீட்டு நெறி பற்றிய செய்திகளையே தலைமையாகக்கொண் டது. சிலப்பதிகாரத்தில் அந்த நால்வகைப் பொருள்களும் உள்ளன. ஆகையால் இதைப் பெருங்காப்பியம் என்றே சொல்லலாம். தெய் வங்களையும்மன்னர்களையும் தலைவர்களாகக் கொண்ட காப்பியங்கள் பல தமிழில் உள்ளன. அவற்றில் கதாநாயகர்களும் கதாநாயகிகளும் நிகரில்லாச் சிறப்பை உடையவர்களாக விளங்கு வார்கள். சிலப்பதிகாரமோ, கண்ணகி என்னும் பெண்ணையே தலைவியாகக் கொண்டு இயங்கு வது. அவளைக் கதாநாயகி என்று சொன்னால், கோவலனைக் கதாநாயகன் என்று சொல்லத் தோன்றும். ஆனால் அவனை அப்படிச் சொல் வதைவிடக் கதாநாயகியின் கணவன் என்று சொல்வதே பொருந்தும். அரசனுடையமனைவி அரசியாகலாம். நாட்டை ஆளும் அரசியின் கணவன் அரசனாவதில்லை. பிரிட்டிஷ் அரசி யாகிய எலிசபெத்தின் கணவரை அரசர் என்று சொல்வதில்லையே. அவ்வாறே சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியே தலைமைப் பாத்திர மாக இருந்து விளங்குகிறாள். மாதவியும் கோவ லனும் கண்ணகிக்குரிய தலைமையைப் பெற வில்லை. எனவே, இந்தக் காப்பியம் கதாநாய கியை மட்டும் பெற்றது என்று சொல்லவேண் டும். இஃது ஒரு புதுமை.

இந்தக் காப்பியத்துக்குக் கண்ணகியின் பெயரை வைத்திருக்கலாம். அப்படி வைக் காமல் சிலம்பின் பெயரை வைத்துச் சிலப்பதி காரம் என்று வழங்குகிறது மற்றொரு புதுமை.

தமிழ்நாட்டின் பிரிவாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் பெருமைகளை நடுநிலை மையில் நின்று இளங்கோவடிகள் எடுத்துக் காட்டுகிறார்; காவிரிப்பூம்பட்டினம், மதுரை மாநகர், வஞ்சிமாநகர் ஆகிய நகரங்களைப் பற்றிச் சிறப்பித்துப் பாராட்டுகிறார். அன்றி யும், தென்னாட்டில் தோன்றிய கண்ணகிக்கு வடிவம் சமைக்கப் பாரத நாட்டின் எல்லை யாகிய இமயத்திலிருந்து சிலை வருகிறது.

காவிரித் துறையில் பயின்ற கண்ணகி வையைத் துறைக்கு வந்து, பின்பு சேரநாட்டுப் பேராற்றங்கரை வழியே சென்று வானத்தை அடைகிறாள். அவளுடைய படிமம் கங்கை நீரில் படிந்து வஞ்சிமாநகருக்கு வருகிறது. இந்த வகையில் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் கண்ணகியின் வழிபாடு காட்டுகிறது. பிற நாட்டு மன்னர்களும் அவளை வணங்குகிறார் கள். இந்த அமைப்பும் ஒரு புதுமை.

கதையைச் சொல்கின்ற பல பகுதிகள் இயல் இன்பத்தோடு சிறந்து நிற்ப, இடை யிடையே வரிப்பாட்டுக்கள் முதலிய இசைத் தமிழ் விரவி வருகிறது. பாத்திரங்களின் கூற்

றாக உள்ள சில பகுதிகள் நாடகத் தமிழின் அமைப்போடு விளங்குகின்றன. இவ்வாறு மூன்று தமிழும் பொருந்தி விளங்குவது இந்தக் காப்பியம். மூன்று காண்டம், மூன்று நாடுகளின் பெருமை, மூன்று தமிழின் அமைப்பு ஆகியவற்றோடு இயங்கும் இந்தக் காப்பியம் மூன்று பெரிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு நிற்கிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் அந்த மூன்று உண்மைகள். மிகப் பழைய உரைநடைக்கு உதாரணமாக உரைபெறு கட்டுரை என்ற பகுதி நூலுக்கு முன்பு அமைந்திருக்கிறது.

புகார்க் காண்டத்தில் கண்ணகியையும் மாதவியையும் கோவலனையும் காண்கிறோம். இந்தக் காண்டத்தில் மாதவியைப் பற்றிய செய்திகளே மிகுதியாக வருகின்றன. கண்ணகி, தன்னுடைய கணவன் தன்னைப் புறக்கணித்தாலும், அதைப் பாராட்டாமல் வீட்டில் இருந்து கற்பு நெறியில் சிறந்து நிற்கின்றாள். அவளை அடங்கின பத்தினியாக நாம் பார்க்கிறோம். மதுரைக் காண்டத்தில் கண்ணகி, கோவலன் ஆகிய இருவரும் சேர்ந்து கதையை நடத்துகிறார்கள். அதன் இறுதியில் கோவலன் கொலையுண்ணக் கண்ணகி பாண்டியனுக்கு முன் வழக்குரைத்துக் கற்புக் கனலால் மதுரையை எரிக்கிறாள். அங்கே அவளை வீர பத்தினியாகக் காண்கிறோம். மாதவியினிடமிருந்து பிரிந்து வந்த கோவலன் இனி நம்முடன் வாழ்வான், இல்லறம் நடத்தலாம் என்று கண்ணகி அவனுடன் மதுரை வந்தாள். பலகாலம் பிரிந்து வாழ்ந்தும் நல்லகாலம் வரும் என்ற நம்பிக்கையோடு இருந்தவளுக்கு அந்தக் காலம் வந்துவிட்டதாகவே தோன்றியது. கோவலனும் அவளிடம் மிகுந்த அன்புபாராட்டி அவள் சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தான். இனிமேல் நல்வாழ்வு வாழலாம் என்ற உறுதி உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் விதி விளையாடிவிட்டது. கோவலன் கொலையுண்டான். உறுதியான நம்பிக்கை சிதைந்தவுடன், அவள் உள்ளே கனன்றுகொண்டிருந்த தீ எழுந்து வெடித்தது. நிலத்துக்குள் பல காலம் குழக்கும் குழப்பம் ஒருநாள் பூகம்பமாக விளைவதைப் போல இது விளைந்தது. அப்போது கண்ணகி வீர பத்தினியாக மதுரையை எரித்தாள்.

வஞ்சிக்காண்டம் கதையின் போக்கை மாற்றிக் காப்பியத்தின் சுவையைக் கொடுக்கிறது என்று சிலர் கூறுவதுண்டு. இளங்கோவடிகள், 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்' ஆகிய உண்மையை அந்தக் காண்டத்தின் மூலம் விளக்குகிறார். புகார்க் காண்டத்தில் அடங்கிய பத்தினியாக இருந்த கண்ணகி மதுரைக் காண்டத்தில் வீரபத்தினியாகக் கனன்று எழுந்தாள். அவளே வஞ்சிக் காண்டத்தில் பத்தினித் தெய்வமாகி வருகிறாள். வீரம் மாறி ஈரம் நிறைகிறது. செங்குட்டுவன் எடுத்த கோவிலில் அவள் தெய்வமாகப் புகுந்தது மட்டுமன்று; அவளுடைய பண்பு உயர்ந்து, தனக்குத் தீங்கு செய்த பாண்டியனைப் பொறுக்கிறாள். பொறுப்பது மாத்திரம் அன்று, அவனை உயர்த்தியே விடுகிறாள். 'தென்னவன் தீதிலன், தேவர்கோன் தன்கோயில், நல் விருந்தாயினான், நான் அவன்தன் மகள்' என்று சொல்கிறாள். அவளையே முதலில் வஞ்சி மகளிர் பாடுகிறார்கள். இங்கே கண்ணகி அருள் நிரம்பியவளாய்த் தெய்வமே ஆகிவிடுகிறாள். இதனை இளங்கோவடிகள், ஆயத்தார் சொல்லும் சொல்லில் விளக்குகிறார்.

''வானவன் எம்கோ மகளென்றாம்; வையையார்
கோனவன் தான்பெற்ற கொடியென்றாள்-
வானவனை
வாழ்த்துவோம் நாமாக, வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள்''.

வையையார் கோமானாகிய பாண்டியனை வாழ்த்தினமையால் அவள் தேவமகளாகிவிட்டாள். இவ்வாறு வஞ்சிக் காண்டத்தில் கண்ணகி முழுமைபெற்ற பத்தினித் தெய்வம் ஆகியமையால், இந்தக் காண்டம் இளங்கோவடிகளுடைய கட்டுக் கோப்புக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் அழகிய வருணனைகளும், உரையாடல்களின் சிறப்பும், படிப்போர் உள்ளத்தில் பரிவை உண்டாக்கும் உத்திகளும், பிற காப்பியப் பண்புகளும் நிரம்பியுள்ளன. அவற்றை எல்லாம் விரிவாகக் கூறப்புகின் இந்தக் கட்டுரைமிக விரியுமாதலின் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

தெய்வம் மனிதனாக வந்து அருள்பாலிக்கும் கதைகளுக்கு நடுவிலே, மனிதப் பிறவி எடுத்த மகள் தெய்வமாகி உயர்ந்து 'அருள் பாலித்ததைச் சொல்லும் காப்பியமாகிய சிலப்பதிகாரம் தனித்தன்மை பெற்று ஒளிர்கிறது.

நம்மாழ்வார் உபதேச நலங்கள்

''மகாமகிமோபாத்தியாய'' ''மகாவித்துவான்''

திரு பி. ப. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

திருவாய்மொழி பத்தாம் பத்தில் 'கண்ணன் கழலிணை' யென்னும் பதிகத்தின் சாரத்தைத் திருவாய்மொழி நூற்றந்தாதியில் அருளிச் செய்யா நின்ற மணவாள மாமுனிகள், -'மண்ணவர்க்குத் தானுபதேசிக்கை தலைக் கட்டினான் மாறன்'' என்றருளிச் செய்தார். இங்கு, 'மண்ணவர்க்கு' என்ன வேண்டுமா? மண்ணுலகில் அவதரித்த ஆழ்வார் மண்ணவர்க்குத்தானே உபதேசித்தருள்வர்; மற்றையோர்க்கு உபதேசிக்கப் பிரசக்தியில்லையே. ஆக, 'மண்ணவர்க்கு' என்றது மிகை என்று சிலர் கருதக்கூடும். உண்மையில் மிகையன்று கேண்மின். ஆழ்வார், மண்ணவர்களான பிராகிருதர்களுக்கு மட்டும் உபதேசிப்பவரல்லர்; விண்ணுளாரிலுஞ் சீரியரான மகாஞானிகளுக்கும், சர்வஜ்ஞனான சர்வேச்வரனுக்குங் கூட உபதேசிப்பவரென்பது திருவாய்மொழியில் நன்கு தெரியவருகின்றது. கண்ணன் கழலிணைப் பதிகத்தில் மண்ணவர்களின் உபதேசம் மட்டுமே தலைக்கட்டிற்றாய், ஞானிகளுக்கும் சர்வேச்வரனுக்கும் உபதேசிக்கை சேஷித்திருப்பது அறியத்தக்கது. கண்ணன் கழலிணைக்கு மூன்றாம் பதிகத்தில் ''செஞ்சொற்கவிகாள், உயிர்காத்து ஆட்செய்மின்'' என்னும் உபதேசம் மாஞானிகளை நோக்கியது. அப்பதிகந்தன்னிலே 'மங்க வொட்டு உன் மாமாயை' என்னும் உபதேசம் எம்பெருமானை நோக்கியது.

ஆழ்வார் பிரபந்தம் அருளிச் செய்யத் தொடங்கும்போது (திருவிருத்தம் முதற்பாட்டில்) ''இமையோர் தலைவா, மெய்ந்நின்று கேட்டருளாய்'' என்று எம்பெருமானுக்கே உபதேசிக்கத் தொடங்கினார். தொடங்கின உபதேசத்தைத் தலைக்கட்டினதும் எம்பெருமான் திறத்திலேயே (அதுதான் 'மங்கவொட்டுன் மாமாயை'). இடையிடையிலும் ஆழ்வார் எம்பெருமானுக்குப் பல உபதேசங்கள் செய்யக் காண்கிறோம். இப்படி இவர் உபதேசித்தாலும் சிஷ்ய லட்சண பூர்த்தி எம்பெருமான் பக்கலில் காண முடியாதே. அவனோ சர்வஜ்ஞன்; ஆசாரிய பரம்பரையில் முன்னணியில் நிற்பவன்; எல்லாவற்றுக்கும் மேற்படக் கேட்பாரற்ற சுதந்திரன். அன்னவனுக்கு உபதேசித்தல் உற்றதன்றே என்று, சிலருடைய மனம் குழம்பியேயிருக்கும். அனைவரும் தெளியுமாறு சிஷ்ய லட்சண பூர்த்தி எம்பெருமானிடத்தில்தான் உள்ளது என்னுமிடம் இக்கட்டுரையில் பல படிகளால் முதலிக்கப்படுகின்றது. எம்பெருமானாகிற சிஷ்யன், ஆழ்வாராகிற ஆசாரியனிடத்தில் நடந்துகொண்ட விதங்கள் திருவாய் மொழிப் பாசுரங்கள் கொண்டே நிரூபிக்கப்படுகின்றன.

1. பொருளாதார விஷயத்தில் பெரும்பாலும் ஆசாரியன் குறைவாளனாயும் சிஷ்யன் நிறைவாளனாயும் இருப்பது இயல்பு. ஆசாரியனுடைய குறைகளைத் தீர்த்துவைக்கும் சிஷ்யனே சச்சிஷ்யனாவான். ஆசாரியன் தான் தங்குவதற்கு நல்ல இடமில்லை என்று தெரிவித்துக் கேட்டுக்கொண்டால், சிஷ்யன் நல்ல இடம் பார்த்துத் தருவன். எம்பெருமானாகிற சிஷ்யன் சுவாசார்யரான ஆழ்வாருடைய கோரிக்கையின்படி நல்ல இடம் அளித்தானென்பது (திருவாய்மொழி 8-7-1) ''இருத்தும் வியந்தென்னைத் தன் பொன்னடிக் கீழென்று, அருத்தித்து எனைத்தோர் பலநாள் அழைத்தேற்கு என்றன் கருத்தையுற''. 'பிரானே, என்னைக் கண்டவிடத்திலும் வைத்து அலைக்காதே: உன் பொன்னடிக்கீழே நித்தியமாக வாழும்படி செய்யாய்' என்று ஆழ்வார் கேட்டுக்கொள்ள, அப்படியே அவன் செய்தான் என்பதை எங்கும் கண்கூடாகக் காண்கிறோம். எம்பெருமானுடைய திருவடி நிலைக்குச் சடகோபன் என்கிற திருநாமம் அன்றோ எங்கும் பரந்துள்ளது. இத்தகைய பேறு தமக்குக் கிடைக்கப் போகிறது என்பதை, ஆழ்வார் பண்டே உட்கண்ணால் உணர்ந்தார் என்க.

2. ஆசாரியர் வாய்விட்டுக் கட்டளையிட்டாலும் செய்யகில்லாத சிஷ்யர்களும் உண்டு. அப்படியன்றிக்கே, 'கருதுமிடம் பொறாது - கைந்நின்ற சக்கரத்தன்' என்ற கணக்கிலே எண்ணின மாத்திரத்திலே செய்து தலைக்கட்டும் சச்சிஷ்யர்களுமுண்டே. எம்பெருமானாகிற சச்சிஷ்யன் அப்படிப்பட்டவன் என்பது திருவாய்மொழியில் (1-8-7) 'கொண்டானேழ் விடை....என் எண்தான் ஆனானே' என்கிற பாசுரத்தினால் விளங்கும். 'நான்எண்ணினபடியெல்லாம் செய்து தலைக் கட்டுவானாயிருந்தான்' என்றவாறு.

3. சிஷ்யன் ஆசாரியனிடத்தில் 'சத்யம்வத' என்றும், 'நாந்ருதம் வதேந்' என்றும் உபதேசங்கள் கேட்பனாகையாலே யாரிடத்திலுமே பொய் சொல்லலாகாது; ஆசாரியனிடத்

தில் அதற்குப் பிரசக்தியே இருக்கக்கூடாது. எம்பெருமானாகிற இந்த சச்சிஷ்யன் (1-8-5) 'வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான், பொய் கலவாது என் மெய்கலந்தானே' என்று ஆழ்வார்தாம் அருளிச் செய்கிறபடியே பொய் கலவாது ஆழ்வார் திருமேனியில் அபிநிவேசங் கொண்டானாயிற்று. இப்பாசுரத்தில் 'கைகலந் துண்டான்' என்றதில் ஒரு ரசோக்தி கேளீர்: சச்சிஷ்யன் எப்போதும் ஆசாரிய கைங்கரியத்திலேயே ஊன்றி யிருப்பவனாகையாலே இலைத் தளிகையிட்டு உட்கார்ந்து உண்ணவும் அவகாச மின்றிக்கே தேக தாரணார்த்த மாகச் சிறிது கையில் கலந்து உண்பன். அப்படியே எம்பெருமானாகிற இந்த சிஷ்யனும் 'வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்'.

4. ஆசாரியன் பக்கலில் உண்மையான அன்புள்ள சச்சிஷ்யன் திருநாட்டிலே பண்ணும் விருப்பத்தை ஆசாரியன் திருமேனியிலே பண்ணியிருப்பன். எம்பெருமான் ஆகிய சிஷ்யனும் (2-5-1) 'அந்தாமத்தன்பு செய்து என்னாவி சேரம்மானுக்கு' என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்யும்படி அந்தாமமாகிற பரமபதத்திலே செய்யும் அன்பை ஆழ்வார் பக்கலிலே செய்தானாயிற்று.

5. சிஷ்யன் ஆசாரியனைக் கண்டால், பெரும்பசியன் சோற்றைக் கண்டாற் போலவும், பெருவிடாய்ப் பட்டவன் தீர்த்தத்தைக் கண்டாற் போலவும், தரித்திரன் நிதி கண்டாற் போலவும் உகந்திருப்பானாகையாலே, எம்பெருமானாகிற சிஷ்யனும் ஆழ்வார் திறத்திலே இம்மூவர்ப டியையுமுடையனாய் உகந்திருந்தானென்பது பாசுரங்களினால் தெரிய வரும். (9-6). 'உருகுமால்' பதிகத்தில், 'என்னுயிருண்டான்', 'உருவமுமாயுயிரு முடனே யுண்டான்' 'என்னை முற்றவும் தானுண்டான்' (10-10-6) 'உண்டிட்டாய் இனியுண்டொழியாய்' என்கிறபடியே பெரும் பசியனைப் போலே முற்றவும் உண்டு பசிதீர்ந்தமை சொல்லிற்று. மனிதர்க்குப் பசி தீர்க்கும் பொருள் வேறாகவும், விடாய் தீர்க்கும் பொருள் வேறாகவும் இருக்கும். இப்பெருமானுக்கு அப்படியன்றிக்கே இரண்டும் ஒன்றேயாயிருக்கையாலே (9-6-10) 'என்னில் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப் பருகினான்' என்னும்படி ஆழ்வாரையே பருகி விடாய் தீர்ந்தானாயிற்று. ஜன்மதரித்திரன் நிதிகண்டால் உடனே அதையெடுத்து அநுபவிக்கமாட்டாமல் வைத்த கண் வாங்காதே பார்த்தபடியேயிருப்பன். எம்பெருமானும் (8-7-2), 'இருந்தான் கண்டு கொண்டு' என்கிறபடியே ஆழ்வார் திருமேனியைக் கண்மாறாதே கண்டுகொண்டே இருந்தான்.

6. சாமானிய சிஷ்யர்கள் தங்களிடமுள்ள பொருள்களை ஆசாரியர்க்கு சமர்ப்பிப்பர்களேயொழிய, தன்னைக் கொடுக்கமாட்டார்கள். எம்பெருமானாகிற சிஷ்யன் அப்படியன்றி (2-7-11) 'பற்பநாபன் எனக்கே தன்னைத் தந்த கற்பகம்' என்று ஆழ்வார் தாமே பணிக்கும்படி தன்னையே அவர்க்குத் தந்திட்டான். 'எனக்கே தன்னைத் தந்த' என்ற உருபு பிரித்துக்கூட்டிப் பொருள் கொள்வது. தன்னைக் கொடுக்கையாவது தன்னை ஏவிக் காரியங் கொள்ளும்படி அமைக்கையாம்.

7. சாமானிய சிஷ்யன் ஆசாரியனுக்கு சுவற்பம் சமர்ப்பித்துவிட்டு அபரிமிதமாக சமர்ப்பித்ததாய் அபிமானிப்பன்; சச் சிஷ்யனோ வென்னில் எவ்வளவு சமர்ப்பித்தும் திருப்தி பெறாமல், 'இன்னுமென்ன செய்வேன் இன்னுமென்ன செய்வேன்!' என்று தெகுடாடியிருப்பன்; எம்பெருமானாகிற சச்சிஷ்யனிடத்தில் இந்நிலைமையை ஆழ்வார் பெரிய திருவந்தாதியில் அருளிச் செய்கிறார்(53). 'ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது - உன்னடியார்க்கு என்செய்வ னென்றே யிருத்திநீ' என்னும் பாசுரத்தினால்.

8. ஆசாரியன் செய்யும் உபகாரங்களைச் சிந்தனை செய்யும் சச்சிஷ்யன் ஆசாரியனை ஒரு நொடிப்பொழுதும் பிரியகில்லாதே சகல காலங்களிலும் உடனிருப்பன். அப்படியே எம்பெருமானாகிற சச்சிஷ்யனும் (1-10-8), 'அல்லும் நன்பகலுமிடை வீடின்றி நல்கி யென்னை விடான் நம்பி நம்பியே' என்கிறபடியே ஆழ்வாரை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாதே யிருப்பன்.

9. ஆசாரியனுடைய அநுக்கிரகத்தைப் போலவே நிக்கிரகத்தையும் உபாதேயமாகக் கொள்ளக் கடமைப்பட்டவன் சச்சிஷ்யன். ஏதேனும் சீற்றத்தாலே ஆசாரியன் சிஷ்யனை வெறுத்துத் தள்ளினாலும் அகலாதிருக்கை சச்சிஷ்யலட்சணம். மின்னிடை மடவார் பதிகத்தில் ஆழ்வார்க்கு எம்பெருமான்மீது பிரணயரோஷமுண்டாகி, 'போகுநம்பீ, போகு நம்பீ, ஒருநான்று தடிபிணக்கே' என்று நிக்கிரகிக்கச் செய்தேயும் (2-6-7) 'அகல்வானுமல்லனினி' என்னும்படி விட்டு நீங்காதே யிருந்தவன் எம்பெருமானாகிற சச்சிஷ்யன்.

10. சிஷ்யன் தனக்குப் பிரியமான காரியமொன்றை ஆசாரியனுக்கு அப்பிரியமாகத் தெரிந்து கொண்டால், அதைத் தவிர வேண்டியவனே யொழிய தனக்குப் பிரியமென்கிற காரணத்தினால் அதை விரும்பக்கடவன் அல்லன். அப்படியே, எம்பெருமானாகிற சிஷ்யனும் (10-3-10) 'திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி' என்கிறபடியே பசு மேய்க்கப்போவதில் தனக்கு உகப்பு இருக்கச் செய்தேயும், (10-3-7) 'ஆழுமென்னாருயிர் ஆன்பின் போகேல்' என்ற ஆழ்வாருடைய நியமனத்தைக் கடக்கமாட்டாமல் பசு மேய்க்கை தவிர்த்திருந்தான் (திருவாய்மொழியில் இப்படி ஓர் அநுபவம் நிகழ்ந்ததன்றோ).

11. ஆசாரியனுக்குச் சிஷ்யன் தானே உகந்து காரியங்கள் செய்யா நிற்கச் செய்தேயும், 'க்ரியதாமிதி மாம்வத' 'ஏவமற்றமரராட்செய்வார்' என்ற கணக்கிலே ஆசாரியன் வாய்திறந்து விதிக்கவேணும் என்றும் எதிர்பார்த்திருப்பன். இதனால் சிஷ்யனுக்கு ஒரு விலட்சணமான மகிழ்ச்சி விளையும். எம்பெருமானாகிற சிஷ்யனும் தான் செய்ய நினைக்கும்

காரியத்திற்கு ஆழ்வாருடைய விதி வேணு மென்று எதிர்பார்த்திருந்து, அதனைப் பெற்ற படியை ஆழ்வார் அருளிச் செய்கிறார் (10-6-1) 'ஆழியா னருள்தருவா னமைகின்றான்; 'அது நமது விதிவகையே' என்று. இவ்விடத்தில் ஈட்டு விளக்கம் காண்மின். ''அது நமது விதி வகையே''. 'அது நம்முடைய பாக்யாநு குண மாகவிறே' என்று பூருவர்கள் நிர்வகிக்கும்படி. இதை எம்பெருமானார் கேட்டருளி, 'இத் திரு வாய்மொழியில் மேலோடுகிற ரசத்தோடு சேராது, நாம் விதித்தபடியே செய்வானாயிருந் தான் என்கிறார்' என்று அளிருச் செய்வர். 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று பாரித்துப் போந்த இளையபெருமாள்தாமே 'மரியதாம் இதிமாம் வத' என்னப் பார்த்திருந்தாற்போலே இவர் சொன்னபடி செய்வானாயிரா நின்றான்' என்று. ஆறாயிரப்படியிலும் 'நான் சொன்ன படியே செய்தருளக் கடவனாயிரா நின்றான்' என்றுள்ளது. ஆக, ஆசாரியன் விதிப்பதை எதிர்பார்த்திருக்கும் சச்சிஷ்யனாயிற்று எம் பெருமான்.

இங்ஙனே, சச்சிஷ்ய லட்சண பூர்த்தியை எம்பெருமான் திறத்தில் இன்னமும் விரிவாக உபபாதிக்க விஷயங்களுள்ளன. ஆழ்வார் எம் பெருமானை விளித்து, 'திண்சக்கரம் நிழற்று தொல்படையாய், உனக்கொன் றுணர்த்துவன் நான்'என்றுதம்முடையஆசார்யத்வத்தைஸ்பஷ் டமாகவே பேசியுள்ளார். ஆகவே, எம்பெரு மான் ஆழ்வார் பக்கலில் உபதேசங் கொள்பவ னென்பதில் ஐயமில்லை. ஆனாலும் (6-2-8) 'கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர் ஞான மூர்த்தி யினாய்' என்னப்பட்ட சர்வஜ்ஞனான சர்வேச் வரனுக்கு சிஷ்யலட்சண சமந்வயம் கூடுமோ? என்று சங்கிப்பாருடைய உள்ளம் தெளிவு பெற ஆசார்ய இருதய மகா நிதியின் ஏகதேச சார மாக இந்த விவரணம் செய்து தலைக்கட்டி னோம்.

திருப்பாவை ஜீயர்

இராமாநுஜர் திருப்பாவையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அதனாலேயே அவருக்குத் 'திருப்பாவை ஜீயர்' என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. எனினும் அவர்,

உந்தும் மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன், மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்!
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்! மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவின்காண்!
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளைஒலிப்ப,
வந்து திறவாய்! மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

என்னும் பாசுரத்தினைத் தனிச் சிறப்பாக மிகவும் உவந்திருந்தார். இராமாநுசர் திருப்பாவையை அநுசந்தித்துக்கொண்டு, மாதுகரத்திற்கு எழுந்தருள்வது வழக்கம். அங்ஙனம் ஒருநாள் பெரிய நம்பி திருமாளிகைக்கு எழுந்தருளினார். அப்போது அங்குக் கதவு தாள் இட்டிருந்தது. அந்நிலையில் திருப் பாவை அநுசந்தான ஒலியைக் கேட்டுப் பெரிய நம்பிகளின் திருமகளாரான அத்துழாய் அம்மை, கதவைத் திறந்தார். இராமாநுஜர் அவளைக் கண்டவாறே மூர்ச்சித்து விழுந்தார். அதுகண்டு அத் துழாயம்மை பெரியநம்பி பக்கலிற் சென்று, ''கதவு திறந்த என்னைக் கண்டதும் ஜீயர் மூர்ச்சித்து விழுந்தார். இஃது என்னே?'' என்று அச்சமும் அவலமும் தோன்றக் கூறி நின்றார். பெரிய நம்பிகள் பேரறிவினராதலால், சிறிதும் பதறாமல்,''ஜீயர் 'உந்தும் மதகளிற்றன்' எனத் தொடங்கும் பாசுரத்தை அநுசந்தித்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும். அதன்கண்,

பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையாற் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

என்னும் வரிகளை அநுசந்தித்துக் கொண்டிருக்கும் அளவில், கதவு திறந்த நின்னைக் கண்டு நப்பின்னைப் பிராட்டியையே தாம் சேவிக்கப் பெற்றதாகக் கொண்டு, ஜீயர் பக்திப் பரவசத்தால் மூர்ச்சித்து விழுந்தன ராதல் வேண்டும்'' என்று அத்துழாயம்மைக்கு உண்மையை விளக்கியருளினார். இராமாநுஜரின் பத்தி யுணர்வின் சிறப்பினையும், பெரிய நம்பிகளின் பேரறிவின் பெற்றியினையும் விளக்கும் இந்நிகழ்ச்சி கருதி, வைணவப் பெரியோர்கள் இப்பாசுரத்தினை இராமாநுஜர் தனிச் சிறப்பாக மிகவும் உவந்த பாசுரம் என்று பாராட்டிக் கூறுவர். மாதுகரம்-மலர்தோறும் சென்று வண்டு தேனைச் சேர்ப்பதுபோல, வீடு தோறும் சென்று பெரியோர்கள் பிட்சை ஏற்பது. மதுகரம்-வண்டு.

—ஆசிரியர்.

பாண்பெருமாள் கண்ட பெரியபெருமாள்

வங்கிபுரம் நவநீதம் சீராம தேசிகாசாரியர் அவர்கள்,

ஒப்பிலியப்பன் சந்நிதி

முனிவாகனர்:

ஆழ்வார்கள் பதின்மருள் திருப்பாணாழ்வார் ஒன்பதாமவர். அருளிச் செயலை நாலாயிரப் பிரபந்தமாக அவதரிப்பித்த பதின்மூவருள் இவர் பதினொன்றாமவர். இவர் எம்பெருமானது திவ்விய சங்கல்பத்தால் இக் கர்ம உலகில், தாய் வயிற்றில் பிறவாது அயோநிஜராய் அவதரித்தவர். செந்நெற் பயிரினின்று தோன்றியதாகக் கூறுவர். பின் பாணர் கையில் அகப்பட்டு அக் குலத்தில் வளர்ந்ததால் பாணர் என்றே திருநாமம் பெற்றார். இவருக்குத் தம் முயற்சி சிறிதும் இன்றி எம்பெருமான் கடாட்சத்தாலேயே விசேட ஞானம் உதித்தது. இவ்ருக்கு ஏற்பட்ட ஞானம் எம்பெருமானையும் அவன் திருவடிகளில் பிரபத்தியையும் அதன் பலனாகிய மோட்சாநந்தத்தையுமே பற்றியதாகும். அவனது கடாட்சம் பெறுவதற்கு முன், உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றும் வழி தப்பிச் சென்றுகொண்டிருந்தன. அந்நிலை மாறி அவை நல்வழி திரும்பியதைக் கண்டு மனமகிழ்ந்தார். தாம் வளரும் குலத்தை நினைத்துத் தூரத்தில் நின்றே திருவரங்கனை அனுபவித்துகொண்டிருந்தார். பின் திருவரங்கனது நியமனப்படி லோகசாரங்க முனிவரின் தோளில் அமர்ந்து அரங்கனருகே செல்ல நேரிட்டதால் முனிவாகனர் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

முனிவாகன போகம் :

திருவரங்கனை அநுபவிக்காத ஆழ்வார்களோ ஆசாரியர்களோ இல்லை. ஆயினும் திருப்பாணாழ்வார் திருவரங்கனை அநுபவித்த முறை அதியற்புதமானது. பெரிய பெருமாளை அணுகித் திருவடி முதல் திருமுடிவரை ஒரு முறை கண்ணால் காண்கின்றார். பரமபதம் சென்று பெறவேண்டிய அநுபவத்தையெல்லாம் பெரிய பெருமாளிடமே பெற்றுவிடுகின்றார் ஆழ்வார். மகிழ்ச்சி பொங்குகின்றது. சர்வாங்க சுந்தரமான அவன் திருமேனியழகில் ஆழ்வாரது உள்ளம் பறிபோகின்றது. அவரது உள்ளக் கிளர்ச்சியைப் பொதிந்துகொண்டு பத்துப் பாசுரங்கள் அவர் திருவாக்கினின்று அவதரித்தன. திருவடிமுதல் திருமுடிவரை ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நமக்குக் கண்கூடாகக் காட்டுகின்றன அப்பாசுரங்கள். 'அமலனாதிபிரான்' என்று தொடங்கியதால் அப்பெயரையே கொண்ட ஒரு தனிப் பிரபந்தமாக வடிவு கொண்டன அப்பாசுரங்கள். இந்தப் பாசுரங்களைச் சேவிக்கச் சேவிக்க, தேசிகனுக்கு ஏற்பட்ட ஆனந்த உணர்ச்சி வெள்ளம், அவற்றுக்குத் தாமே ஓர் உரையிட வேண்டுமென்று திருவுள்ளம் கொள்ளச் செய்தது. தேசிகன் அவ்வாழ்வாரது அனுபவத்தையும், அற்புத மனப்பாங்கையும் தம் ஞானக் கண்ணால் கண்டார். விலட்சணமான உரை, தேசிகன் திருவாக்கினின்று அவதரித்தது நம்பாக்கிய விசேடம். அந்த உரை சாதாரணமான மற்ற நூல்கள் போல் நடையாடாமல் 'முனிவாகந போகம்' என்ற திருநாமத்துடன் காலட்சேபம் செய்தேயாக வேண்டிய ஒரு ரகசிய கிரந்தமாக வன்றோ திகழ்கின்றது!

குலசேகரரும், பாண்பெருமாளும்:

ஆழ்வார்களின் திருக்கூட்டத்தில் இருவரே பெருமாள் என வழங்கப் பெற்றனர். அவர்கள் குலசேகராழ்வாரும், திருப்பாணாழ்வாரும். குலசேகரப் பெருமாள், பாண்பெருமாள் என்றே சம்பிரதாயத்தில் அழைப்பு. இருவரும் பெரிய பெருமாளிடம் எல்லையற்ற ஈடுபாடு உடையவராயினும் சற்று வேறுபாடு உண்டு. குலசேகரப்பெருமாள் பெரிய பெருமாளையன்றி, மற்றும் சில அர்ச்சாமூர்த்திமூர்த்திகளிடமும் சில அவதாரங்களிலும் ஈடுபட்டுப் பேசியதுண்டு. பாண்பெருமாளோ பெரிய பெருமாளையன்றி வேறொன்றைக் காணாத கண்படைத்தவர். குலசேகரப் பெருமாள் 'திருவரங்கனை என்று காண்பேன்?' என்று பெருவிடாய் கொண்டதையே பயனாகக் கொண்டவர். பாண்பெருமாள் பெரியபெருமாளைக் கண்கூடாகக் கண்டு அவனிடமே ஒன்றிப்போனவர். குலசேகரப் பெருமாளது இராமபக்தியின் வெள்ளம் பெரிய பெருமாளையும், இராமபிரானாகவே அவருக்குக் காட்டியது. பாண்பெருமாளின் பக்தியோ, இராமனையும் மற்றும் உள்ள எல்லாத் திருமேனிகளையும் பெரிய பெருமாளாகவே இவர் கண்ணுக்குக் காட்டுகின்றது. இவர் திருவேங்கடத்தைப் பற்றிப் பேசியிருப்பது பரமபதத்தினின்று எம்பெருமான் திருவரங்கத்துக்குச் செல்லும்போது, நடுவில் வழியைக் குறிப்பிட்டதுடன் நிற்கின்றது. அல்லது நதியில் அமிழ்பவன் ஒருகாலைத் தரை

யில் ஊன்றிக் கொள்வதுபோலப் பெரிய பெருமாளின் அநுபவ வெள்ளத்தில் அகப்படும் ஆழ்வார் கைத்தாங்கலாகச் சற்றே திருமலையைப் பிடித்துக் கொள்கின்றாரோ? எனக் கருத உள்ளது.

அமலனாதிபிரான்:

இவ்வாழ்வாரது அருளிச் செயலை நோக்குவோம். எத்துணைச் சிறிய பிரபந்தம் இந்த 'அமலனாதிபிரான்'! எத்துணைப் பெருமையைப் பெற்றது!!! பாசுரங்களில் ஒரு கடினச் சொல் உண்டா? சொற்களின் சேர்த்தியின் இனிமை தான் சொல்லுக்கு எட்டுமோ! பாசுரங்களை அநுசந்திக்கும்போது அடியார்களுக்கு மலைத்தேனைப் பருகிக் கொண்டிருக்கும் உணர்ச்சியன்றோ எழுகின்றது! இந்நூல் மிக்க விரிவோ, மிகச் சுருக்கமோ இன்றிப் பொருள் அறிய மிக எளியதாய், அனைவர்க்கும் அரங்கன் திருமேனியைக் கண்முன் காட்டவல்லதாயன்றோ அவதரித்துள்ளது. மற்றைய பிரபந்தங்கள்போல் பிரிவுத்துயர் - தூதுவிடுதல்-பிறருக்கு உபதேசம்-பிறர் மதத்தைக் கண்டித்தல் முதலிய எதுவும் இன்றி, அரங்கனைப் பற்றிய அநுபவ இன்பத்தின் விளைவாகவேயன்றோ இப்பிரபந்தம் பிறந்துள்ளது!

திருவரங்கம்:

சக்கரவர்த்தித் திருமகன் சுக்கிரீவனைக் கொண்டு விபீஷணாழ்வானை அழைத்து வரச் செய்து தன்னிடம் சேர்த்துக் கொண்டதுபோல் திருவரங்கன் லோகசாரங்க முனிவரைக் கொண்டு திருப்பாணாழ்வாரைச் சுமந்து வரச் செய்து அழைத்துக் கொண்டான். சம்சாரமண்டலம்-பரமபதம் ஆகிய இரு விபூதிகளுக்கும் ஒப்பற்ற ஆபரணமாய்த் திகழ்கின்றது இந்தத் திருவரங்க விமானம். திருவைகுண்டம் பாற்கடல் முதலிய இடங்களைக்காட்டிலும் திருவரங்கமே அவனுக்குப் போக்கியமாய்த் தோன்றுகின்றது. அவன் பள்ளி கொள்ளுதற்கு ஏற்றவாறு திருவனந்தாழ்வான் கட்டிலாக அமைந்துள்ளான். பெரியபெருமாளது திவ்யாத்மசொரூபத்தைக் காண முடியுமா? யோகிகள் தாம் மிக்க முயற்சிகொண்டு, தம் ஞானக்கண்ணால் கண்டுகளிக்கப் பாரிக்கின்றனர். ஆழ்வார் தாம் அந்தச் சிரமத்தைக் கொள்ளாமல் தம் ஊனக்கண்ணாலே காணும்படி திருவனந்தாழ்வான்மீதுகிடக்கும் பெரியபெருமாளுடைய திவ்யமங்கள விக்கிரகத்திலேயே நாட்டம் கொள்கின்றார். அவர் கண்ணுக்கு அளவிட்டுக் கையால் எடுக்க முடியாத ஓர் அமுதப் பொய்கைபோல் காட்சிதருகின்றான், திருவரங்கன். அவனது தெய்வீகக் கிரீடத்தினின்று ஓர் அற்புதமணம் வீசுகின்றதாம். இவற்றையெல்லாம் அநுபவித்துச் சுவை கண்ட ஆழ்வார் இப்பெருமைகளையெல்லாம் அவன் சொரூபத்தில் காண முடியுமா? என்று சிந்திக்கின்றார்.

இரகசியத் திரயசாரம்:

ஆழ்வாரது அநுபவத்தின் பயனாகஎழுந்த பாசுரங்களில் வேதாந்தக் கருத்துக்கள் தாமாக வந்து புகுந்து கொள்கின்றன. முதல் மூன்று பாசுரங்கள் வேதங்களுக்கெல்லாம் முதன்மையான பிரணவத்தின் அகர-உகர-மகரங்களை வரிசையாக வைத்தே தொடங்குகின்றன. பாசுரங்களை முழுதும் கூர்ந்து நோக்கினால், திருமந்திரம்-துவயம்-சரமசுலோகம் ஆகிய மூன்று ரகசியங்களின் சாரார்த்தமும் புலனாகும். அதை விரிக்க இது இடமன்று.

திருவடிகள்:

இராமபிரானது பர்ணசாலையின் வாயிலில் பரதாழ்வான், தன்மீது ஏற்றிய அரசாட்சிச் சுமையையெடுத்தாலன்றி அகலமாட்டேன் என்று படுகாடு கிடந்தான். இங்குத் திருவரங்க விமானத்தின்கீழ்ப் பெரிய பெருமாள் சேதநர்கள் தம் நல்வாழ்வுக்கு உரிய சுமையைத் தன்மீது வைத்தாலன்றி அகலேன் என்று படுகாடுகிடக்கின்றார் போலும்! அத்தகையவனை ஆழ்வார் கண்கூடாகக் காணும்போது அவர் கண்ணும் மனமும் அவன் திருவடித் தாமரைகளிலேயே செல்லுகின்றன. ஓடுபவனது காலைப்பிடித்துக் கட்டிவிட்டால் அவன் அகல முடியாதே! அடியார்கள் ஈடுபடும் துறையே திருவடிதானே! இவன் பரமபதத்திலேயே எழுந்தருளியிருந்தால் இப்பொழுதே போய் அநுபவிக்க முடியுமா? அந்த அநுபவத்தை இங்கு உள்ளவர்க்குக் கொடுக்கவேண்டுமென்ற குளிர்ந்த திருவுள்ளத்துடன், இங்குவந்து பள்ளி கொண்டுள்ள எளிமையில் ஆழ்வார் மனமுருகுகின்றார். அப்பொழுது திருவேங்கடமலையின் நினைவு வருகின்றது. எதற்காக? உடலை வருத்திக்கொண்டு மலையேறிப் போய் சேவிக்க வேண்டும்படி அங்கு நிற்கின்ற நிலையும், பரமபதம் போல் கடினமானதே என்று காட்டுவதற்காக. அந்தச் சிரமமும் வைக்கக்கூடாதென்று கருணை கொண்டு திருவரங்கத்திலேயே வைகுண்டத்தைக் காட்டிக்கொண்டு பெரியபெருமாள் கிடக்கும் நிலையைக் கண்டு வியக்கின்றார் ஆழ்வார். மண்டபங்கள் - மாளிகைகள் - நதிகள் - பொய்கைகள் - மதில்கள் முதலிய சகல வைபவங்களோடும் திருவரங்கத்தையே பரமபதமாகக் காட்டிக்கொண்டு பள்ளிகொண்டுள்ள பெருமாள் திருவடிகளில் வைத்த கண்ணை வாங்க முடியாமல் தவிக்கின்றார் ஆழ்வார். அவற்றை அநுபவிக்க அநுபவிக்க மேன்மேலும் இனிமை வளர்ந்து கொண்டே போகின்றதாம். அவற்றைப் பெறுதற்கு அவையே உபாயமாம். அநுபவித்து மகிழ்ப் பாங்கான பலமும் அவையேயாம். அவற்றை சேவித்தாலே சகல பாபங்களும் கழியுமாம். ஆழ்வாருக்குத் தம்முயற்சி சிறிதும் இன்றி அத் திருவடிகள் தாமாகவே வந்து தம் கண்ணினுள் புகுந்துகொண்டன என்கின்றார். அவற்றின் சேர்த்தியழகைத் தம் கண்ணாலே கண்டால் திருஷ்டிதோஷம் வருமோ என அஞ்சி ஆழ்வார் தம் கண்ணை மூடிக்கொண்டாலும், விடாது தம் கண்ணினுள் காட்சி தருகின்றனவாம். பிரமன் முதலிய தேவர்களுக்கும் சநகர் முதலிய மகா யோகிகளுக்கும் எட்டாத அத் திருவடிகள், தம்முடைய ஊனக் கண்ணுக்குள் தாமாகப் புகுந்து சேவை தருவதில் வியப்புக்கு ஆளாகின்றார்.

பீதக ஆடை:

அரங்கன் திருவடிகளிலே சென்ற ஆழ்வாரது உள்ளம் அவற்றின் செம்மை நிறத்துக்கு ஏற்றவாறு, அவன் திருவரையில் விளங்கும் பீதாம்பரத்துக்குத் தாவுகின்றது. எங்கெங்கெல்லாம் ஓடுகின்றது அவரது உள்ளம்; நித்திய சூரிகளும் திருவரங்கனைக் கண்டு இங்கேயே நிலையாக இருக்க விரும்பி, மரம் செடி முதலிய தாவர வடிவு கொண்டு சோலைகளில் தங்கியுள்ளார்களாம். பிரமன் முதலிய தேவர்கள் வந்து திருவாராதனம் செய்யும் நிலையில் பள்ளிகொண்டு, திருக்கண் வளரும் காட்சியைக் கண்டால், இவனே சர்வேசுவரன் என்று எளிதில் கூறமுடியுமாம். அவனது கரிய திருவரையில் சாத்தியுள்ள திருப்பீதாம்பரத்தைச் சேவிக்கும்போது, மதுகைடபரைக் கொன்றபொழுதில் அவர்களது உதிரம் பட்டு ஆடை சிவந்ததோ என்று தோன்றுமாம். இந்தப் பீதக ஆடையை விட்டுத் தம்சிந்தை அகலமாட்டாதென்று கூறி மகிழ்கின்றார் ஆழ்வார்.

திருவுந்தி:

பின் ஆழ்வார் திருவுள்ளம் பீதாம்பரத்துக்கு மேலே காட்சிதரும் திருவுந்திக்குச் செல்லுகின்றது. திருவரங்கத்திலேயே ஈடுபட்ட இவ்வாழ்வார் இருமுறை திருவேங்கடத்தைக் குறிக்கின்றார். எதற்காக? அதன் அருமையையும், திருவரங்கத்தின் எளிமையையும் உலகுக்கு வெளியிடுவதற்கே. திருவேங்கடமலையில் குரங்குகள் கிளைக்குக் கிளை தாவுவதையும் வருணிக்கின்றார். இவ் உவமையைக் கொண்டு மக்கள் அற்ப பலன்களையே விரும்பி, ஒவ்வொன்றாக அனுபவித்துக்கொண்டே போவதைச் சுட்டுகின்றார். அத்தகையவரும் திருமலையில் ஈடுபடுகின்றனராம். முக்தர்களும் நித்தியர்களும்கூடத் திருமலைக்கு வந்து ஏற்ற சரீரங்களை எடுத்துக்கொண்டு திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் செய்கின்றனராம். ஆயினும் என்ன?' ஏற்றமுள்ள அளவும் ஏறியாக வேண்டும்படி மிக்க தூரத்தில் அன்றோ திருமலை இருப்பது! அவ்வாறின்றி இத் திருவரங்கம் எல்லாரும் கிட்டலாம்படி எளிதாயுள்ளதே! இங்கும் நித்திய சூரிகளுக்கெல்லாம் பிரதிநிதியாகத் திருவனந்தாழ்வான் மென்மை-நறுமணம்-குளிர்ச்சி எல்லாம் பொருந்திய திருமேனியுடன் பெருமாளுக்குப் பள்ளியாக அமர்ந்துள்ளானே!' என்று ஈடுபடுகின்றார். பின்னும் அவனது பீதாம்பரமே ஆழ்வார் கண்முன் நிற்கின்றது. அதைக் கண்ணுற்றாலே அஞ்ஞானமெல்லாம் நீங்கித் தாபங்களும் ஒழியுமாம். அதற்குமேல் அவனது திருவுந்தி, காட்சி தருகின்றது. அதைச் சுற்றிலும் பீதாம்பரத்தின் செம்மைக்கு ஏற்றவாறு ஒரு சிவந்த அற்புதத் தாமரைப்பூ. அவனது திருவுந்தி அந்தப் பூவின் மேல், தாய் வயிற்றில் பிறவாத பிரமனைப் படைத்துவிட்டு ஒப்பற்ற அழகுடன் விளங்குமிகின்றது. அண்டத்துக்கு உட்பட்ட எல்லாப் படைப்புக்கும் அதுதானே காரணமாய் நிற்கின்றது! தம்முடைய பிராணனும் ஆத்மாவும் அந்தத் திருவுந்தியின் இனிமையை அனுபவிக்கப் பாரிக்கின்றதென்று கூறிமகிழ்கின்றார் ஆழ்வார்.

உதரபந்தனம் :

பின்னர் ஆழ்வாரின் கண்ணும் மனமும் பெரியபெருமாள் திருவுந்திக்கு மேல் அணிந்துள்ள உதரபந்தனம் என்னும் திருவரைப்பட்டிக்கு ஓடுகின்றன. அவன் பள்ளிகொண்டுள்ள அழகில் மயங்கி வண்டுகள் காலத்துக்கு ஏற்ற பண்களைப் பாடுகின்றனவாம். மயில்கள் வண்டுகளின் பாட்டுக்கு ஏற்றவாறு நடனமாடுகின்றனவாம். அந்த வண்டுகளும் மயில்களும் பெரிய பெருமாளை அநுபவிப்பதற்குப் பரமபதத்தினின்று வந்த முக்தர்களாகவும், நித்யர்களாகவும் ஆழ்வார் கண்ணுக்குப் புலப்படுகின்றன. கிருஷ்ணாவதாரத்தில் யசோதை கயிற்றால் கட்டிய தழும்பு திருவரங்கன் வயிற்றில் இன்னும் தெரிகின்றதாம். இந்தக் கட்டிய தழும்பைச் சேவிப்பவர்களுக்கு சம்சார பந்தம் நீங்கிவிடுமாம். அநுபவம் போகிற போக்குக்கு வரையறைதான் உண்டோ? அந்தத் திருவரைப்பட்டி தமது உள்ளத்திலேயே உலவுகின்றதென்கிறார்.

திருமார்பு :

ஆழ்வாரது திருக்கண், மெல்ல மெல்ல மேலே திருமார்புக்குச் செல்லுகின்றது. விரிவாய் அநுபவிப்பதற்கு ஏற்ற அகன்ற திருமார்பு. அதிலேயே கண்ணும் உள்ளமும் சுற்றிச் சுழன்று கொண்டேயிருக்கலாமே! அதுவே பிராட்டியின் அந்தப்புரம். அதில் பிராட்டி வீறுடன் அமர்ந்து பெருமானை ஆட்டிவைக்கின்றாள். அவளைச் சுற்றித் திருமார்பில் ஓர் அழகிய திருவாரம். ஆழ்வாரை மயக்கத் திருமார்புக்கு வேறு என்ன வேண்டும்? அந்த நிலையிலேயே பிராட்டியும், திருவாரமுமாகத் திருவரங்கனைத் தம் உள்ளத்துக் கொள்கின்றார் ஆழ்வார். வேறு பயனில் ஆசைகொண்டு திரிந்த தம் பாபங்களையெல்லாம் போக்கித் தம் உள்ளத்தைத் தூயதாக்கிக் கொண்டு, அரங்கன் தானே அங்குப் புகுந்து கொண்டானாம். திருடர்கள் சூழ்ந்துகொண்டுள்ளதன் வீட்டை, உடையவன் அவர்களை ஓட்டிவிட்டுப் புகுவது போல் உள்ளதாம், அரங்கனது செயல். வழி தப்பிச் சென்ற தம்மை இழந்த எம்பெருமான், மீண்டும் திருத்திப் பணிகொண்டு தம்மைப் பெறுதற்காக, அவன் தானே கொடிய தவம் புரிந்திருக்க வேண்டுமாம். தம்மை ஆட்கொள்வதில் அவ்வளவு சிரத்தையாம் அவனுக்கு. இது மிகைப்படுத்திக் கூறுவதாயின், வேறு வழி காண்கின்றார் ஆழ்வார். ஒரு கால் தாமே அவனது இத்தகைய அருளைப்பெற முன்பு கடுந்தவம் செய்திருக்கக்கூடுமோ என்றும் திகைக்கின்றார். இங்ஙனம் தம் விஷயத்தில் ஒரு விலட்சணமான சங்கல்பத்தைச் செய்து, தம்மை அடிமைகொண்டதற்குக் காரணம், பிராட்டியின் தூண்டுதலாகவும் இருக்கக் கூடுமென்று கருதுகின்றார். அடியார்களின் குற்றங்களைப் பொறுக்கும்படி செய்யவல்ல பெரிய பிராட்டி உறையுமிடம் என்பதால், பெருமிதம் கொண்ட அவனுடைய திருமார்பு, பல்வகையிலும் தம்மை வசப்படுத்தி ஆட்கொண்டது என்கின்றார் ஆழ்வார்.

திருக்கழுத்து :

அடுத்து, பெரிய பெருமாள் திருக்கழுத்து, ஆழ்வார் கண்ணுக்குப் புலனாகின்றது. திருக் கழுத்துக்கும் ஒருவகையில் பெருமிதம் உண்டு. பிராட்டி எங்கு உறைந்தால் என்ன? அவள் திருக்கையால் அணைத்துக்கொள்வது தன்னைத் தானே என்பதாம் அது. திருக்கழுத்துப் புரியும் செயல்தான் எத்தகையது? பிரளயகாலத்தில் உலகில் உள்ள காரியப் பொருள்கள் அனைத் தும், கடலில் மூழ்கிவிடாதவாறு பெருமாள் தன் வயிற்றில் வைத்துக் காத்தால்தானே பின் அவற்றைப் படைக்கமுடியும்! அதற்கு ஏற்ப அனைத்தையும் விழுங்கித் திருவயிற்றில் கொண்டு சேர்க்கின்றது கழுத்து. அண்டத்தி னுள் அகப்பட்ட தேவர்கள்-அண்டங்கள்- அவற்றை மூடி நிற்கும் ஆவரணங்கள்-பூமி-குல மலை-மற்றும் உள்ள எல்லாப் பொருள்களை யும் அவன் திருக்கழுத்து விழுங்கி வயிற்றினுள் சேர்க்கின்றது. இப்பொழுது சம்சார சமுத்தி ரம் தம்மை விழுங்கிவிடாதவாறு நல்லறிவைக் கொடுத்து வாழ்வித்தருளிய பெருமாள் திருக் கழுத்து, தன் அழகைக் காட்டித் தம்மை வசப் படுத்திக் கொண்டதற்குப் பெருமகிழ்ச்சி கொள் கின்றார் ஆழ்வார்.

திருமுடியும், திருவாயும் :

பின்பு ஆழ்வார் சிந்தை, திருக்கழுத்தினின்று புறப்பட்டுத் திருமுடியளவும் செல்லுகின் றது. அநுபவம் மிகப் பெரிதாகிவிட்டது. அதில் மூழ்கித்தத்தளிக்கின்றது ஆழ்வார் திருவுள்ளம். ஒரு துணையைத் தேடுகின்றது. திருவாழி திருச் சங்குகளை ஏந்தும் திருக்கைகள், பிடிகொடுத்து மெல்லச் சிந்தனையைக் கீழே இறக்கிவிடுகின் றன. அப்பொழுது வழியில் புன்முறுவலுடன் விளங்கும் அவனுடைய திருப்பவள வாய், தன் அழகைக்காட்டி அச்சிந்தையைத் தன்பால் இழுக்கின்றது. சிவந்த அந்தத் திருப்பவழவாய் அநுபவிப்பதற்கு ஏற்ற நிறமும் இனிமையும் உடைய ஒரு பழமாய்க் காட்சி தருகின்றது. அதற்கும் ஒரு செருக்கு உண்டு. அடியார்களுக்கு அபயமளிக்கும் 'கைவிடேன்' என்ற சொல்லும் தன்னிடமிருந்து தானே பிறக்கவேண்டும் என் பதுவே அந்தச் செருக்கு. அதைத் திறந்தால் ஏழுலகையும் காணலாமே; 'அந்தத் திருப்பவழ வாய் எமது உள்ளத்தை முழுதும் கவர்ந்து கொண்டதே! அநுபவத்தில்தான் எத்தகைய இன்சுவை. அனுபவித்துச் சீரணமாக்கிக் கொள்ள முடியவில்லையே! ஐயோ! என்ன செய்வேன்? என்று இன்பப்போதையில் அகப் பட்டுத் தடுமாறுகின்றார் ஆழ்வார்.

திருக்கண்கள் :

பின் ஆழ்வாரிடம் திருவரங்கன் திருக்கண் கள் தலையை நீட்டுகின்றன. முதன் முதலாகக் கண்கள் தாமே தங்கள் அழகையும் குளிர்ச்சி யையும் காட்டி அவன் திருவடிகளில் ஆழ்வாரை விழுமாறு செய்தன! மேலும் பெருமாளது அபயச் சொல்லும், கைவிடாத உறுதிச் சொல் லும், கிடைத்து வாழ்வது தங்கள் நோக்கும் சேருவதால் தானே! இந்தப் பெருமிதத்துடன் தாமரைக் கண்கள், வேறொன்றில் ஆழ்வாரது உள்ளம் செல்லாதவாறு தம்மிடமே அடிமைப் படுத்திக் கொண்டன. அவன் திருமுக மண்ட லமோ, சந்திரனும் தாமரையும் ஒன்று சேர்ந் தாற்போன்ற பேரழகுடன் பொலிகின்றது. அத் திருமுகத்தில் இரண்டு திருக்கண்கள், நீலமணி போன்ற கருவிழிகளின் நிறமும் கலந்து கரு நெய்தல்போல் விளங்குவன. அவற்றிலுள்ள செவ்வரிகளை நோக்கும்போது, வேறு தெய் வத்தையும் வேறு பயனையும் நாடாத பெரி யோர்மீது, கண்களுக்கு உள்ள அன்பின் அள வைக் கண்டறியும் அளவுகோல் போல் உள்ளன வாம். அடியார்களைக் கண்ட மகிழ்ச்சியால் அப்பொழுதே மலர்ந்த தாமரை போன்ற திருக்கண்களின் பெருமையிலும் இனிமையிலும் ஆழ்ந்த ஆழ்வார், வேறொன்றை அறியவோ செய்யவோ தகுதியற்ற பித்தராகின்றார்.

திருமேனி :

இப்படி ஆழ்வார் திருவரங்கனது ஒவ் வோர் அவயவமாக அநுபவித்துப்பேசி மகிழ்ந் தார். இவ்வனுபவத்தின் போதே முழுத் திரு மேனியையும் நோக்குகின்றார். அப்பொழுது பிராட்டிக்குத் திருக்கோயிலாக அமைந்த திரு மார்பு மறுபடியும் புலனாகின்றது. அதில் மிகப் பெரிய இரத்தினங்கள் பதித்த ஒரு மாலை கண்முன் நிற்கின்றது. அதுபிராட்டியின் கோயி லுக்கு அமைத்த பிராகாரம்போல் அழகு வழிந்து நிற்கின்றது. ஒற்றை வடமும், மூன்று வடமும், ஐந்து வடமுமாக உள்ள முத்துமாலை களும் திருமார்பில் விளங்க, கண்டாரின் தாபத் தைப் போக்கும் காளமேகம் போன்ற பெரு மாளின் திருமேனியை முழுதும் காண்கின்றார் ஆழ்வார். கண்டு கொண்டே நிற்கின்றார். முன்பு அவயவங்களின் அநுபவத்தில் சற்றே நிறைவு கண்ட நிலை மறந்து, முழுத் திரு மேனியையும் காணும்போது, ஆழ்வார் உண்மை நிறைவைக் காணமுடிகின்றது. இப்பொழுது இதற்குத் தடை ஏதாவது வருமோ என்ற அச் சம் ஆழ்வாருக்கு, இந்த அநுபவபூர்த்திக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டேயிருக்கும்படி ஆகி விட்டதென்கிறார்.

காளமேகனின் வெண்ணெய் மணம் :

ஆழ்வார் திருவாக்கினின்று அவதரித்த இப்பிரபந்தத்தின் கடைசிப் பாசுரத்தில் தமது ஊரையும் பெயரையும் குறிக்க மறந்துவிடும் படி, ஓர் அற்புதமான மனப்பாங்கு ஆழ்வாருக்கு. அனுபவகனமான தம் பாசுரத்தில் தமது ஊருக் கும் பெயருக்கும் இடம் தருவது வீணெனக் கருதினார் போலும். அவை பற்றும் இடத்தி லும் அநுபவத்தையே வாரி வழங்க எண்ணி னார். ஒரு காளமேகம் கடல் நீர் முழுவதையும் பருகி, இரண்டு காவிரி நடுவில் வந்து படிந் துள்ளதோ என்னும்படியுள்ளதாம், அவன் திரு மேனி. நீரென்றும் தரையென்றும் வேற்றுமை பாராது, எங்கும் நீரையே பொழியும் மேகம் போல், தாவரம்-சங்கமம், அறிஞர்-மூடர்

என்ற வேற்றுமைகளையெல்லாம் பாராது, கருணை வெள்ளத்தை எங்கும் பொழிகின்ற தாம் இந்த அரங்கனென்னும் காளமேகம்'. அறிவுக் குறையுடைய இடையர்களையும் இடைச்சியரையும் ரட்சித்துத் தான் சர்வலோக ரட்சகன் என்பதைக் காட்டிக் கொண்டது போதாதெனக் கருதி, அவர்களில் ஒருவனாக வும் வடிவு கொண்டவனாம் பெரிய பெருமாள். வைகுண்டத்தில் நித்தியர்களும் முக்தர்களும். பரமபதநாதனுக்குத் திருமஞ்சனம் செய்து திரு மாலைகளையும் தூபத்தையும் சமர்ப்பித்துத் தளிகை சமர்ப்பிக்கப் பாரிக்கும்போது, இங்குக் கண்ணனாய் வந்து, இடைச்சிகள் சேர்த்து வைத்த வெண்ணெயைக் களவு கொண்டு அமுதுசெய்து, அடியார்கள் உகந்த பொருளே தனக்கும் உகந்ததென்று காட்டினானாம். அந்த வெண்ணெயின் இடைச் சாதிக்கு உரிய மொச்சை மணம், இப்பொழுதும் பெரியபெரு மாள் திருமுகத்தில் வீசுவதைக் காண்கின்றார் ஆழ்வார். அவன் வெண்ணெயைக் களவிட்டது போல் தமது தமது உள்ளத்தையும், வெண் ணெயாகக் கருதிக் கவர்ந்து கொண்டான் என் கிறார். நித்யசூரிகள் கூடத் தமது இடத்தை விட்டு இங்கு வந்து சேவிக்கும்படி பரமபோக் கியமான இத்தலத்திலே பள்ளி கொண்ட பெரியபெருமாள் சொரூபத்தாலும் சுபாவத் தாலும் இழிவான தம் கண்ணுக்குத் தன் வடி வழகையும் குணங்களையும்காட்டி ஓர் அமுத மாகத் தமக்கு இனியனாய் விளங்குவதை நினைத்து நினைத்து, உள்ளம் உருகுகின்றார் ஆழ்வார்.

கண்கள் மற்றொன்றைக் காணா :

இங்ஙனம் தமது முயற்சியின்றியே நித்ய தரித்திரனுக்குப் பெருநிதி கிடைத்தாற்போல், தமக்கு அநுபவிக்கக் கிடைத்துள்ள திருவரங் கனைக் கண்ட தம் கண்கள், வேறு எதையும் காணப் பொறுக்கமாட்டாவாம். அவனிடமே ஈடுபட்ட கண்கள் அவனுக்குக்கைங்கரியம் செய்ய ஆசைகொண்டு, அருகே வந்து நிற்கும் பிரமன் முதலிய தேவர்களைக்கூடக் காண மாட்டா என்கிறார். மிகக் கூறுவானேன்? திரு மலை முதலிய இடங்களில் எழுந்தருளியுள்ள அர்ச்சைத் திருமேனிகள்-இராமன் கிருஷ்ணன் முதலின விபவத் திருமேனிகள் - இவற்றிலெல் லாம் உள்ள இனிமையை முழுதும் ஆழ்வார் கண்கள், பெரியபெருமாள் திருமேனி ஒன்றிலேயே கண்டுவிட்டனவாம். ஆதலின் பரவாசு தேவரூபம்-வியூகத் திருமேனிகள் -விப வத் திருமேனிகள் எல்லாவற்றையும் சேர்த்து ஆழ்வார் கண்ணெதிரே காட்டினாலும், அவற் றைக் காணத் தம் கண்கள் விரும்பமாட்டா வாம். தாய்ப்பாலையே பருகிவளரும் குழந்தை களுக்கு வேறு உணவுப்பண்டம் சுவைக்காத உவமையைத் திருவுள்ளத்திற்கொண்டு, தம் கண்களின் சிறந்த மேலான ஒருமைப்பாட்டு நிலையைக் கொண்டாடிக் கொண்டே பிரபந் தத்தைத் தலைக்கட்டியருள்கின்றார் திருப்பா ணாழ்வார்! இங்ஙனம் பெரிய பெருமாளைப் பாண்பெருமாள் கண்டதுபோல் வேறு யாரே னும் கண்டு அனுபவித்தவர் உண்டா? என்பது சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

அட்ட வீரட்டத் தலங்கள்!

இறைவன் வீரச்செயல் நிகழ்த்திய தலத்தினை வீரட்டானம் (வீரம் — ஸ்தானம்) என்பர். அவை எட்டுத் தலங்களில் நிகழ்ந்தமையினால், அவ்வெட்டுத் தலங்களையும் அட்டானம் (அஷ்ட ஸ்தானம்) எனவும் கூறுவதுண்டு. வீரச்செயல்கள் நிகழ்ந்த எட்டுத் தலங்களையும், அட்டவீரட்டானம் (அஷ்டம்—வீரம்—ஸ்தானம்), வீரட்டம் (வீரம்—அஷ்டம்) என்றும் நூல்கள் குறிப்பது உண்டு. ''அட்டானம் (அஷ்டம்—ஸ்தானம்) என்று ஓதிய நால் இரண்டு'' என்பது தேவாரம்.

	வீரச்செயல்கள்	தலங்கள்
1.	பிரமன் தலை அரிந்தது	திருக்கண்டியூர்
2.	அந்தகாசுரனை நலிந்தது	திருக்கோவலூர்
3.	திரிபுரம் எரித்தது	திருவதிகை
4.	தக்கனைத் தடிந்தது	திருப்பறியலூர்
5.	சலந்தராசுரனைக் கொன்றது	திருவிற்குடி
6.	யானையைத் தோல் உரித்தது	திருவழுவூர்
7.	காமனைக் காய்ந்தது	திருக்குறுக்கை
8.	இயமனை எற்றியது	திருக்கடவூர்

''பூமன் சிரம் கண்டி; அந்தகன் கோவல்; புரம் அதிகை;
மாமன் பறியல்; சலந்தரன் விற்குடி; மா வழுவூர்;
காமன் குறுக்கை; இயமன் கடவூர்; இக் காசினியில்
பூமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே''

[பூமன்—பிரமன். மாமன்-தக்கன். மா-யானை, கஜாசுரன். கொன்றையும் திங்களும்சூடி-சிவபெருமான். சேவகம்-வீரச் செயல்].

—ஆசிரியர்.

குன்றைமுனிவரர்

மகாவித்துவான்
திரு. சி அருணைவடிவேலு முதலியார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழகம் தொன்றுதொட்டே, உய்யும் நெறியை உலகிற்கு இனிதுணர்த்தும் அருளாளர்களை வழிவழியாகப் பெற்று வரும் மாண்புடையது. அவ் அருளாளர்களில் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் அநபாயச் சோழனுக்கு அமைச்சுரிமை பூண்டு, அவனுக்கும் நாட்டிற்கும் பொருளியலில் மட்டுமின்றி, அருளியலிலும் அளப்பரும் பெருமையை அடைய ஆக்கத்தை அளித்தவர்களில் அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயரை உடைய சேக்கிழார் நாயனார் ஒருவராவர். மக்களில் பெரியோர், பெரியோராய் விளங்குதல் ஒருபக்கம் இருப்பினும், பெரியோரைப் 'பெரியோர்' என்று உணர்ந்து போற்றுவோர் அவரினும் பெரியோராவர் என்று ஒரு கருத்தைக் கூறுதல் உண்டு.

''சிறியார் உணர்ச்சியுள் இல்லை; பெரியாரைப்
பேணிக்கொள்வேம் என்னும் நோக்கு''

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

என்னும் திருக்குறள்களும் இக்கருத்தை ஒருவாறு தெரிவிப்பனவேயாம். செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்து பெரியாரான திருத்தொண்டர்களைப் 'பெரியர்' என உணர்ந்து எடுத்தோதி அவர்கட்கும், அவர்கள் தம் அடியார்க்கும் 'அடியேன்' என வணங்கிப் போற்றி, திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்த நம்பியாரூரர், அப் போற்றுதலாலேயே, அத் திருத்தொண்டருள் ஒருவராய், அவரினும் மிகப் போற்றப்படுதல் இங்கு நினைவுகூரத் தக்கது.

இம்முறையிலே திருத்தொண்டத் தொகையின் வகையை அருளிச் செய்த நம்பியாண்டார் நம்பிகளும் வழிநிலைப் பெரியவராய் விளங்குகின்றார். இந்நிலையில் திருத்தொண்டத் தொகை விரியாகிய பெரியபுராணத்தை அருளிச்செய்த சேக்கிழாரது பெருமை அளத்தற்கு அரியதாகும். இதனை,

''அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடியார் புகழ் கூறுகேன்''

என அவரே தாம் விளக்க எடுத்துக்கொண்ட பொருளின் பெருமையை முதற்கண் குறிப்பிடுகின்றார். இத்தகைய அளவிலாப் பெருமையை ஓர் அளவுபடுத்தி இனிதுணர்த்திய சேக்கிழாரது பெருமையை உள்ளவாறு உணர்ந்து அதனை ஒரு புராண வடிவில் உலகிற்கு உணர்த்திய பெருமை, சந்தானாசாரியருள் நான்காமவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர்க்கே உரியது. அவர் அப்புராணத்துடன் கூடிய பாடலுள் ஒரு சிலவற்றை இங்கு நாம் ஓதியுணர்தல் இன்றியமையாதது.

''ஓர் ஊரோ ஒருதிசையோ ஒருபதியோ தம்மில்
ஒருமரபோ ஒருபெயரோ ஒருகாலந் தானோ
பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ பன்மைப்
பெருங்கதையோ பேர்ஒன்றோ அல்லவே இதனை
ஏர் உலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்'

என்று இறைவன் முதல் அடி எடுத்துக் கொடுத்தருளக் கொண்டு பாருலகில் ''நாமகள்நின்றெடுத்துக் கை நீட்டப் பாடி முடித்தனர் தொண்டர் சீர்பரவ வல்லார்''(1).

'ஒரு பெயரோ' என்றது பாட்டுடைத் தலைவர் பெயரையும், 'பேர் ஒன்றோ' என்றது கதையின் பெயரையுமாம். பெரிய புராணத்துள் வேறுவேறு பெயருடைய புராணங்கள் பல அடங்கியிருத்தலைக் காண்க.

சேக்கிழார் பாட எடுத்துக்கொண்ட பொருளின் அளப்பருந் தன்மையை, இவ்வாறு எண்ணி வியக்கின்றார் உமாபதிதேவர். இனி அப்பொருளைப் பாடுதலின் அருமையைப் பின்வருமாறு சிந்தித்து அவர் மருட்கை எய்துகின்றார்.

கருங்கடலைக் கைநீத்துக் கொளல் எளிது;முந்நீர்க்
கடற்கரையின் நொய்ம்மணலை எண்ணி
அளவிடலாம்;
பெருங்கடல்மேல் வரும் திரையை ஒன்றிரண்டென்
றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட
லாகும்;
கருங்கடலின் மீனை அளவிட லாகும்; வானத்
தாரகையை அளவிடலாம்; சங்கரன்தாள்
தமது
சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட
நம்
சேக்கிழார் கெளிதலது, தேவர்க்கும் அரிதே

சேக்கிழாரது அருஞ்செயலைத் தம் கூற்றாகவே இங்ஙனம் வியந்து பாராட்டிய உமாபதிதேவர், பெரியபுராணத்தை அதன் அரங்கேற்றத்தில் முற்றிலும் முறையாகக் கேட்

டுணர்ந்த அவைக்களப் பெரியோர்கள் சேக்கிழாரைப் புகழ்ந்து கூறிய கூற்றாகப் பின்வருமாறு சேக்கிழாரது பெருமையைப் புலப்படுத்தியுள்ளார்.

''மதுர இராமா யணகதை உரைசெய்த
  வான்மீகி பகவனும் ஒப்பல்லன்;
விதிவழி பாரதம் உரைசெய்து கரைசெய்த
  வேதவியா தனும் ஒப்பல்லன்;
சிதைவற ஆயிரம் நாவுடன் அறிவுள
  சேட விசேடனும் ஒப்பல்லன்;
பொதிய மலைக் குறுமுனிவனும் ஒப்பலன்
  புகழ்புனை குன்றை முனிக் கென்பார்'' (2)

இதில் இல்லறத்தில் நின்று அமைச்சுத் தொழில் புரிந்த சேக்கிழாரைத் துறவிகளாம் வான்மீகியும் வேதவியாசரும் அகத்தியரும் ஆகிய முனிவர்களோடு ஒப்பிடுதல் பொருந்துமோ என ஐயுறுதல் வேண்டா என்றற்குச் சேக்கிழாரைப் பிறவாறு கூறாமல், 'குன்றை முனி' என்றே கூறினார். அதனால், சேக்கிழாரது உள்ள நிலையும், 'விளங்கிழையார் இருவரொடு முயங்கியிருந்தும் பெருமிழலைக் குறும்பர் எனும் பரம யோகியரால் பெரிது உவந்து வழிபடப்பெற்ற(30) சுந்தரமூர்த்தி நாயனாரது உள்ளத்தின் சிவயோகநிலை போன்றதே என உமாபதி தேவர் கருதினமை நன்கு தெளிவாகின்றது.

திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தற்குச் சுந்தரருக்கு அடி யெடுத்துக் கொடுத்த இறைவன், அவ்வாறே அத்தொகையின் விரியை அருளிச் செய்யச் சேக்கிழாருக்கு அடியெடுத்துக் கொடுத்தமையால், அவ் இருவரது உள்ள நிலைகளும் ஒரு திறத்தனவாய் இருந்தமை நன்கு பெறப்படுதலால் சேக்கிழாரை உமாபதி தேவர் 'முனிவர்' எனக் கூறியதற்குத் தக்க சான்று உளதேயன்றோ! இவ்வுண்மையை உணர்ந்தன்றோ திருத்தொண்டர் புராண அரங்கேற்று விழா முடிந்தபின், அவை கூடியிருந்த பலதுறைப் பெரியோர்களும் இப்புராணம் 'தோடு செய்த திருநெறிய செந்தமிழோடொக்கும்' என்று ஒருமுகமாகக் கூறிப் பன்னிரண்டாந் திருமுறையாகச் செப்பேடு செய்துவைத்தனர்.

இங்ஙனம் சேக்கிழாரை 'முனிவர்' எனப் போற்றியவர் யார்? சிவபெருமானால் சுந்தரருக்கு முதல் முதலாக எடுத்துக் கொடுத்த அடியில் குறிக்கப்பட்ட தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர் என்பதை ஊன்றியுணர்த்தல் வேண்டும். அவர் அநபாய சோழன் சேக்கிழாருக்குத் தனது இருகைகளாலும் கவரி வீசிய நிகழ்ச்சியைக் கூறுமிடத்தில்,

'காவல னார்இவர்; தவர்இவர், காவலர்
  கவரி யிடத்தகு மோஎன்பார்'

'சேவையர் காவ லனார் சிவ மான
  சிறப்பிது நல்ல சிறப்பென்பார்'

எனவும் கூறினார்.

திருத்தொண்டர் புராணத்துடன் சேக்கிழார் யானைமேல் உலாப் போந்த காட்சியைக் கண்டவர்களில் சிலர், 'முடியுடை மன்னராகிய நம் அரசர், தம் ஆட்சிக்கு உட்பட்ட ஒருவர்க்குக் கவரி வீசுதல் தக்கதோ' எனக் கூற, வேறு சிலர், 'நாட்டுக் குடிமக்களுள் நால்வகைக் குலத்தில் நான்காம் குலத்தவர்தாம் இவர். ஆயினும் இவர் சிவமாந் தன்மை எய்திவிட்டார் ஆதலால், இவருக்கு அரசர் கவரி வீசக் கடமைப்பட்டவரே' என விளக்கம்தந்தமையை மேற்காட்டிய பகுதியால் உமாபதி சிவாசாரியர் கூறினார். அதனால், அவர் தில்லைவாழ் அந்தணராகிய தாம், நான்காம் குலத்தவராகிய சேக்கிழாரை 'முனிவர்' எனக் கூறிப் போற்றச் சிறிதும் தயங்கவில்லை.

அந்தணர்களையே 'முனிவர்' என்றல் வழக்கம். ஆயினும், அந்தணர்களுள் மேலாய், 'திருவுடைய அந்தணர்' எனப் போற்றப்படும் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர், சேக்கிழாரை 'முனிவர்' எனக் கூறிப் போற்றினார். அவர் சேக்கிழாரை முனிவர் என்று மட்டுமா கூறினார். முனிவர்களுள் மேம்பட்டு 'முனிவரர்' என்று போற்றப்படுகின்ற மிகப் பெரிய முனிவர்களோடு அவரைப் புடைபட வைத்து, அவரினும் மேலானவர் எங்கள் குன்றை முனிவரர் என்றன்றோ கூறினார்.

உமாபதி சிவாசாரியர் இவ்வாறு கூறிவிட்டதனால், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தமது சேக்கிழார் பிள்ளைத் தமிழில் சேக்கிழாரை மிகத் தாராளமாக ஒரு முறைக்குப் பத்துமுறை 'குன்றை முனி' 'குன்றைமுனி' எனப் புகழ்ந்து போற்றினார். (4) அவற்றுள் ஐந்து முறை, 'குன்றைத் திருமுனி' என்று ஒருபடி மேற்சென்றும் கூறினார். உமாபதி தேவர், வான்மீகியாரையும், வேதவியாசரையும் சேக்கிழாருக்கு ஒப்பாகமாட்டார்கள் எனக் கூறியதை ஒருவாறு ஒப்புக் கொள்ளலாம். ஆனால் வடக்கில் கயிலாய மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்குச் சரிநிகர் சமானமாகத் தெற்கில் பொதியமலையில் வீற்றிருக்கின்ற பெருந்தகுதி படைத்த அகத்திய முனிவரையும் சேக்கிழாருக்கு ஒப்பாகமாட்டார் எனக் கூறியது எவ்வாறு பொருந்துகின்றது என்பதை விளங்கிக் கொள்ளுதல் சிறிது கடினமாய் இருக்கலாம். உமாபதி தேவர் இதனைக் கூறிய அப்பாடலில், 'பொதியமலைக் குறுமுனிவனும் ஒப்பலன் என்றதில் உம்மையை எச்சப் பொருளோடு உயர்வு சிறப்புப் பொருளும் அமையவே கூறியதனோடு, அம்முனிவர் பொதிய மலையில் இருத்தலையும் நினைவூட்டிக் கூறினார்.

ஒருபொருளோடு மற்றொரு பொருளைப் புடைபட வைத்து நோக்கும்போது பல நோக்கிலும் நோக்காமல் குறிப்பிட்ட ஒரு நோக்கில் மட்டுமே நோக்குதலும் உண்டு. 'இவள் முகத்திற்கு மதி ஒவ்வாது' எனக் கூறினால், 'மறு இன்மை, மறு உடைமை' என்னும் அவ்வொரு நோக்கம் பற்றியேயாகும். அதுபோலவே அகத்தியர் 'முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார்'. ஏன்? 'தமிழையேகூட அவர் படைத்தார்' என்று வைத்துக்கொண்டாலும், அந்தத் தமி

ழால் திருத்தொண்டர் புராணம் போன்ற ஓர் அரிய பெரிய அருட்பெருநூலை அவர் ஆக்க வில்லை என்பது உண்மைதானே! அந்த அள வில்தான், உமாபதிதேவர் இங்குக் கூறினாரே யன்றி, அகத்தியருக்கு உள்ள ஏனைய பெரு மைகளைச் சுட்டி இவ்வாறு கூறவில்லை என் பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

இத்தகைய சீர்த்தி வாய்ந்த நம் சேக் கிழார் பெருமானைச் சித்தாந்த சைவ மா பாடிய கருத்தரான திருமாதவச் சிவஞான யோகிகள் 'எங்கள் பாக்கியப்பயன்' எனக் கொண்டாடிஉவக்கின்றார்.

'தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்ல பிரான், எங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கிழான் அடி சென்னி யிருத்துவாம்'

என்பது அப்பாடல்.

சந்தான குரவராகிய உமாபதிசிவனார், அருளிச் செய்தபடி, 'புகழ்புனை குன்றை முனி வராய்' விளங்கும் நம் சேக்கிழாரைச் சிவஞான யோகிகள் அருளிச் செய்தவண்ணம் நாமும் நமது பாக்கியப் பயனாகக் கொண்டு போற்றி உய்வதல்லது செய்யத்தக்கது யாதுளது.?

கம்பர் காலம்!

கம்பர் வாழ்ந்திருந்து, இராமாயணம் இயற்றியருளிய காலம் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பல வகைக் கருத்துக்களைக் கூறுவர்.

''எண்ணிய சகாத்தம் எண்ணூற்று
ஏழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே''

எனவரும் ஒரு தனியன் செய்யுளினால், கி. பி. 884-ஆம் ஆண்டில் கம்பர் தமது நூலை அரங்கேற்றினார் எனத் தெரிகின்றது. ஆனால் வேறு பிற வரலாற்றுச் சூழ்நிலைகளைக் கருதும்போது, இது பொருத்த மாகத் தோன்றவில்லை.

''ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு-மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
தாரார் காகுத்தன் கதை''

எனவரும் செய்யுள் ஒன்றினால், கி. பி. 1178-ஆம் ஆண்டில், கம்பர் தமது காவியத்தை இயற்றி முடித்தார் என்று தெரிகின்றது.

மேற்குறித்த செய்யுளில் ''எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல்' என்பதற்கு 'ஆயிரத் தின் மேலே எண்ணப்பெற்ற' எனப்பொருள் கொண்டு, சகாப்தம் 1107 அதாவது கி. பி. 1185 என்று கணக்கிட்டால், இவ்விரு செய்யுட்களின் காலக் கணக்கும் பொருந்தி வருகின்றது.

இனி இக்காலக் கணக்கு மிகவும் பொருத்தம் வாய்ந்ததே என்பதனை யுணர்த்தும் அகச் சான்றாகப் பின்வரும் கம்பராமாயணப் பாடல் அமைந்து விளங்குகின்றது.

''வன்னி நாட்டிய பொன்மௌலி
வானவன் மலரின் மேலான்
கன்னி நாள் திருவைச் சேர்ந்த
கண்ணனும் ஆளும் காணிச்
சென்னிநாள் தெரியல் வீரன்
தியாக விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப்
புலன்கொள நோக்கிப் போனான்''

என மருத்துமலைப் படலத்தில் (58) வரும் செய்யுளில் அமைந்துள்ள **'தியாக விநோதன்'** என்னும் தொடர், மூன்றாம் குலோத்துங்க சோழனின் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். அச்சோழ மன்னன் கி. பி. 1178 முதல் 1216 வரை அரசாட்சி செலுத்தினான் என்று, வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மேலே குறித்த இரு செய்யுள்களும் கூறும் காலக் கணக்கினை, இக் கம்பராமாயணப் பாடல் வலியுறுத் திச் சான்று பகர்கின்றது. எனவே, கம்பர் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்திருந்து, தமது கம்பராமாயணம் என்னும் கவின்மிகு நூலை இயற்றினார் எனத் துணிதல் பொருந்தும்.

—**ஆசிரியர்.**

மூவகைப் பக்தர்கள்

—ஆசிரியர்.

(1) ஐச்வர்யார்த்திகள் :

பக்தர்கள் பொதுவாக மூவகைப்படுவர். ஐச்வர்யார்த்திகள், கைவல் யார்த்திகள், முமுட்சுக்கள் என அம் மூவகையினரையும் நூல்கள் குறிக்கும்.

(1) உலகத்திற் பலவகைச் செல்வங்களைப் பெற விரும்பி, இறைவனிடம் பக்தி செய்து வழிபடுவோர் ஐச்வர்யார்த்திகள் எனப்படுவர். இவர்களிலும் இருவகை உண்டு. ஒரு வகையினர் முன்பு தாம் பெற்றிருந்த செல்வத்தை இழந்துவிட்டு, அதனைப் பெறுவதற்காக விரும்பி யிருப்பவர்கள். இவர்கள் பிரஷ்டைச்வர்ய காமர்கள் எனப்படுவர். மற்றொரு வகையினர் தாம் வறியராக இருந்து வருதலாற் புதிதாகச் செல்வ வளம் பெறுதல் வேண்டும் என்று விரும்பியிருப்பவர்கள். இவர்களுக்கு அபூர்வைவர்ய காமர்கள் என்று பெயர்.

அண்டக் குலத்துக் கதிபதி யாகி
அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த
இருடீகேசன் தனக்குத்
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி
தொழுது ஆயிர நாமம் சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு என்மினே

என்னும் பாசுரத்தில், பெரியாழ்வார் இவ்விருவகை ஐச்வர்யார்த்திகளையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

(2) கைவல்யார்த்திகள் :

உலகத்தில் தனித்திருந்து ஆத்மாநுபவம் ஆகிய கைவல்யம் ஒன்றனை மட்டுமே விரும்பி, அதற்காகப் பக்தி செய்பவர்கள் கைவல்யார்த்திகள் என வழங்கப்பெறுவர்.

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
எங்கள்குழாம் புகுந்து
கூடும் மனமுடையீர்கள் வரம்பு ஒழிவந்து
ஒல்லைக் கூடுமினோ!
நாடும் நகரமும் நன்கறிய
நமோ நாராயணாய என்று
பாடும் மனம் உடைப் பத்தர் உள்ளீர்
வந்து பல்லாண்டு கூறுமினே!

என்னும் பாசுரத்தால், பெரியாழ்வார் கைவல்யார்த்திகளை மங்களா சாசனத்துக்கு அழைக்கின்றார்.

(3) முமுட்சுக்கள் :

அழிந்து போகக் கூடியதும், துன்பம் நிறைந்ததுமான, இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பும், அழியாததும் இன்பம் நிறைந்ததுமான வீடு பேற்றில் விருப்பும் மிக்கவராய், எம்பெருமானைச் சார்ந்து அநுபவிக்கும் அநுபவத்தையே விரும்பி நிற்கும் ஞானிகள், முமுட்சுக்கள் எனப்பெறுவர்.

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினில் புகுதல் ஒட்டோம்;
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர் வாழ் இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே

என்னும் பாசுரத்தில், பெரியாழ்வார் ''வாழாட்பட்டு நின்றீர்'' என இவர்களைக் குறிப்பிடுகின்றார்.

—o—

வைணவர்களுக்குரிய பண்புநலன்கள்

(பிள்ளைலோகாசார்யர்)

வைணவர்களுக்குரிய இலக்கணங்கள் அல்லது சிறந்த பண்புநலங்கள் பின்வருவன ஆகும். அவை வருமாறு:

1. எம்பெருமானைத் தவிர வேறுபொருள்களில் உள்ள பற்றுக்கள் யாவற்றையும் அறவே விடுதல்.

2. எல்லா உயிர்களையும் எக்காலத்திலும் பாதுகாக்கும் எம்பெருமான் தவிர, வேறொருவரும் தமக்குத் தஞ்சம் அல்லர் எனத்தெளிந்து அவனையே உபாயமாகப் பற்றுதல்.

3. பகவான் சரம சுலோகத்தில் 'என்னையே உபாயமாகப் பற்று' எனக் கட்டளையிட்டிருத்தலால், அவனையே உறுதியாகப் பற்றியுள்ள தமக்கு வீடுபேறு தவறாமற் கிடைக்கும் என நம்பித் துணிந்திருத்தல்.

4. இங்ஙனம் வீடு வேறு தப்பாமற் கிடைக்கும் என்று நம்பித் துணிந்திருந்தாலும், அதனை அடைவதற்கு ஆர்வம் மிகுந்து விரைந்து முயலுதல்.

5. வீடுபேறு அடைதலில் மனம் விரைந்து நிற்பினும், உலகத்தில் வாழும் நாட்களில், எம்பெருமான் உவந்து கோயில் கொண்டிருக்கும் திவ்விய தேசங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு அவ்வத் திவ்ய தேசங்களில் விளங்கும் எம்பெருமான்களின் சிறந்த குணநலன்களை அனுபவித்துக்கொண்டு, மன மொழி மெய்களினால் கைங்கரியம் செய்து வருதலையே தமக்குப் பொழுது போக்காகக் கொள்ளுதல்.

6. ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவேயுடைய வைணவர்களைக் காணின் ''தீயில் தாமரை மலர்ந்தன்ன'' இவ்வுலகிலும், இத்துணைச் சிறப்பு வாய்ந்தார் சிலர் உளரோ? என அவர்கள் பெருமையைப் பாராட்டி, அவர்களிடம் அழுக்காறு ஒழிந்து, அவர்கள் தாழ்ந்த குலத்தினராக இருப்பினும், அவர்கள்பாற் கலந்து உவகையுடன் அன்புபாராட்டுதல்.

7. தள்ளத் தக்கன இவை, கொள்ளத் தக்கன இவை எனத் தெள்ளிதின் விளக்கும் திருமந்திரத்திலும், அதை விவரித்துச் சொல்லும் துவயத்திலும் ஊன்றி நிற்றல்.

8. ஆசாரியாபிமானம் ஒழியக் கதியில்லை, ஆசாரியாபிமானமே உத்தாரகம் என்றுணர்ந்து தன்னை ஏற்றுப் பணி கொள்ளும் ஆசாரியனின் பால் மிக்க அன்பு பாராட்டுதல்.

9. இரும்பைப் பொன்னாக்குவாரைப் போன்று, இழிந்த தன்னை ஏற்று உபதேசத்தினால் திருத்தி உய்வித்த ஆசாரியனிடத்திலும், இத்தகைய ஆசாரியனிடம் தன்னைக் கொண்டு போய்ச் சேர்த்த ஈசுவரனிடத்திலும் நன்றியுடையவனாய் இருத்தல்.

10. சித்து அசித்து ஈசுவரன் என்னும் மூன்றையும் பொருளாகக் கொண்டுள்ள ஞானமும், உலகப் பொருள்களில் பற்றற்ற தன்மையும், இவை இரண்டும் நமக்கு வாய்த்துள்ளன என்று இறுமாப்புக் கொள்ளாமையாகிய சாந்தியும், அமையப்பெற்ற பரம பாகவதரோடு எந்நாளும் கூடிவாழ்தல்.

''புறம்புண்டான பற்றுக்களை அடைய வாசனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சம் என்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும்நாள் உகந்தருளின நிலங்களிலே பிரவணனாய்க் குணாநுபவ கைங்கர்யங்களே போது போக்காகக் கொள்ளுகையும், இப்படி இருக்கும் வைணவர்கள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும், திருமந்திரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய பிரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞானாய்ப் போருகையும், ஜ்ஞாநமும் விரக்தியும் சாந்தியும் உடையராய் இருக்கும் பரம சாத்விகரோட சகவாசம் பண்ணுகையும், வைணவ அதிகாரிக்கு அவசிய அபேட்சிதம்''.

—ஆசிரியர்

திருமாலின் ஐவகை நிலைகள்

திருமாலின் ஐவகை நிலை, பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகைகளாக விளங்கும்

1. பரத்துவம் என்பது 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' எனப்படும் வைகுந்தம் ஆகிய நித்திய விபூதியிலே, உலகியல் வாழ்வினின்று விடுபட்டுப் பகவத் அநுபவமே போது போக்காக இருக்கும் முக்தர்களுக்கும், வினை காரணமாக ஒருநாளும் உலகில் வந்து பிறவாத பெருநிலையிலுள்ள அனந்தன் கருடன் முதலிய நித்தியர்களுக்கும் போக்கியனாக இறைவன் எழுந்தருளியிருக்கும் நிலை.

2. வியூகம் என்பது படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரிவதற்காகவும், உலக மக்களுக்கு நன்மையை உண்டாக்கித் தீமைகளைப் போக்கிப் பாதுகாத்தருளுதற்காகவும், வீடு பேறு பெற விரும்பி முயலும் முமுட்சுக்கள் உலகியல் வாழ்வை விடுவித்துக் கொண்டு தன்னை வந்து அடைவதற்கு ஏதுவான அருளைப் புரியவும், சங்கர்ஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன் வாசுதேவன் என்பவர்களாகத் திருப்பாற்கடலில் விளங்கும் நிலை.

''செங்கட் காரி! கருங்கண் வெள்ளை!
பொன்கட் பச்சை! பைங்கண் மாஅல்''!

எனவரும் பரிபாடல் வரிகளும், அவற்றிற்கு ஆசிரியர் பரிமேலழகரால்,

''பைங்கட்காரி-வாசுதேவன்! கருங்கண் வெள்ளை-சங்கருடணன்!
பொன்கட் பச்சை-சிவந்த உடம்பையுடைய பிரத்தியும்நன்!
பச்சை என்பதுபிரத்தியும்நன் என்னும் வடமொழித் திரிவு
செங்கண்மால்-பசிய உடம்பினையுடைய அநிருத்தன், நால்வகை வியூகமும் கூறியவாறு''

என வகுக்கப்பட்டுள்ள உரையும், ஈண்டு அறியத்தக்கனதாகும்.

3. விபவம் ஆவது, எல்லாப் பொருள்களாகவும் வந்து தோன்றுதல். மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமனன் இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களே விபவம் என வழங்கப் பெறும். ''எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர்கள் தலைவா'' ''பிறப்பில் பல்பிறவிப் பெருமான்'' ''மீனோடாமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த் தானாய்ப் பின்னும், இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான்'' என்றெல்லாம் இதனை ஆழ்வார்கள் போற்றியுள்ளமை காணலாம்.

4. அந்தரியாமித்துவம் ஆவது, எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உட்கலந்து நின்று இயக்கி நிற்பவனாகத் திகழும் நிலை. ''உடல் மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்துளன்'' ''கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும் கரந்து எங்கும் பரந்துளன் இவையுண்ட சுரனே'' முதலிய திருப்பாசுரங்கள் இந்நிலையைக் குறிப்பனவாகும்.

5. அர்ச்சாவதாரம் என்பது, கோயில்களிலும் இல்லங்களிலும் ஒரு வடிவத்தின்கண் எழுந்தருளி, அன்பர்கள் உவக்கும் உபாதானப் பொருள்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் விரும்பும் திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும், அவர்கள் புரியும் பாவனை தனது வண்ணமாகவும் நிற்கும் நிலை. ''பின்னானார் வணங்கும் சோதி'' என்று சிறப்பிக்கப் பெற்றதும், இறைவன் தன்குணநிறைவுடன் திகழ்வதும், ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண்ணியதும், அர்ச்சாவதாரமேயாகும். பரத்துவ நிலையில் இறைவனின் ஒளி பகல்விளக்குப் போல மழுங்கி யிருக்கும். அர்ச்சாவதாரத்திலோ இருட்டறையில் விளக்குப் போல மிகவும் பிரகாசம் பெற்றுத் திகழும். மேலும் தனது குணநிறைவையும் உரிமையியல்பையும் குலைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களையும், தான் விரும்பிப் பேணிக் காத்து நிற்கும் நிலை அர்ச்சாவதாரம் ஆகும்.

பரவாசுதேவனாய் இருக்கும் நிலை நித்யர் முக்தர்களின் அநுபவத்திற்காக; வியூக நிலை பிரமன் இந்திரன் முதலானோருடைய கூக்குரல் கேட்கைக்காக; இராமன் கிருஷ்ணன் முதலான விபவாவதாரங்கள் அவ்வக்காலத்தில் வாழ்ந்திருந்தவர்களுக்காக; அந்தரியாமியாய் இருப்பது பிரகலாதாழ்வான் போல்வார்க்கும் கர்மடர்களுக்கும் ஆகும். ''அடியோ முக்கே எம்பெருமான் அல்லீரோ நீர்'' எனத் திருமங்கையாழ்வார் பணித்தருளியபடி அர்ச்சாவதார நிலை ஒன்றே, நம்போன்ற அடியார்களை உய்விக்க அமைந்தது எனலாம்.

1. அந்தர்யாமித்துவம்: தரையிற்பதிந்து மறைந்து கிடக்கும் நீர் (பூகத ஜலம்) போன்றது.
2. பரத்துவம்: அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரண ஜலம்) போன்றது.
3. வியூகம்: எளிதிற் கிட்ட இயலாத திருப்பாற்கடல் போன்றது.
4. விபவம்: முன்பே பாய்ந்து வடிந்தொழிந்த பெருக்காறு போன்றது.
5. அர்ச்சாவதாரம்: நீர்விடாய் கொண்டவன் எளிதிற் சென்று இறங்கி வேண்டும் அளவும் பருகலாம் படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது. *

—ஆசிரியர்.

"இந்தளூர் அந்தணன்"

திரு டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

எம்பெருமானிடம் சௌலப்பியம் என்ற திருக்குணம் நிறைந்திருப்பது அர்ச்சாவதாரம். பரமபுருடனாகிய தன்னை மலர்கள் முதலிய பொருள்களைக் கொண்டு வழிபட்டு வாழ வேண்டும் என்று கருதும் சேதனனுக்குக் கண்ணன் கீதையில் கூறுவது: சேதனன் தன்கையில் கிடைத்ததொன்றைத் திருமேனியாக எழுந்தருளப்பண்ணி, ''எம்பெருமானே, இங்கு தேவரீர் எழுந்தருளி இருக்கவேண்டும்'' என்று வேண்டும்போது, இறைவனும் அதற்கு இணங்கித் தான் தன் பரத்துவ நிலையில் செய்யும் விருப்பத்தை அத் திருமேனியில் செய்து, இவனுக்குத் திருவருள்புரிவான். இந்த அர்ச்சாவதாரம், தொலைவினால் மனத்திற்கும் எட்டாத பரமபதம், திருப்பாற்கடல் போன்றும், தற்போது சேர்ந்து இன்பந் துய்த்தற்கியலாத இராம கிருஷ்ண அவதாரங்கள் போன்றும் அல்லாமல், எப்பொழுதும் நம்மருகில் நிலைபெற்றுக் கண்ணாற் கண்டு களிப்பதற்கு இடந்தருகின்றது.

அர்ச்சையில் எம்பெருமான் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாயிருத்தலை நாம் காண்கின்றோம். ''திருக்கையிலே பிடித்த திவ்விய ஆயுதங்களும், வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆசன பத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய் நிற்கின்ற நிலையே நமக்குத் தஞ்சம்''(1)

என்று இந்நிலையை முமுட்சுப்படி குறிப்பிடுகின்றது. இங்ஙனம் ஆயுதங்களை எப்போதும் தாங்கிக் கொண்டிருத்தல் வன்மைவாய்ந்த வீரனுடைய காரியமாகும். தன்னை வந்தடைந்த அடியார்களின் விரோதிகளைப் போக்குதற்கு இப்படைகள் பயன்படுகின்றன. இவ்வாயுதங்களைத் தாங்கும் வன்மை மட்டிலும் போதியதன்று. விரோதிகளையும், அவற்றைப் போக்கும் முறைகளையும் அறிபவனாய் இருத்தல் வேண்டும். இங்ஙனம் இச்செய்தியை உற்று நோக்குங்கால், தன்னைப் பற்றிய சேதனனுடைய காரியத்தைச் செய்யும்போது பயன்படுபவையான ஞானசக்திகளுக்குப் பிரகாசங்கள் திவ்விய ஆயுதங்களாகும் என்பதனை அறிகின்றோம்.

சேதனர், தாம்செய்த குற்றங்களை நினைந்து ''ஐயகோ! இத்தனைப் பிழைகளை இழைத்த நாம் எங்ஙனம் அத்துணை உயரிய சுவாமியைச் சென்றடைவது?'' என அஞ்சி அகலாதிருக்கும் பொருட்டே, அவருடைய திருக்கை அபய முத்திரையுடன் சேவை அளிக்கின்றது. இஃது ''உங்கள் குற்றங்களை நினைந்து நீங்கள் அஞ்சவேண்டா; என்னை வந்தடையுங்கள், யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்'' என்னும் அன்பைக் காட்டும் வாத்சல்யத்தின் அறிகுறியாகும். எம்பெருமான் தலையில் கவித்திருக்கும் இரத்தினமுடி, அவன் எல்லா உலகங்கட்கும் சுவாமியாயிருத்தலை அறிவிப்பதாகும். அன்பர்களைக் காணுங்கால் எம்பெருமானுக்கு உண்டாகும் முகமலர்ச்சியும் புன்முறுவலும் அவர்களோடு புரையறக் கலக்கும் சீலத்தைத் தெரிவிக்கும். ஆசனபதுமத்தில் அழுந்திநிற்கும் எம்பெருமானின் இரண்டு திருவடிகளும் அனைவரும் பற்றுதற்கு இடம் தந்து நிற்கின்றன. இத் தனிமை சௌலப்பியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த எண்ணங்கள் நம் சிந்தனையில் குமிழியிட்டவண்ணம் திரு இந்தளூர் என்ற திருத்தலத்திற்குப் பயணமாகின்றோம். காளியாக்குடி விடுதியிலிருந்து, மாயூரம் இரயிலடியிலிருந்து வடகிழக்கில் மூன்று மைல் தொலைவில் மாயூரம் நகரின் வடக்கு முனையில் உள்ளது இத் திவ்வியதேசம். காவிரியைத் தாண்டிச்செல்லப் பாலம் உள்ளது. இரயிலடியிலிருந்து இத்திருத்தலத்திற்குக் குதிரைவண்டிகளும் மாட்டுவண்டிகளும் கிடைக்கும். விடுதியிலிருந்து நாம் நடந்தே செல்லுகின்றோம். இங்ஙனம் செல்லும்போதே திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் ஆழங்கால்படுகின்றோம். இந்த ஆழ்வார் மட்டிலுமே இத்திருத்தல எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார்.

இத்திருமொழியின் பாசுரங்களின் அநுபவம் பேரின்பம் பயப்பதாக உள்ளது. இந்தப் பாசுரங்களை நாவினாற் சொன்னாலும் பிறர் சொல்லக் கேட்டாலும் நெஞ்சு நீர்ப்பண்டமாயுருகும். திருவிந்தளூர் எந்தையைக் கண்ணாரக் காணவேண்டும் என்றும், கையாரத் தொழவேண்டும் என்றும், 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமைகள் செய்யவேண்டும்' (2) என்றும், எவ்வளவோ பாரித்துக் கொண்டு வந்தார் ஆழ்வார். ஆனால் அப்பெருமான் திருக்கண்களால் குளிர நோக்குதல், வாரியணைத்தல், வினவுதல், அத்தாணிச் சேவகத்தில் ஏவுதல் ஆகியவற்றில் ஒன்றும் செய்திலன்; நிரங்குச சுவாதந்திரனான (தடையில்லாத சுவாதந்திரனான) அவனது திருவுள்ளத்தை யார்தான் அறியவல்லார்? ஆழ்வாருடைய கல்

1) முமுட்சுப்படி-142

2) திருவாய்மொழி 3.3:1

நெஞ்சத்தையும் உருக்கவல்ல பாசுரங்களைச் செவிமடுக்க வேண்டுமென்று பிச்சேறினான் போலும். கோபுர வாசற் கதவையும் அடைத்துக்கொண்டு கிடந்தான் போலும். ஆழ்வார் துடிக்கின்ற துடிப்பை எப்படிக் காட்டுவது? பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றவர்களே இத்துடிப்பை ஓரளவு அறிய முடியும்.

பிரேமத்தால் பெண்பேச்சாக அமையப் பாசுரமிட்டுக் காட்டுகின்ற துடிப்பை, ஆழ்வார் தானான தன்மையில் காட்டுகின்ற திருமொழியாகும் இது. நம்மாழ்வார் ''மின்னிடை மடவார்கள்'' (3) என்ற திருவாய்மொழியில் தலைவன் காலந்தாழ்த்து வரக்கண்ட தலைவி ஊடல் கொண்டு உரைக்கும் பாங்கிலும்; குலசேகரப்பெருமாள் ''ஏர்மலர்ப்பூங்குழல் ஆயர் மாதர்'' (3) என்னும் திருமொழியில் கன்னியர் ஊடிக் கண்ணனை எள்கும் நிலையிலும், இந்த ஆழ்வாரே ''காதில் கடிப்பு இட்டு'' (5) என்ற திருமொழியில் ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடி உரைக்கும் முறையிலும் பெண்பேச்சாக வெளியிட்ட நெஞ்சுருக்கும் உணர்ச்சிகளையெல்லாம் இத்திருமொழியில் தானான தன்மையில் அருளிச் செய்த அழகு மிக அற்புதமாக அமைந்துள்ளது. இந்த ஆழ்வாரின் அனுபவத்தை நாமும் பெற முயல்கின்றோம். கோபுரவாயிலிலிருந்தே இந்த அனுபவத்தைப்பெறும் முயற்சியில் ஈடுபடுகின்றோம்.

ஆழ்வார் வேண்டுவது: ''இந்தளூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, அடியேன் உம்மை வணங்கினேன்; நீர் சேஷி என்றும், அடியேன் சேஷபூதன் என்றும், அடிமை செய்தலே முறையென்றும் நன்கு அறிந்தே கைங்கரியத்தை நாடுகின்றேன். உம்மைப் பார்ப்பதே கடினமாக உள்ளது. உம்முடைய திவ்விய மங்களவிக்கிரகத்தை ஒரு தடவையாவது அடியேன் பார்க்கலாகாதா? நெஞ்சில் நீங்காதிருக்கும் செல்வமே, கட்புலனுக்குச் சிறிது காலமாவது இலக்காகக் கூடாதா? கண்ணாலே கண்டு களிக்கப் பெறும் அனுபவத்தை நீர் வஞ்சித்திராகிலும் மனத்தால் அனுபவிக்க அனுபவிக்க இனிதாய் இருக்கின்றதே! அந்தண் ஆலி மாலே! சோலை மழ களிறே! நறையூர்நின்ற நம்பீ!' என்று வேறு திருத்தல எம்பெருமான்களையும் இந்தத் திருத்தல எம்பெருமானாகக் கண்டு 'அடியேற்கு இறையும் இரங்காயே?' என்று கெஞ்சும் பாவனையில் பேசுகின்றார்.

''நான் சேவித்தாலும் சேவிக்கின்றேன்; இழந்தாலும் இழக்கின்றேன்; அடியேனுக்கு இஃது ஒரு பெரிய பொருளன்று. நீர் குணசாலி என்று பேர் படைப்பதற்குப் படாதபாடுகள் பட்டுள்ளீர். மாவலியிடம் முன்னம் குறளுருவாய் மூவடி மண் இரந்து பெற்றுப் பின்னர்த் திரிவிக்கிரமனாகி மூவுலகங்களையும் அளந்து பெரும்பாடுகள் பட்டுப் பெரிய குணம் சம்பாதித்தீர். 'நான் உலகுக்கெல்லாம் தலைவன்; எல்லாரையும் நான் குளிர நோக்கக் கடவேன்' என்று உறுதியாகத் தனி மாலை இட்டிருக்கும் நீர் என்னை நோக்காதொழியலாமா?

''அயலாரும்
ஆசையென்னும் கடலில் வீழ்ந்திங்கு
அயர்ந்தோம்; அயலாரும்
ஏசுகின்றதுஇதுவே காணும்
இந்தளூ ரீரே!''

என்கின்றார். 'திருமங்கை மன்னன் திருவிந்தளூர்ப் பெருமானைக் காண ஆசைப்பட்டு அது பெறாதே முடிந்தான்' என்ற பேச்சு நாற்சந்தியில் கிளம்பினால் இதனைக் காட்டிலும் மிக்க குற்றம் வேறு உண்டோ? 'ஒருவர் ஆசைப்பட அழகையும், ஒருவர் அந்த ஆசைக்கு முகம் காட்டின அழகையும் என்ன சொல்லுவோம்! சர்வரட்சகன் இப்படியோ இருப்பது?' என்று அயலார் ஏசுவார்களே; 'அப்படிப்பட்ட ஏச்சுக்கு இடமாகும்படி நடந்து கொள்ள வேண்டா என்பதே அடியேன் சொல்லுவது. அடுத்துக் கல்நெஞ்சையும் உருக்கும்வண்ணம் பேசுகின்றார் ஆழ்வார்:

''ஆசைவழுவா தேத்தும் எமக்கிங்கு
அழுக்காய்த்து; அடியோர்க்குத்
தேசம்அறிய உமக்கே ஆளாய்த்
திரிகின் றோமுக்குக்
காசின்ஒளியில் திகழும் வண்ணம்
காட்டீர்! எம் பெருமான்!
வாசிவல்லீர் இந்த ளூரீர்!
வாழ்ந்தே போம்நீரே'' (6)

வழுவாது-குன்றாமல்; ஏத்தும்-துதிக்கும்; இழுக்கு-குற்றம்; தேசம்-நாடு; ஆளாய்-தொண்டராய்; காசு-பொற்காசு; வண்ணம்-வடிவழகு; வாசி-வேறுபாடு, தாரதம்மியம்.

அடியேன் உம்மீது ஆசை குன்றாமல் துதிக்கின்றேன். நீர் அடியேனை உதாசீனம் செய்யச் செய்ய, அதுவே எருவாக, ஆசைமேலும் மேலும் வளர்கின்றது. இப்படி நான் துதித்தால் சேஷபூதர் சேஷியைத் துதிப்பது முறையன்றோ? என்று எல்லோரும் கருதவேண்டியது முறை; அங்ஙனம் நினையாமல் என் செயலைப் பரிகாசிக்கின்றனரே. கூவிக் கூவி நெஞ்சுருகக் கதறும் கலியனுக்குக் காட்சி அளிக்காமல் இருக்கின்றானே; இவன் சர்வலோக சரண்யனாம்; திருநாமத்தின் அழகு தான் என்னே என்று என்னைச் சிலர் பரிகசிக்கின்றனர். மேலும் சிலர் பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பலகால் வேண்டினவிடத்திலும் வாய்திறவாது இருக்கும் ஒருவனை நாணம் கெட்டு ஏத்துகிறானே இக் கலியன் என்று ஏளனம் செய்கின்றனர். அநந்யார்க்கராக 7 இருக்கும் எங்களுக்கு, எங்களுக்கென்றே கொண்டிருக்கின்ற திருமேனியை எமக்குக் காட்டாதிருப்பது என்னோ? வாசிவல்லீர்; மிகச் சிறந்த நம் திருமேனியை நித்திய

3) டி 6.2
4) பெருமாள்திருமொழி-6
5) பெரியதிருமொழி 10.8

6) டி 4.5:4
7) அநந்யார்கர்-பிறர்க்குரியரல்லாதவர் (நினக்கே உரியவர் என்றபடி)

சூரிகள் மட்டிலுமே காண வல்லவர்கள்; அற்பனான இவன் காணலாகாது என்ற நினைப்போ? சர்வ சாதாரணமாகத் திருமேனியை இன்னார்க்குத்தான் காட்டலாம், இன்னார்க்குக் காட்டலாகாது என்று வேறுபாடு கொள்ளலாமோ? இந்தளூரீர்! நித்திய சூரிகட்குக் காட்சிதரும் வடிவை நித்திய சம்சாரிகட்கும் எல்லாப் பொருள்களையும் அளிப்பதற்கன்றோ இந்த ளூரில் வந்து வந்து நிற்பது? வாசியறமுகம் கொடுக்க வந்து நிற்கிறவிடத்தில் வாசி (வேறுபாடு) வைக்கின்றீரே. வாழ்ந்தே போம் நீரே; உம்முடைய உடம்பு உம்மை ஆசைப்பட்டவர்களுக்காக ஏற்பட்டது என்று நினைத்திருந்தோம்; அப்படி அன்றாகில் உம்முடைய உடம்பை நீரே கண்டுகொண்டு, நீரே தொட்டுக்கொண்டு, நீரே முகர்ந்து கொண்டு, நீரே கட்டிக்கொண்டு, நீரே வாழ்ந்துபோம் என்று வெறுப்புடன் பேசுகின்றார்.

அசித்தும் எம்பெருமானின் திருமேனி என்ற துணிவுடைய இந்த இழ்வார், வீணாக வருந்துகின்றார் என்று இந்தளூர்ப்பெருமான் திருவுள்ளம் பற்றியிருப்பதாகக் கொண்டு ஆழ்வார் பேசுகின்றார். ''தீ எம் பெருமான், நீர் எம்பெருமான், திசையும் இருநிலனும் எம்பெருமான்'' என்ற சாத்திரப் பொருள் அடியேனுக்குத் தெரியாமலில்லை. 'சங்கு சக்கரமும் புன்முறுவல் கொண்ட முகமும்' கொண்ட திவ்விய மங்கள விக்கிரகத்தைக் கண்டுகளிக்கப் பேரவாக் கொண்டிருக்கும் அடியேனுக்கு ஜகத் சொரூபனாக இருக்கும் இருப்பு என்ன பயன் அளிக்கும்? அடியேன் போன்றோர் கண்டு களிக்க அன்றோ இந்தளூரில் வந்திருப்பது, நீர் பரவாசுதேவனாயிருக்கும் இருப்பு நித்திய சூரிகளின் அனுபவத்திற்காக. வியூக நிலை நான்முகன் முதலானோருடைய கூக்குரலைக் கேட்பதற்காக. விபவாவதாரங்கள் அக்காலத்தில் இருந்தவர்கட்காக ஒழிந்தன. அந்தர்யாமியாக இருக்கும் இருப்பு பிரகலாதாழ்வான் போன்றவர்கட்காக. அர்ச்சாவதார நிலையொன்றே அடியேன் போன்றாருக்குப் பிழைப்பு. சம்சாரிகட்கு முகம் கொடுப்பதற்கன்றோ இது ஏற்பட்டது? குருடர்க்கு ஏற்பட்ட இடத்தில் விழி கண்ணர் புகலாமா? விழி கண்ணார்க்கு ஏற்பட்ட இடம் குருடர்க்குப் பயன்படுமோ? என்கின்றார். ''நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய், சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனாய்'' என்று ஜகத் சொரூபனாயிருக்கும் இருப்பு தனக்கு மன நிறைவு தாராமையையும், அசாதாரணத் திருமேனி சேவையே தமக்கு வேண்டும் என்பதையும்''கூராழி வெண் சங்கேந்திக் கொடியேன்பால் வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'' என்ற நம்மாழ்வாரின் விருப்பத்தையும் ஈண்டு நினைவு கூர்வோம். அடுத்து ஆழ்வார் பேசுவது நம் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது:

''சொல்லாது ஒழியகில்லேன் அறிந்த
சொல்லின் நும் அடியார்

எல்லாரோடும் ஒக்க எண்ணி,
யிருந்தீர், அடியேனை;

நல்லார் அறிவீர்; தீயார்
அறிவீர்; நமக்கிவ்வுலகத்தில்

எல்லாம் அறிவீர் ஈதேஅறியீர்
இந்தளூ ரீரே'' (9)

[ஒக்க - சமமாக; நமக்கு ஈதே-என்னுடைய தன்மை ஒன்றினையே]

''ஆழ்வீர், நீர் சேஷபூதர்; நான் சேஷி. என்னை வற்புறுத்திக் காரியங் கொள்வது உம் சொரூபத்திற்குச் சேராது என்பது உமக்குத் தெரிந்தது தானே. 'அவன் செய்வன செய்து கொள்ளட்டும்' என்றிராமல் மீண்டும் மீண்டும் நிர்ப்பந்திப்பது உமக்குத் தகாது'' என்று எம்பெருமான் திருவுள்ளம் கொண்டதாகக் கருதி ஆழ்வார் விண்ணப்பிக்கின்றார்; ''இந்தளூரீர்! அடியேன் விண்ணப்பம் செய்ய நினைத்ததைக் கூசாமல் சொல்லிவிடுகின்றேன். சேஷபூதன் சேஷியை வற்புறுத்தலாகாது என்ற முறையறிந்து அடியேனால் இருக்க முடியவில்லை. எல்லாம் அறிந்த தேவரீருக்குத் தெரியாத செய்தி ஒன்றுண்டு. உம்மைப் பிரிந்து தரிக்க மாட்டாத அடியேனை உம்முடைய அடியவர்கள் எல்லாரோடும் சமமாக நினைத்திருக்கின்றீர். 'ஒருக்கணமும் திருமங்கை மன்னன் உம்மைப் பிரிந்திருக்க முடியாது'. என்ற உண்மையை மாத்திரம் உம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை. நீர் இந்தளூரில் வந்து நிற்கும் செயலை மறந்தீரே'' என்கின்றார்.

''நீர் எல்லா ஆற்றலுடையவராயிருந்தும் அடியேனிடத்து ஒரு கைங்கரியம் கொள்ள ஆற்றலற்றவரானீர். இந்த நீசனால் என்ன கைங்கரியம் பண்ண முடியும்? என்று நினைத்து அடியேனைத் தள்ளி வைக்கின்றீர். நிறையொன்றுமில்லாத நீசனேனையும் கைங்கரியங்களுக்கு ஆளாம்படி திருத்திப் பணிகொள்ள உமக்கு ஆற்றலில்லையே. அடியோடு எமக்கு அறிவே இல்லாதபடி மண் கட்டியாகப் படைத்து வைத்திருந்தாலும் ஒருவாறு ஆறியிருக்கலாம். சேதன கோடியில் படைத்து வைத்தீர்; சேஷத்துவமே சொரூபம் என்பதையும் உணர்த்தி வைத்தீர்; கைங்கரியம் புரியாவிடில் சேஷத்துவம் நிறைவுபெறாது என்றும் புரியவைத்தீர். இவ்வளவு அறிவையும் பிறப்பித்து வைத்து அடியேனை ஒன்றுக்கும் உதவாதபடி தள்ளிவைத்தீர். கைங்கரியம் கொள்ளாவிடினும் திருவடியையாவது சேவை சாதிப்பிக்கலாம்; அந்தப் பேறும் பெற்றிலேன்; திருவடியும் காட்டாதொழிந்தீர். பிறர்க்கென்றே ஏற்பட்டிருக்கும் திருவடிகளையும் உமக்காகக் கொண்டுள்ளீர் போலும்'' என்கின்றார்.

''இந்தளூர் எம்பெருமானே! உமக்குப்பல நிறங்கள் உள்ளனவாகச் சாத்திரங்களால் அறியக் கிடக்கின்றது. கிருதயுகத்தில் உள்ளவர்கள் சத்துவகுணம் நிறைந்தவர்களாய்ச் சுத்தமான நிறத்தை உகக்கும் தன்மையர்களாகையால் அவர்கட்காகப் பால்நிற வண்ணனானீர்; திரேதாயுகத்தில் சிவந்த நிறத்தைக் கொண்

9) திருவாய்மொழி-3.1:2

டீர்; துவாபரயுகத்தில் பசுமை நிறத்தைக் கொண்டீர்; கலியுகத்தில் எந்த நிறங்கொண்டாலும் ஈடுபடுவாரின்மையால் இயற்கையான நீலநிறத்தைக் கொண்டீர். இப்போது அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் இருப்பில் எந்த நிறங்கொண்டிருக்கிறீர் என்பதை அடியேன் அறிய வேண்டாவோ? 'இதோபாராய், இதுவே என் வண்ணம்' என்று சொல்லி வடிவைக் காட்டியருளீர்'' என்கின்றார். ஏழு தலைமுறையாக வந்து அடிமை செய்யும் குடியிலே பிறந்த அடியேன் விஷயத்தில் இவ்வளவு ஆலோசிக்கின்றீர். இது தகுதியோ? 'நம்முடைய திருமேனியைச் சேவிப்பதற்கு இவன் தகுந்தவனா? தகாதவனா? என்று வாசி பார்க்கின்றீரே. இது பொருந்துமோ? திருமேனியைக் கண்ணில் காட்டுவதற்கு இவ்வளவு ஆலோசிக்கின்ற நீர், ஓர் ஆலோசனையையும் பண்ணாமல் நெஞ்சகத்தின்பால் முன்னே வந்து குடிகொண்டு விட்டீரே. அஃது ஏன் செய்தீர்? நெஞ்சில் புகுந்தது போல் கண்ணிலும் புகவேண்டும்; கண்ணில் புகாதது போல் நெஞ்சிலும் புகாதிருக்கவேண்டும். ஒன்றுக்கும் ஆலோசனை பண்ணாதவர் ஒன்றுக்கு மட்டிலும் ஆலோசனை பண்ணுவது ஏனோ? திருமேனியின் நிறத்தைச் சிறிதும் காட்டாமலிருக்கின்றீரே. நித்தியசூரிகட்குக் காட்சி கொடுக்கும் வடிவை இங்குள்ளார்க்கு முழுக் காட்சி கொடுப்பதற்காகவன்றோ இங்கு எழுந்தருளி இருப்பது?'' என்று கூறுகின்றார்.

இங்ஙனம் ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நாம் பெற்றுத் திருக்கோயிலில் நுழைகின்றோம். கருவறைக்கு வருகின்றோம். கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு சயனத் திருக்கோலத்தில் (வீரசயனம்) சேவை சாதிக்கும் பரிமள ரங்கனை நம் தாபமெல்லாம் தீர வணங்குகின்றோம். இந்த எம்பெருமானுக்குச் சுகந்தவன நாதன், அந்திய ரங்கன், மருவினிய மைந்தன் என்ற வேறு திருநாமங்களும் உள்ளன. திருமங்கையாழ்வார் இவருக்கு ''இந்தளூர் அந்தணன்'' 10 என்ற திருநாமம் சூட்டுகின்றார். மூலவருக்கு நான்கு புயங்கள் உள்ளன. தாயார் புண்டரீகவல்லி; 'சந்திர சாப விமோசன வல்லி' என்ற திருநாமமும் இவருக்கு உண்டு. இவரையும் வணங்குகின்றோம். எம்பெருமான் சந்நிதியில் இந்தப்பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றோம்.

''கலியன் ஒலி செய்த
சீராரின் சொல்மாலை கற்றுத்
திரிவார் உலகத்தில்
ஆரார் அவரே அமரர்க்குஎன்றும்
அமரர் ஆவாரே'' (11)

[சீரார்-சிறந்த; கற்று-ஓதி; ஆர்ஆர்-எவரெவரோ; என்றும்-எக்காலத்திலும்; அமரர்க்கு-நித்திய சூரிகளுக்கும்; அமரர் ஆவார்-கௌரவிக்கத் தக்கவராவார்]

என்ற பலனையும் பெற்றவராகின்றோம். இத்திருமொழியை ஓதுபவர்கள் எவராயினும் நித்தியசூரிகளால் சிறப்பித்துக் கொண்டாடப்பெறுபவர் என்பதை அறிந்து பேரானந்தம் பெறுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

''நாடுதும்வா நெஞ்சமே!
நாராய ணன்பதிகள்
கூடுதும்வா மெய்யடியார்
கூட்டங்கள்—சூடுதும்வா
வீதியிந்த ளத்தகிலின்
வீசுபுகை வாசம்எழும்
ஆதியிந்த ளூரான் அடி. (12)

[நாராயணன் பதிகள்-திருமாலின் திருப்பதிகள்; நாடுதும்-தரிசிப்போம்; கூடுதும்-போய்ச் சேருவோம்; இந்தளம்-தூபக்கால்கள்; அகில்-அகில் கட்டைகள்]

திருமாலின் திருப்பதிகளிற் சென்று அடியார் கூட்டங்களுடன்கூடி, எம்பெருமானின் திருவடித்தாமரைகளை முடிக்கு அணியாகச் சூடுமாறு தம் நெஞ்சை அழைக்கின்றார் திவ்வியகவி. சந்திரனது சாபம் நீங்கப்பெற்றதால் இத்திருத்தலம் 'இந்தளூர்' என்று திருநாமம் பெற்றது. இதற்கு வடமொழியில் 'சுகந்தவனம்' என்ற திருப்பெயரும் வழங்கி வருகின்றது. திருத்தலப்பயணம் பெற்ற அனுபவத்துடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

10) பெரியதிருமடல்-கண்ணி, 126

11) ௸ 4.9:10

12) நூற்றெட்டுத் திருப்பதிஅந்தாதி.22

அர்த்த பஞ்சகம்

வேத வேதாந்தங்களிலெல்லாம் சிறப்பாக எடுத்து ,வற்புறுத்திப் பேசப்படும் ஐந்து பொருள்களையே ''அர்த்த பஞ்சகம்'' என வழங்குவர். அவை முறையே இறைவனின் நிலை (பரஸ்வரூபம்), உயிரின்நிலை (சேதநஸ்வரூபம்), இறைவனை அடைதற்கு உரிய நெறி (உபாய ஸ்வரூபம்), இறைவனை நாம் அடையவொட்டாத தடையாகிய ஊழ்வினை (விரோதிஸ்வரூபம்), நாம் அடைதற்குரியபேறு (புருஷார்த்த சொரூபம்) எனும் ஐந்துமாம்.

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆயிரம் பாடல்களிலும், இவ்வைந்து பொருள்கள் சிறப்புற எடுத்துச் செவ்விதின் உணர்த்தப்பட்டுள்ளன என்பர்.

''மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்,
தக்க நெறியும், தடையாகித்-தொக்கியலும்
ஊழ்வினையும், வாழ்வினையும், ஓதும் குருகையர்கோன்
யாழின்இசை வேதத் தியல்''

என்பது பராசரபட்டர் அருளிய திருவாய்மொழித் தனியன்.

திருவரங்கத்து அந்தாதி

முன்னுரை:

திருவரங்கத்து அந்தாதி என்னும் நூல், ''அட்டப்பிரபந்தம்'' என்னும் எட்டு நூல்களில் ஒன்று. திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதிஅந்தாதி, சீரங்கநாயகர்ஊசல் என்னும் எட்டுநூல்களும், அட்டப்பிரபந்தம் எனப் பெரிதும் சிறப்புடையனவாகப் புகழ்ந்து போற்றப்பெறும். இவற்றை அருளிச் செய்தவர் அழகியமணவாளதாசர் என்பவர். அழகியமணவாளர் என்பது திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலின் திருப்பெயர். அப்பெருமானுக்கே அடியவராக இருந்ததனால், இந்நூலாசிரியர் 'அழகிய மணவாளதாசர்' எனப் பெயர் பெற்றார். இவரைப் 'பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்' என்றும் வழங்குவர். கண்ணபிரானுடைய குழந்தைப்பருவப் பெயராகிய 'பிள்ளைப்பெருமாள்' என்பது, இவருக்கு இடப்பெற்ற இயற்பெயர். இவருடைய பாடல்களின் சிறப்புக் கருதி, இவரைத் 'திவ்வியகவிப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்' என்றும் கூறுவர். இவர், இராமாநுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத்தமுதனார் என்பவரின், திருப்பேரனார் என்பர். கூரத்தாழ்வானுடைய குமாரராகிய பட்டர் என்பவர்பால், இவர் மாணவராக இருந்து, எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தனர். இவர்தம் காலம், விக்கிரம சோழன் (கி.பி. 1118-1133), அவனது மகன் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-1150) ஆகிய இரண்டு சோழ அரசர்களின் காலம் எனத் தெரிகின்றது. இவர் இயற்றியருளிய திருவரங்கத்து அந்தாதியின்கண் வரும் சில பாடல்களையும், அவற்றின் பொருளையும், இயன்ற அளவு இங்கு ஒரு சிறிது முயன்று காண்போம்.

அந்தாதியை வாசிமினே :

திருவரங்கம் ஆகிய கோயிலில் எழுந்தருளியுள்ள, அழகிய மணவாளருடைய, பொன் போன்ற சிறந்த திருவடித் தாமரை மலர்களுக்கு உரிய, சொல்மாலை என்று, அழகிய மணவாளதாசர் (பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்) அணிவித்த, திருவரங்கத்து அந்தாதி என்னும் யமகஅந்தாதி நூலை, நீங்கள் அன்புடன் ஓதுங்கள்! ஓதுவீராயின், மணமும் ஒளியும் உடைய செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளிர் எண்மரும், இம்மையில் நும்மைக் கடைக்கண் நோக்கியருள, மறுமையில் திருமகளின் கணவராகத் திருமாலின் பரமபதம் உங்களுக்குத் தவறாமல் கிடைக்கும்.

மண வாள் அரவிந்தைமார் நோக்க
  இம்மை, மறுமையில் மா
மணவாளர்தம் பதம் வாய்த்திடும்;
  கோயிலில் வந்த அந்த
மணவாளர் பொன்திருப் பாத
  அம்புயங்கட்கு, மாலை என
மணவாளர் சூட்டும் யமக
  அந்தாதியை வாசிமினே!

அரவிந்தம்-தாமரைமலர். அரவிந்தை-தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், இலட்சுமி. 'அரவிந்தைமார்' எனப் பன்மையிற் கூறியதனால், அட்ட லட்சுமியரும் குறிக்கப்பெற்றனர். அவர்களாவார்; ஆதிலட்சுமி, கசலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, விசயலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்கிய லட்சுமி என்பவர். வாள்-ஒளி. மணம் வாள்-மணவாள்; மணமும் ஒளியும் பொருந்திய. மா-திருமகள். மா மணவாளர்-திருமகளை மணந்த கணவராகிய திருமால். கோயில்-திருவரங்கம். அந்தம்-அழகு. அந்த மணவாளர்-அழகியமணவாளர்; திருவரங்கத்திலுள்ள பெருமாளின் பெயர். அம்புயம் - தாமரை. பாதஅம்புயம்- திருவடித்தாமரை. மணவாளர் சூட்டும் - அழகிய மணவாளதாசர் என்னும் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அணிவித்த. யமகம்-பல அடிகளிலாயினும், ஓரடியிற் பல இடங்களிலாயினும், வந்த எழுத்துத் தொடர்களே, மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இது தமிழில் மடக்கு எனப்படும். அந்தாதி-ஒரு செய்யுளின் அந்தமே, அடுத்து வரும் செய்யுளின் ஆதியாக அமையும்படி பாடப்பெறும் நூல். வாசிமின்-ஓதுங்கள்.

காப்புச் செய்யுள் :

ஒற்றைச் சக்கரம் பூட்டிய தேரையுடைய சூரியன், சூழ்ந்து வலம் வருகின்ற ஏழு உலகத்தவரும் விரும்பித் துதிக்கின்ற, அரங்கநாதராகிய மேகமும் கடலும் போன்ற கரிய நிறத்தையுடைய, நம்பெருமாள் மீது பாடப் பெறுகின்ற, இந்த அந்தாதிக்குக் காவல் ஆகும் பொருள்கள் இவை என்று கூற வேண்டுமாயின், அழகிய தமது கையில், சிறந்த முத்திரை மோதிரமும், பொற்பிரம்பும் உடைய சேனை முதலியாரும், பெருமாளின் சக்கரம் சங்கு கதை வாள் வில் என்னும் ஐந்து படைகளுமே காவல் ஆகும்.

ஓர்ஆழி வெய்யவன்சூழ் உலகுஏழ்
　　உவந்து ஏத்து அரங்கர்,
கார்ஆழி வண்ணப் பெருமாள்,
　　அந்தாதிக்குக் காப்புஉரைக்கில்,
சீர்ஆழி அங்கையில் பொற்பிரம்பு
　　ஏந்திய சேனையர்கோன்,
கூர்ஆழி சங்கம் திருக்கதை
　　நாந்தகம் கோதண்டமே!

'ஆழி' என்னும் சொல், நான்கு அடிகளிலும் முறையே தேர்-கடல்-மோதிரம்-சக்கரம் என்னும் பொருள்களில் வந்தது. இது, சொற்பின் வருநிலையணி எனப்படும். வெய்யவன்-சூரியன். பெருமாள், மேகமும் கடலும் போன்று கருநிறம் உடையவராதலின், ''கார் ஆழி வண்ணப் பெருமாள்'' எனப்பெற்றார். காப்பு-காவல். சேனையர்கோன் - விஷ்வக் சேனர். இவர் திருமால் அடியவர்களின் தலைவர்; தம்மைப் புகல் அடைந்தவர்களின் இடர்களை நீக்குபவர். பெருமாளின் ஆணையைத் தாம் கொண்டு நடத்துதற்கு அறிகுறியாக முத்திரை மோதிரமும், பொற்பிரம்பும் ஏந்தியிருப்பவர். ஆதலின் ''சீர்ஆழி, அங்கையிற் பொற்பிரம்பு ஏந்திய சேனையர் கோன்'' என்று புகழப்பெற்றார். பெருமாளுக்கு உரிய சக்கரம் சுதர்சனம், சங்கு பாஞ்சசன்னியம், கதை கௌமோதகி, வாள் நந்தகம், கோதண்டம்(வில்) சார்ங்கம் எனப் பெயர்பெறும். இவைகளைத் திருமாலின் ஐம்படைகள் (பஞ்ச ஆயுதங்கள்) என்பர். ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பலஎழுத்துக்கள் ஒன்றிநின்று, பொருள் வேறுபட்டு வந்தமையால், இச்செய்யுள் திரிபு என்னும் அணியாகும். இங்ஙனம் இரண்டு அணிகள் கலந்து வந்தமையால், இது கலவைஅணி எனவும்படும்.

தமிழ்வேதம் நிலைத்து நிற்க:

உலகத்தார் புகழ்ந்து போற்றுகின்ற பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், மாறன் என்னும் நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், திருமழிசையாழ்வார், கோழியர்கோன் என்னும் குலசேகராழ்வார், பாண்பெருமாள் என்னும் திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார், கோதை என்னும் ஆண்டாள், வெற்றிதரும் வேல்ஏந்திய கலியன் என்னும் திருமங்கையாழ்வார், ஆகிய பன்னிரண்டு ஆழ்வார்களும் அருளிச்செய்த, தமிழ் வேதமாகிய நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், இவ்வுலகில் எக்காலத்திலும் நின்று நிலைபெற்று விளங்குவதாகுக!

வையம் புகழ் பொய்கை, பேய், பூதன்,
　　மாறன், மதுரகவி
ஐயன் மழிசைமன், கோழியர்கோன்,
　　அருட் பாண்பெருமாள்,
மெய் அன்பர் காற்பொடி, விண்டுசித்தன்,
　　வியன் கோதை, வெற்றி
நெய் அங்கை வேற் கலியன்,
　　தமிழ்வேதம் நிலைநிற்கவே.

குருபரம்பரை:

திருமால், திருமகள், சேனை முதலியார், சிறந்த திருக்குருகூரில் தோன்றிய தலைவராகிய நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார். மணக்கால்நம்பி (இராமர்), ஆளவந்தார் (யமுனைத்துறைவர்), பராங்குசதாசர் (பெரியநம்பிகள்), எதிராசர் ஆகிய இராமாநுசர், கூரத்தாழ்வான், எம்பார், பட்டர் ஆகிய இவர்கள், வைணவராகிய நமக்குப் பற்றுக்கோடு ஆவார்கள்.

சீதரன், பூமகள், சேனையர்கோன்,
　　தென் குருகைப்பிரான்,
நாதமுனி, உய்யக்கொண்டார்,
　　இராமர், நல் ஆளவந்தார்,
ஏதம்இல் வண்மைப் பராங்குச
　　தாசர், எதித் தலைவர்,
பாதம் அடைந்துஉய்ந்த ஆழ்வான்,
　　எம்பார், பட்டர், பற்றுஎமக்கே!

சீதரன்-திருமகளை மார்பில் தரித்த திருமால். பூமகள்-தாமரைமலரில் வைகும் திருமகள், இலக்குமி. குருகைப்பிரான்-திருக்குருகூரில் தோன்றிய நம்மாழ்வார். இராமர்-மணக்கால்நம்பிகள். ஆளவந்தார்-நாதமுனிகளின் பேரர், யமுனைத்துறைவர் என்னும் இயற்பெயருடையவர். ஒரு வாதத்தில் வென்று, அரசியாரால் 'எம்மை ஆளவந்தவரோ?' எனப் பாராட்டப்பெற்றவர். பராங்குசதாசர் -பெரியநம்பிகள்; இராமாநுசருக்குப் பஞ்சசம்ஸ்காரங்களும், மந்திரோபதேசமும் செய்தவர். எதித்தலைவர்-துறவிகளின் தலைவராகிய இராமாநுசர். ஆழ்வான்-இராமாநுசரின் மாணவர் ஆகிய கூரத்தாழ்வார். எம்பார்-கோவிந்தபட்டர், இராமாநுசர் அளித்த எம்பெருமானார் என்னும் பெயரை 'எம்பார்' எனச் சுருக்கி வைத்துக்கொண்டவர். பட்டர்-கூரத்தாழ்வானின் புதல்வர்; இந்நூலாசிரியரின் குரு; சகல சாத்திரங்களிலும் மிக்க தேர்ச்சிபெற்றவர் ஆதலின், 'பட்டர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

சிங்காதனர் எழுபத்துநால்வர்:

திருமாலையாண்டான், திருக்கோட்டிநம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், திருமலைநம்பி, பெரியநம்பி, என்பவர்களுடைய அரிய சிறந்த திருவடிகளை அடைந்த எதிராசர் என்னும் இராமாநுசரின் திருவடிச் சம்பந்தத்தினால், சிங்காதன அதிபதிகளாய் விளங்குகின்ற ஆசாரியர்கள் எழுபத்துநான்கு பேரும், எனக்குச் சிறந்த துணை ஆவர்.

திருமாலை யாண்டான், திருக்கோட்டி
　　நம்பி, திருவரங்கப்
பெருமாள் அரையர், திருமலை நம்பி,
　　பெரிய நம்பி,
அரு மால் கழல்சேர் எதிராசர்,
　　தாளிற் சிங்காதனராய்,
வரும் ஆரியர்கள் எழுபத்து
　　நால்வர், என் வான்துணையே

இச்செய்யுளின் முதல் இரண்டு அடிகளில் குறிக்கப்பெற்ற ஐவரும், இராமாநுசரின் ஆசிரியர்கள் ஆவர். இவர்கள் 'பஞ்ச ஆசாரியர்' எனப்படுவர். இவர்கள் ஐவரையும் ஆசாரியர்களாகக் கொண்டதனால், இராமாநுசர்க்குப்

'பஞ்சஆசாரிய பத ஆச்ரிதர்' எனப்பெயர் வழங்கும். இவர்களுள் (1) திருமாலையாண்டான், இராமாநுசர்க்குத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானம் அருளிச் செய்து, 'சடகோபன் பொன்னடி' என்னும் திருப்பெயரைச் சாத்தியருளினார். (2) திருக்கோட்டியூர் நம்பி, திருமந்திரப்பொருளும், சரமசுலோகப் பொருளும் அருளிச் செய்து 'எம்பெருமானார்' என்னும் பெயரை வழங்கினார். (3) திருவரங்கப்பெருமாள் அரையர், பெரிய திருமொழி மூலமும், திருவாய்மொழி மூலமும், கண்ணி நுண் சிறுத்தாம்பு உரையும் அருளிச் செய்து துவயப்பொருளை உபதேசித்து இலட்சுமண முனி என்ற திருப்பெயரைச் சூட்டினார். (4) பெரியதிருமலைநம்பி, இராமாயண வியாக்கியானம் அருளிச் செய்து கோயில்அண்ணன் என்னும் பெயரை அணிவித்தார். (5) பெரிய நம்பிகள், திருமந்திரமும் துவய சரம சுலோகங்களும் உள்படப் பஞ்ச சம்ஸ்காரம் செய்தருளி, முதலாயிரம் இயற்பா என்ற ஈராயிர மூலத்தை அருளிச்செய்து, இராமாநுசன் என்ற திருப்பெயர் சூட்டினார்.

இராமாநுசரால் எழுபத்துநான்கு சிங்காதன அதிபதிகளாகப் பட்டர், சீராமப்பிள்ளை, கந்தாடையாண்டான், அனந்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான் முதலியோர் நியமிக்கப்பெற்றனர். குருபரம்பரைப் பிரபாவம் என்னும் நூல்களில் இவர்களைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

நம்மாழ்வார்:

திருமாலினுடைய பரமபதமாகிய வைகுந்தத்தை அளித்து, அடியவனாகிய என்னை, அறியாமையாகிய மயக்கத்தை விளைவிக்கும் பிறப்புநீங்கப் பெறுகின்ற அன்பர்களாகிய முக்தர்களின் கூட்டத்தில் சேர்த்தருள இருப்பவரும்; பழைமையாய்த் துன்பம் விளைத்துவருகின்ற கொடிய வினைகளுக்கு ஒப்பற்ற பகைவராக இருப்பவரும்; என்னைப் புறக்கணிக்காமல் அருட் பார்வையை வைத்தருளியவரும்; மாறன் பராங்குசன் சடகோபன் முதலிய பெயர்களை உடையவரும் ஆகிய நம்மாழ்வார், என்னுடைய உள்ளத்திலும் மொழியிலும் நிலைபெற்று வாழ்வாராக!

மால்தன் பராங்கதி தந்து,
அடியேனை அருட் பிறவி
மாறு அன்பரான குழாத்துள்வைப்பான்,
தொல்லை வல்வினைக்குஓர்
மாறன், பராமுகம் செய்யாமல்
என்கண் மலர்க்கண் வைத்த
மாறன், பராங்குசன் வாழ்க!
என்நெஞ்சினும் வாக்கினுமே!

இச்செய்யுளில் தாம் இயற்றப்புகும் நூல் நன்கினிது முடிதற்பொருட்டு, நம்மாழ்வாரை ஆசிரியர் வழுத்தி வணங்குகின்றார். இதன்கண் மாறன் என்ற சொல், வெவ்வேறு பொருள்பட அழகுற அமைக்கப்பெற்றுள்ளது. அச்சொல் முறையே, மால்தன் என்றும், மாறுஅன்பர் என்றும், மாறன் (பகைவன்) என்றும், மாறன் (சடகோபன்) என்றும், வெவ்வேறு பொருள்களை உணர்த்தி வந்தது. பராங்கதி-மேலான வீடுபேறு, பரமபதம். நம்மாழ்வார்க்கு மாறன் பராங்குசன் சடகோபன் என்னும் பல பெயர்கள் வழங்கும்.

திருவரங்கத்து அந்தாதி:

திருமகள் தான் வாழ்தற்கு உரிய இடமாகக் கொண்டு, உறைகின்ற திருமார்பை உடையவனே! பிரமன் வணங்கவும், கந்தர்வர்கள் இனிய இசையைப் பாடவும், திருவரங்கத்தில் பள்ளிகொண்டு கண்வளர்ந்து, அறிதுயில் செய்தருள்பவனே! உனக்கே அடிமைத்தொண்டு செய்வதற்கு வரம்பெற யான் ஆசைப்பட்டேன். நின்னுடைய பழைய அடியவனாகிய எனக்கு அருள்புரிதற்கு, நீ துயிலொழிந்து எழுந்தருள்வாயாக!

திரு, அரங்கா உறைமார்பா!
திசைமுகன் சேவிப்பக், கந்
திருவர் அங்கு ஆதரித்து இன்னிசை
பாடத் திருக்கண்வளர்
திருஅரங்கா! உன்பழ அடியேற்கு
அருள்செய்ய எழுந்
திரு! அரங்கா! காதலித்தேன் உனக்கே
தொண்டு செய்வதற்கே!

திருமகள் திருமாலின் மார்பை அரங்கமாகக் கொண்டு வாழ்தலால் ''திரு, அரங்கா (அரங்கம் ஆக) உறை, மார்பா' என்றார். திருவரங்கநாதர் பள்ளிகொண்ட கோலத்தில் எழுந்தருளியிருத்தலின் 'திருக்கண்வளர் திருவரங்கா' என்றார். அரங்கர் துயில்வதற்குக் கந்தர்வர்கள் இன்னிசை பாடுதலும், திசைமுகன் சேவித்தலும், ஏற்புற அமைந்தன. நின் பழைய அடியவனாகிய யான் நினக்கே தொண்டு செய்வதற்குக் காதலித்தேன். ஆதலால் 'அரங்கா! அடியேற்கு அருள்செய்ய எழுந்திரு' என்று ஆசிரியர் வேண்டுகின்றார் (1)

சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனம்:

குருவினுடைய இனிய அருளினால், திருமகளைத் திருவடிகள் தொழுது, வயல்களிலுள்ள சங்கினங்கள் சூழப்பெற்றதிருவரங்கத்து நாதனும்; வெண்ணெயையும் உலகத்தையும் உண்ணுதற்குச் சிறிது திறந்த வாயையுடையவனும், முகுந்தன் என்னும் பெயர் உடையவனும் ஆன திருமாலினது செவ்வியையுடைய, வளைவான சிலம்புகள் அணிந்த திருவடிகளை நாம் புகலிடமாக அடைந்தோம்.

செய்யவளைக் குருவின் அருளால்
திருத்தாள் வணங்கிச்,
செய்ய வளைக்குலம்சூழ்
அரங்கேசன் சிறிதுஅமுது
செய்ய, அளைக்கும் புவிக்கும்
அங்காந்த செவ்வாய் முகுந்தன்
செய்ய வளைக்கும் சிலம்புஅணி
பாதங்கள் சேர்ந்தனவே.

ஆசாரியனின் அருளால் திருமகளின் அருளையும், திருமகளின் புருஷகார பலத்தால் பெருமாள் திருவடிகளையும் அடைதலே முறைமையும் எளிமையும் ஆதலின், 'செய்யவளைக்

குருவின் அருளால் திருத்தாள்வணங்கி' என்றார். பெருமாள் கண்ணபிரானாகத் திருவவதரித்தபொழுது வெண்ணெயையும் மண்ணையும் உண்டவன் ஆதலின், 'அளைக்கும் புவிக்கும் அங்காந்த செவ்வாய் முகுந்தன்' என்றார். செய்யவள்-திருமகள். செய்-வயல், செய்ய-வயல்களில் உள்ள. வளை-சங்கு. வளைக்குலம்-சங்கின் கூட்டங்கள். அமுதுசெய்ய-உண்ணுவதற்கு. அளை-வெண்ணெய். புவி-உலகம். அங்காந்த-வாய்திறந்த. முகுந்தன்-அடியவர்களுக்கு முக்தியின்பத்தையும், நிலவுலக இன்பத்தையும் கொடுப்பவன். செய்ய-சிவந்த, செவ்வியை உடைய. (2)

அரங்கா முத்தி தந்தருள்:

பசுக்கள் நிலைகலங்க, அவற்றைக் காப்பதற்காகக் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாக எடுத்துப் பிடித்தவனே! ஆதிசேடனைக் குளிர்ந்த மென்மையான சிங்காதனமாக உடையவனே! பெரிய கடலில் பள்ளிகொண்டுள்ளவனே! அரங்கநாதனே! மகளிரும், மழலைச் சொற்களை உடைய பிள்ளைகளும், விளைநிலமும், மனையும் செல்வமும் ஆகிய இவற்றில் ஆசைகொள்ளுகின்ற இவ்வுலக வாழ்க்கைக்கு அச்சம்கொண்டு, நீயே தஞ்சம் என்று உன்னைச் சரண் அடைந்தோம். எமக்கு நீ முத்தியின்பத்தைக் கொடுத்தருள்வாயாக!

தன மாதர், அஞ்சொற் குதலைப்
    புதல்வர், தரணி, இல்லம்,
தனம் ஆதரம்செய்யும் வாழ்வுஅஞ்சித்
    தஞ்சம் நீயெனப் போந்
தனம், ஆ தரங்கிக்க வெற்புஎடுத்தாய்!
    தண் அனந்த சிங்கா
தன மா தரங்கம் உள்ளாய்!
    அரங்கா! முத்தி தந்தருளே.

இச்செய்யுளில் 'தனம்' என்னும் சொல், வெவ்வேறு பொருளில் அமைந்து வந்தது. பெண்களுக்கு அழகு செய்வது தனம் ஆதலின், 'தனமாதர்' என்றார். குழந்தைகள் பேசும் சொற்களைக் குதலை என்றும், மழலை என்றும் வழங்குவர். குதலையாவது பொருள் விளங்காத அரைகுறைச் சொற்கள். மழலை என்பது பொருள் விளங்குகின்ற இனிய சொற்கள். தரணி-விளைநிலம். இல்லம்-வீடு. தனம்-முலை, செல்வம். ஆதரம் செய்தல்-விரும்புதல். தஞ்சம்-பற்றுக்கோடு, துணை. ஆ-பசுக்கள். தரங்கிக்க-நிலைகலங்க. ஆதிசேடன்-பெருமாளுக்குப் படுக்கையாகவும் இருக்கையாகவும் பலவகைகளில் பணிசெய்தலின் 'அனந்த சிங்காதன!' என்றார். அனந்தன்-ஆதிசேடன். தரங்கம்-அலை, கடல். திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருத்தலில் 'மா தரங்கம் உள்ளாய்' என்றார். (3)

தம்தம் வினையால் நைவார்:

உலகில் அநேகர், தந்தங்களை உடைய மலைபோன்ற கசேந்திரன் என்னும் யானைக்கு முன்னே எழுந்தருளிக் காட்சியளித்த பெருமானும், எதிர்த்து மோதிக் கொடிய போர்களைச் செய்த மல்லர்களைச் சிதைத்து அழித்தவனும், குளிர்ந்த தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளுக்குக் கொழுநனும் ஆகிய, திருவரங்கநாதனின் அழகிய திருவடிகளை அடைக்கலமாக அடைந்து உய்வுபெறாதவர்களாய், தம்மை இடைவிடாமல் வருத்துகின்ற, தங்கள் தங்களின் முன்னைத் தீவினைகளால் வருந்துவார்கள்.

தந்த மலைக்கு முன்நின்ற பிரான்,
    எதிர் தாக்கி, வெம்போர்
தந்த ம (ல்)லைக் குமைத்தான்; அரங்கேசன்,
    தண் பூவின்இடைத்
தந்து அமலைக்குத் தலைவர், பொற்பாதம்
    சரண் என்று உய்யார்
தம்தம் அலைக்கும் வினையால்
    நைவார் பலர், தாரணிக்கே!

பெருமாள் கசேந்திரன் என்னும் யானைக்கு முன்தோன்றிக் காட்சியளித்தனர் ஆதலால், 'தந்த மலைக்கு முன் நின்ற பிரான்' என்றார். 'தந்த மலை'—தந்தைத்தையுடைய மலைபோன்ற பெரிய யானை, கசேந்திரன். எதிர்த்து வந்து மோதிப் போர்செய்ய முற்பட்ட சாணூரன் முட்டிகன் என்னும் மல்லர்களைக் கண்ணபிரான் குத்திப் பொருது அழித்தனன் ஆதலின் 'வெம்போர் தந்த மல்லைக் குமைத்தான்' என்றார். மல்லை-மல்லர்களை. 'மல்லை' என்னும் சொல், யமகம் நோக்கி இடைக்குறைந்து வந்தது. குமைத்தல்-கும் கும் என்று குத்துதல். திருமகள் நூல்போன்ற இடையை உடையவள் ஆதலின் 'இடைத்தந்து அமலை' என்றார். தந்து-நூல். அமலை-குற்றமற்றவள், மலம் இல்லாதவள், திருமகள். 'தந்து இடை அமலைக்குத் தலைவன்'-திருமகள்கேள்வன். பெருமாளின் திருவடிகளைச் சேர்ந்தவர்கள் உய்வார்கள், சேராதவர்கள் தீவினையால் வருந்தி நைவார்கள் என்பது கருத்து. அலைக்கும் - அல்லல் விளைவிக்கும். நைவார்-வருந்துவார்கள். தாரணி-உலகம். தரணி-என்னும் சொல் நீட்டல் விகாரம் பெற்றது. (4)

அரங்கன் தமர்கள்:

அசுரனாகிய மாவலியினிடத்தில் மூன்று அடி நிலத்தை இரந்தவனும், தனது பாஞ்சசன்னியம் என்னும் சங்கினை வாயில் வைத்து ஊதிய அளவில் பகைவர்களுடைய படையின் அணியை அழிவித்தவனும், ஆகிய திருவரங்கநாதனின் அடியார்கள், அழகிய தேவர் உலகின் தலைநகராகிய அமராவதியினையும், அங்குள்ள கற்பக மரத்தின் நிழலையும், மாலையணிந்ததும் மதநீர் பெருகுவதுமாகிய ஐராவதம் என்னும் தெய்வ யானையையும், வலியக் கொடுத்தாலும், அவற்றைப் பெறுவதற்கு உடன்படமாட்டார்கள்.

தாரணி தானவன்பால் இரந்தான்,
    சங்கம் வாய்வைத்து ஒன்னார்
தார்அணிதான் அவஞ் செய்தான்,
    அரங்கன் தமர்கள் பொருந்
தார், அணிது ஆன அமரா
    வதியும், தருநிழலும்,
தார்அணி தான அயிரா
    வதமும், தருகிலுமே!

பெருமாள் மாவலியினிடத்தில் மூன்றடி மண் இரந்து பெற்றனர் ஆதலின், 'தாரணி தானவன் பால் இரந்தான்' என்றார். தானவன் -அசுரன். காசியப முனிவரின் மனைவியருள் தனு என்பவள்பால் தோன்றியவர்கள், தான வர் எனப்படுவர். பெருமாள் தமது பாஞ்ச சன்னியம் என்னும் சங்கினை வாய்வைத்து ஊதும் அளவிலேயே, பகைவர்களின் படைகள் நிலைகுலைந்து பதறிப் புறமுதுகிட்டு ஓடும் ஆதலின் 'சங்கம் வாய்வைத்து, ஒன்னார் தார் அணிதான் அவஞ் செய்தான்' என்றார். ஒன் னார்-பகைவர்கள். 'ஒன்றார்' என்னும் சொல் 'ஒன்னார்' என மருவி வந்தது. தார்அணி-படைவகுப்பின் ஒழுங்கு. அவம்-கேடு. தமர்கள்-அடியார்கள். பொருந்தார்-ஏற்றுக் கொள்ள உடன்படமாட்டார்கள். தேவர் உலகத்தின் தலைநகராதலின் அமராவதியினை 'அணிது ஆன அமராவதி' என்றார். அணிது-அழகியது. தரு-மரம், கற்பகமரம். அயிராவதம் என்னும் தேவருலக யானை மாலையணியப்பெற்று மத நீர் பெருகநிற்கும் மாட்சிமை உடையதாதலின் 'தார்அணி தான அயிராவதம்' என்றார். தார்-மாலை. தானம்-மதநீர். அரங்கநாதனின் அடி யவர்கள் மீட்சியிலா வீட்டுலகத்தின் பேரின் பத்தை விரும்புவார்களேயன்றி, சில்லாண்டிற் சிதைந்தொழியும் தேவருலக இன்பத்தை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். வலியக் கொடுத்தாலும் அவற்றைப் பெறுவதற்கு உடன்படமாட்டார்கள் என்பது கருத்து. ''ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' என்று குலசேகராழ்வாரும், ''இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும் அருளிச் செய்திருத்தல், இங்கு நாம் அறிந்து இன்புறத் தக்கதாகும். (5)

—(தொடரும்)

—ஆசிரியர்

தசாங்கம்

'தசாங்கம்' என்பது ஓர் அரசனுக்குரிய, பெயர் ஊர் நாடு ஆறு மலை புரவி படை பறை மாலை கொடி என்னும் பத்துவகை உறுப்புக்கள் (தசம்-அங்கம்) பற்றியும் பாடுவது. இவைகள் சிறுபான்மை வேறுபட்டும் ஏற்ற பெற்றிவரும்.

''படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய''

எனவரும் தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் நூற்பாவினால் (616), இதன் இலக்கணம் உணர லாம். இறைவனும் உண்மையில் உலகங்களுக்கெல்லாம் ஒரு பேரரசனே யாதலின், சமய ஆசிரியர்கள் இறைவனுக்கும் இப்பத்துவகை உறுப்புக்களும் உரியனவாகக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப் பாடுவர். மாணிக்கவாசகர் தமது திருவாசகத்துள் திருத்தசாங்கம் என ஒரு திருப்பதிகம் பாடியிருத்தல், ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அதன்படி சிவபெருமானுக்குரிய தசாங்கங்களும் பின்வருவன ஆகும் :

1.	பெயர்	—	தேவர்பிரான்
2.	நாடு	—	தென்பாண்டிநாடு
3.	ஊர்	—	திருஉத்தரகோசமங்கை
4.	ஆறு	—	ஆனந்தம்
5.	மலை	—	அருள்
6.	புரவி(குதிரை)	—	வான்புரவி (ஞான ஆகாயம் ஆகிய குதிரை)
7.	படை	—	கழுக்கடை (திரிசூலம்)
8.	பறை(முரசம்)	—	நாததத்துவம்
9.	தார் (மாலை)	—	தாளியறுகு.
10.	கொடி	—	ஏறு, எருது (ரிஷபம்)

—ஆசிரியர்.

மாணிக்கவாசகரும், சங்கநூல்களும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

முன்னுரை :

சைவ சமய ஆசிரியர்கள் நால்வரில் ஒருவ ராகிய மாணிக்கவாசகப் பெருமான், திருவாசகம் என்னும் செழுந்தமிழ் மாமறையினை அருளிச் செய்தவர், ஒரு சிறந்த சிவபக்தர் என்று மட்டுமே, பெரும்பாலோர் அறிவர். ஆனால், அப்பெருந்தகையாளர், செந்தமிழ் நலமும் சிவ நலமும் செறிந்து சிறந்த திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பிறிதொரு பெருநூலையும் அருளிச் செய்திருக்கின்றார் என்பதும், அவர் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களையெல்லாம் சிறப்புறக் கற்றுத் தேர்ச்சிபெற்றிருந்த பெரும் புலமையாளர் என்பதும், நம்மனோர் நன்கினிதுணர்ந்து மகிழ்ந்து இன்புறுதற்குரியவை. மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் செந்தமிழ்த் தெய்விக நூலில் ,சங்ககால இலக்கியங்களின் நலங்கள் அனைத்தும், பரவி விரவி நிறைந்து செறிந்திருக்கக் காணலாம்.

இவ்வாற்றால் மாணிக்கவாசகர் சிவநெறியினை மட்டுமேயன்றி, பண்டைச் சங்க காலச் செழுந் தமிழ் இலக்கிய மரபு நெறியினையும் செழிப்பித்து வளர்ந்தோங்கச் செய்தருளிய சிறப்புடையவர் என்பது, யாவரும் தெளிந்து உணர்தற்குரியது. இவ்வுண்மையினைச் செவ்விதின் விளக்கி வலியுறுத்தும்வகையில், திருச்சிற்றம்பலக்கோவையாரின்கண் சிறப்புற அமைந்து போந்துள்ள, பழந்தமிழ்ச் சங்க இலக்கியப் பாடல்களின் கருத்துக்களை, ஒப்பீட்டாய்வு முறையில், இங்கு இயன்ற அளவு ஒருசிறிது முயன்று கண்டு மகிழ்வோம்.

(1) தெய்வ மருவளர் மாலை :

தலைவன் தலைவியை ஒரு பொழிலின்கண் காண்கின்றான்: ''இவளது அழகிய முகம் தாமரை மலர்போல விளங்குகின்றது. கண்கள், நீலப்பூக்கள் போன்று கருநிறமும் கவர்ச்சியும் மிக்கு ஒளிருகின்றன. மூக்கு, குமிழம்பூப் போன்று எழில் சிறந்து திகழ்கின்றது. கொங்கைகள், கோங்க மலரின் அரும்புகளை ஒத்திருக்கின்றன. கைகள், காந்தள் மலர்களைப் போலக் காட்சி அளிக்கின்றன. இங்ஙனம் இவளது பல்வேறு உறுப்புக்களும், பலவேறு மலர்களைப் போன்று விளங்குவதனால், எழில் சிறந்து ஒளிரும் இவளது வடிவம், பலநிற மலர்களால் அழகுற நன்கினிது தொடுக்கப்பெற்று, நறுமணம் மிக்க, தெய்வநலம் சிறந்த, மலர்மாலை ஒன்றனைப் போல வயங்குகின்றது. மெல்லிய கொடியினைப் போல ஒல்கி அசைந்து, அன்னம்போல அழகிய நடைவாய்ந்த இப் பெண்ணின்நல்லாள், இப்பொழில்வயின் நிற்கும் தோற்றம், அழகிற் சிறந்த காமதேவன் உலகினைத் தன் வயப்படுத்தி அடிமையாக்கிக் கொண்டு, பெருமிதத்துடன் எடுத்த வெற்றிக் கொடியைப் போல ஒளிர்கின்றது. இஃது என்ன வியப்பு!'' என்று தலைவியினைக் கண்ணுற்று அவளது பேரழகில் தன்னை மறந்து விம்மித முற்று நிற்கின்றான், தலைவன். இதனை,

> திருவளர் தாமரை, சீர்வளர்
> காவிகள், ஈசர்தில்லைக்
> குருவளர் பூங்குமிழ், கோங்கு, பைங்
> காந்தள்கொண்டு, ஓங்குதெய்வ
> மருவளர் மாலை, ஓர் வல்லியின்
> ஒல்கி, அ(ன்)னநடைவாய்ந்து,
> உருவளர் காமன்றன் வென்றிக்
> கொடிபோன்று, ஒளிர்கின்றதே!

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுள், இனிதெடுத்து இயம்புகின்றது. இதன்கண் எழில்நலம் சான்ற ஒரு சிறந்த பெண்ணின் நல்லாளின் அழகிய உறுப்புக்களை, ஒவ்வொரு நறுமலரோடு ஒப்பிட்டுரைத்து, அப்பெண்ணினைப் பலமலர்களைத் தொகுத்துத் தொடுத்த ஒரு தெய்விக மாலையாக உருவகம் செய்து, புனைந்து கூறியிருக்கும் திறம், வியந்து போற்றுதற்குரியது. இக்கருத்தினைப் பின்வரும் குறுந்தொகைப் பாடலும் இனிதெடுத்துக் கூறியிருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

> ''கோடல், எதிர்முகைப் பசுவீ முல்லை,
> நாறுஇதழ் குவளையொடு இடைப்பட விரைஇ,
> ஐதுதொடை மாண்ட கோதை போல,
> நறிய நல்லோள் மேனி,
> முறியினும் வாய்வது, முயங்கற்கும் இனிதே!''
>
> —குறுந்தொகை, 62.

''இவளது கைகள் காந்தள் மலரையும், பற்கள் முல்லை அரும்புகளையும், கண்கள் கருங்குவளை மலர்களையும் போன்று எழில்மிக்கு விளங்குகின்றன. அதனால் இவள், காந்தளும் முல்லையும் குவளையும் ஆகிய மலர்களை இடையிடையே வைத்துத் தொடுக்கப்பெற்ற அழகிய மாலையைப் போல விளங்குகின்றாள். நறுமணம் கமழும் இவளுடைய மேனி, தளிரினும் மென்மையாக இருக்கின்றது'' என்பது, இக்குறுந்தொகைப் பாடலின் பொருள். 'ஐது தொடை மாண்ட கோதை' என்னும் குறுந்தொகைத் தொடரும், 'ஓங்கு தெய்வ மருவளர் மாலை' என்று மணிவாசகர் அருளிச் செய்திருப்பதும் பெரிதொத்துவிளங்குகின்றன.

(2) யானையும் அரவும்:

''மயிலானது, ஒரு சிறிய ஓணானுக்கு அஞ்சி ஒதுங்கி, வெளியே போந்து இரை கவராது. ஆயினும், அத்தகைய எளிய மயில், ஒரு பெரிய யானையையே கொல்லவல்ல பாம்பினைப் பிடித்து, அதன் படத்தைக் கிழித்து எறிந்துவிடும். அதுபோல, தில்லைச் சிவபிரானின் திருவடிப் பொற்றடமலர் சூடுகின்ற என் பேராற்றலை, இந்த எளிய மான்மட நோக்கி ஒருத்தியின் சிற்றிடை, அகற்றிவிட்டது. எளிய ஒரு மயில் வலிய ஒரு பாம்பின் படத்தினைக் கிழித்து எறிவது போல, ஓர் எளிய பெண்ணின் சிற்றிடை, என் பேராற்றலை அகற்றி விட்டதே! என் செய்வேன்?'' எனத் தலைவன் பாங்கனுக்கு உற்றது உரைத்தான்.

கோம்பிக்கு ஒதுங்கி மேயாமஞ்ஞை,
குஞ்சரம் கோள்இழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படம்கிழித்தாங்கு,
அப்பனை முலைக்கே,
தேம்பல் துடியிடை மான்மடநோக்கி,
தில்லைச் சிவன்தாள்
ஆம்பொற் றடமலர் சூடும்
என்ஆற்றல், அகற்றியதே!

எனவரும் திருக்கோவையார் செய்யுளின்கண்,

''சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு,
இளையள் முளைவாய் எயிற்றள்
வளையுடைக் கையள், எம் அணங்கி யோளே''

என்னும் குறுந்தொகைச் செய்யுளின் சிறந்த கருத்து அமைந்திருத்தல் காணலாம். வலிமை மிக்க பெரிய யானையினை, ஒரு சிறிய பாம்பின் குட்டி கடித்து வருத்தியது போல, அறிவாற்றல் மிக்க தலைவனை, இளையவளாகிய தலைவி தன் அழகினால் கவர்ந்து மயக்கிவிட்டாள் என்பது, இக்குறுந்தொகைப் பாடலின் திரண்ட கருத்தாகும்.

(3) அருநாண் அழிகின்றது:

தலைவன் தன் வருத்த மிகுதி கூறக்கேட்டுத் தலைவி நாண் அழிந்தாள். ''இன்றியமையாமையால் என் கண்மணியை ஒத்து, உயிர் போலச் சிறப்புடையதாகப் பழகி, ஒருபொழுதும் என்னைப் பிரியாமல், என்னுடனே வளர்ந்த பெறுதற்கரிய நாணமானது, அழலைச் சேர்ந்த மெழுகையொத்து உருகி, என்பால் நில்லாமல், என்னை விட்டுப் பிரிந்து அழியா நின்றது. அதனால் தில்லைக் கூத்தனை ஏத்தாதவர்கள் பல பிறவிகளை எய்தி வருந்தி உழல்வதுபோல, யான் நாணமிழந்து நலிந்து வருந்தும்படி, இனி வரக் கடவ நாள்களில் யான் இவ்வாறு பிறவாமல் இருப்பேனாக!'' எனத் தலைவி தனது நாணம் அழிதல் குறித்து வருந்தினாள்.

குருநாண் மலர்ப்பொழில்சூழ் தில்லைக்
கூத்தனை ஏத்தலர்போல்,
வரும்நாள் பிறவற்க! வாழியரோ!
மற்றுஎன் கண்மணிபோன்று,
ஒருநாள் பிரியாது, உயிரிற்
பழகி, உடன்வளர்ந்த
அருநாண், அளிய, அழல்சேர்
மெழுகுஒத்து அழிகின்றதே!

எனவரும் இத் திருக்கோவையார் செய்யுளின் கருத்து, உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறும் முறையில்,

''அளிதோ தானே நாணே, நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே, இனியே,
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்து உக்காங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே''

—குறுந்தொகை, 149

எனவரும் குறுந்தொகைச் செய்யுளின் கருத்தினையே தழுவி அமைந்துள்ளது. ''தோழியே! நாணம் என்னும் நற்பண்பானது, நம்மோடு மிக நெடுங்காலம் உடனிருந்து பழகியது. இனி, அஃது உயர்ந்த மணலையுடைய சிறிய கரையானது, இனிய நீரின் அலைகள் மோதுதலால், சிதைந்து வீழ்வது போல, காமவுணர்வு மேன்மேலும் பெருகி நெருக்குதலால், என்னைப் பிரிந்து சென்றுவிட்டது'' என்பது இப்பாடலின்பொருள். இதன்கண் ''நாணே நம்மொடு நனிநீடு உழந்தன்று மன்னே'' என்பதனைத் தழுவி, 'என் கண்மணிபோன்று, ஒருநாள் பிரியாது, உயிரிற்பழகி, உடன்வளர்ந்த அருநாண்'' என மணிவாசகர் அருளிச் செய்திருக்கும்திறம், ஒப்புநோக்கி உவப்புறுவதற்கு உரியது.

(4) மலைத்தேன் விரும்பும் முடவன் :

தலைவன் தலைவியை அடைதற்குப் பல வகைகளில் முயல்கின்றான். ஆயினும் தோழி தலைவனுக்குப் பலவகைத் தடையுரைகள் கூறித் தடுக்கின்றாள். அதனால் தன் விருப்பம் நிறைவேறப்பெறாத தலைவன், தன் நெஞ்சம் உடைந்து, ''நெஞ்சமே! தில்லைக் கூத்தனின் உயர்ந்த கொடுங்குன்றின் நெடுங் குடுமியின் மேல் உள்ள, தேனை விரும்புகின்ற முடவனைப் போலப் பெறுதற்கரிய தலைவியைப் பெறுதற் பொருட்டு, நீ அவள்மாட்டுக் கொண்ட அளவற்ற அன்பினாற் போதரும் துயரத்தை, யான் ஆற்றுகின்றிலேன்'' என்று பெரிதும் வருந்திக் கூறுகின்றான்.

''மாற்றேன் எனவந்த காலனை,
ஓலம் இடஅடர்த்த
கோற்றேன், குளிர்தில்லைக் கூத்தன்,
கொடுங்குன்றின் நீள்குடுமி
மேல், தேன் விரும்பும் முடவனைப்
போல மெலியும் நெஞ்சே!
ஆற்றேன், அரிய அரிவைக்கு
நீவைத்த அன்பினுக்கே''

எனவரும் திருக்கோவையார் செய்யுள், ''குறுகிய தாளையுடைய கூதளஞ்செடிகள் வளர்ந்த, உயர்ந்த மலையிலுள்ள பெரிய தேனடையைக் கண்ட, எழுந்திருக்க முடியாமல் இருக்கையிலேயே உள்ள ஒரு முடவன், தன் உள்ளங்கையைச் சிறிது குவிந்த பாத்திரம்போல்

குழித்து, அம் மலையின் கீழிருந்தபடியே, அத் தேன் இறாலைப் பலமுறை சுட்டித் தன் உள்ளங்கையை நக்கி இன்புறுதலைப்போல, நம் காதலர் நமக்கு அன்பும் தண்ணளியும் செய்யா ராயினும், அவரை நாம் பலமுறை பார்த்தலும் நம் உள்ளத்திற்கு இன்பம் தருகின்றது'' என் னும் கருத்தமைந்த, பின்வரும் குறுந்தொகைச் செய்யுளை நினைவூட்டுகின்றது.

குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து
சுட்டுபு நக்கி ஆங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே

(5) கடலே! நின்னையும் அகன்றார் உளரோ ?

தலைவி தலைவனைப் பிரிந்து ,அவனைப் பற்றிய நினைவின் மிகுதியால் ஆகிய ஏக்கத் தினால் துயில் இழந்து வருந்துகின்றாள். அந் நிலையில் அவள் கடலை நோக்கிப் புலம்பிப் பின்வருமாறு வினவுகின்றாள். ''கடலே! நீ ஓங்கி உயர்ந்து அமைந்த கரையைப் பொருந்தி, புரண்டும் விழுந்தும், எழுந்தும், ஓலம் இட்டும், துன்புற்றுப் புலம்பா நிற்கின்றாய். எப்போதும் அலைந்து கலங்கிக் கொந்தளித்துத் துயருறு கின்றாய். ஓர் இரவிலும்கூட, நீ கலக்கம் இன்றி அமைதியுற்றுத் தெளிவு அடைகின்றிலை. அத னால் என்னைப்போல, நின்னையும் அணைந்து அகன்று சென்றொழிந்தவர் யாரேனும் உளரோ? கூறுக.

பூங்கணை வேளைப் பொடியாய்விழ,
விழித்தோன், புலியூர்
ஓங்குஅணை மேவிப்புரண்டு
விழுந்தெழுந்து ஓலமிட்டுத்
தீங்குஅணைந்து, ஓர் அல்லும் தேறாய்!
கலங்கிச் செறிகடலே!
ஆங்குஅணைந்தார் நின்னையும்
உளரோ சென்று அகன்றவரே?

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையாரின் கருத்து, பின்வரும் சங்ககாலஇலக்கியச்செய்யுள் களிலும் அமைந்திருத்தல் அறிந்து மகிழற் பாலது.

யார்அணங்கு உற்றனை? கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீன்ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே!
—குறு. 165

பாய்திரை பாடுஓவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்!
தூஅறத் துறந்தனன் துறைவன்என்று அவன்திறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ?எம்போலக்
காதல்செய்து அகன்றாரை உடையையோ நீ?
—கலி, 129

(6) மயில் முட்டையும். இளைய மந்தியும் :

தலைவனின் பிரிவை நினைந்து வருந்தும் தலைவியை, ''நீ இங்ஙனம் வருந்துவாயாயின், நம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், நின்னை ஐயுற்று ஆராயத் தொடங்குவர். ஆதலின் நீ நின் பிரிவாற்றாமையைப் பிறர் அறியாமல் அடக்கிக் கொள்க'' என்று கூறிய தோழிக்கு, ''தோழியே கொன்றை மாலை அணிந்த கூத் தப்பெருமானின் தென்தில்லையை வணங்காத பாவிகள்போல, மனக் கலக்கம் உற்று, ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் வருந்துகின்ற தீய வினையையுடைய என்போலும் பெண்களுக்கு, ஒருவரும் சென்று பார்த்துப் பாதுகாப்பது இல் லாத மயிலினது முட்டையை, இளங்குரங்கு பந்துபோல உருட்டி விளையாடுகின்ற சோலை கள் நிறைந்த, மலைநாட்டை உடைய தலை வனது இயல்பும் செயலும், மிகத் துன்பம் தரு வனவாக உள்ளன. யான் எங்ஙனம் ஆற்றி யிருப்பேன்?'' என்று தலைவி கூறுவதாகப் பின் வரும் திருக்கோவையார் செய்யுள் இயன்றுள்ளது.

வந்து ஆய்பவரை இல்லா
மயில்முட்டை, இளையமந்தி
பந்துஆடு இரும்பொழிற் பல்வரை
நாடன் பண்போஇனிதே,
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்,
தென்தில்லை தொழார் குழுப்போல்
சிந்தாகுலம் உற்றுப் பற்றின்றி
நையும் திருவினர்க்கே

இனிய இந்தத் திருக்கோவையார் செய்யுளின் பொருள்,

''கான மஞ்ஞை அறைஈன் முட்டை,
வெயில்ஆடும் முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை, என்றும்
நன்றுமன் வாழி தோழி! உண்கண்
நீரோடு ஒராங்குத் தணப்ப,
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே''

எனவரும் குறுந்தொகைச் செய்யுளின் பொரு ளைப் பெரிதும் அடியொற்றி நிற்றல் ஒப்பிட்டு நோக்கி உள்ளம்கொள்ளுதற்குரியது.

(7) சூல்முதிர் பெடையும், துணைச்சேவலும்:

அகப்பொருள் நூல்களில் 'புனல் வரவு உரைத்தல்' என்பது ஒரு துறை. அத்துறை யினைத் தழுவித் திருக்கோவையாரிலும் ஒரு செய்யுள் வருகின்றது. ''கருப்பம் முதிர்ந்ததும் துள்ளும் நடையை உடையதுமாகிய பெண் பறவைக்கு, அது முட்டையிடும் கூட்டைப் பின்னுதற்கு விரும்பி, அதன் துணையாகிய ஆண் புறவை, தேன்போலும் இனிய சாறு மிகுந்த கரும்பினது மெல்லிய பூவைக் கொழுது கின்ற ஊரை உடைய, தலைவனின் திண்ணிய தோள்களை, மான்போலும் பார்வையினை உடைய பரத்தையர்கள் பலரும்கூடி இன்புறும் வண்ணம், தில்லைச் சிற்றம்பலவனின் திருவரு ளைப் போன்ற, இப் பொய்கையின்கண், தலை வன் பரத்தையரோடு கூடிப் புனலாடுதலால், தலைவன் தலைவியைப் புலவி கொள்ளுமாறு செய்வான் போலும்!'' என்பது அப்பாடலின் பொருள். அப்பாடல் வருமாறு:

சூல்முதிர் துள்ளுநடைப் பெடைக்கு, இல்
துணைச் சேவல்செய்வான்,
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்குதர்
செம்மல்ஊரன், திண்தோள்
மான்முதிர் நோக்கின் நல்லார் மகிழத்
தில்லையான் அருளே
போல், முதிர் பொய்கையிற் பாய்ந்தது,
வாய்ந்த புதுப்புனலே

கருப்பம் முதிர்ந்த பெண்பறவைக்கு, அது முட்டையிடுவதற்குக்கூடுஅமைத்தற்பொருட்டு, தேன்போலும் சாறுமுதிர்ந்த கரும்பின் பூவை, ஆண்பறவை கோதி எடுக்கும் என்று, இப் பாடல் கூறுவதுபோலவே, பின்வரும் குறுந் தொகைச் செய்யுளும் குறிப்பிட்டிருத்தல் ஒப் பிட்டு மகிழ்தற்குரியது.

யாரினும் இனியன் பேரன் பினனே!
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே''

எனவரும் குறுந்தொகை என்னும் சங்க இலக்கி யத்தின் (85) செய்யுளைத் தழுவி, இப்பாடல் அமைந்துள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது.

(8) இவள்கற்பு நற்பால இயல்புகளே:

அகப்பொருள் நூல்களில் 'நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல்' என்பது ஒருதுறை. அத்துறையினைத் தழுவித் திருக்கோவையா ரிலும் ஒரு செய்யுள் அழகுற அமைந்துள்ளது. ''தீயின்கண் நின்று நடனம் புரியும் சிவபிரா னின் சிற்றம்பலத்தைப் போன்ற சிறந்த தலை வியானவள், தலையில் சூடப்படாமல் ஒரு பளிங்குச் செப்பின்கண் இட்டு அடைத்து வைக் கப்பெற்றுத் தனியே வைகுகின்ற ஓர் அழகிய நறுமலரைப் போல வாடி வதங்கி மெலிகின் றாள். ஆயினும் இதனைப் பிறர் அறியின், தில்லை ஊரனாகிய தலைவனுக்கு, இன்று இது ஒரு தகுதியற்ற பழிச் செயலாகும் எனக் கருதி நாணமுற்று, தன்னுடைய அளவற்ற வருத்தத்தை என்னிடத்திலும்கூட வெளியிடா மல், இவ்வாறு மனத்துள் அடக்கிக்கொண்டு மறைத்து ஒழுகுகின்றாள். இதனால் இத்தலை வியின் கற்பின் பொற்பு, நமக்குத் தாயாகும் இயல்பை உடையதாகத் திகழ்கின்றது. இத் தலைவியின் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு முதலாகிய இயல்புகள், மிகவும் ஒப்புயர் வற்று நல்லனவாய்ச் சிறந்து விளங்குகின்றன'' என்பது அப்பாடலின் பொருள்.

வேயாது செப்பின் அடைத்துத்,
தமிவைகும் வீயின்அன்ன
தீயாடி சிற்றம்பலம் அனையாள்,
தில்லை ஊரனுக்குஇன்று
ஏயாப் பழியென நாணி, என்கண்
இங்ஙனே மறைத்தாள்,
யாய்ஆம் இயல்புஇவள் கற்பு,
நற்பால இயல்புகளே

தலைவனின் பரத்தைமை ஒழுக்கக் கொடு மையினைத் தனக்கும்கூட வெளிப்படுத்தாமல் நாணத்தினால் மறைத்து ஒழுகினாள் என்று, தலைவியின் கற்பின் திறனைத் தோழி வியந்து புகழ்ந்து கூறுவதாக அமைந்துள்ள, இத் திருக் கோவையார் செய்யுள்,

யாய் ஆகியளே மாஅ யோளே!
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே!
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம்மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே

என்னும் குறுந்தொகைச் செய்யுளை அடி யொற்றி அமைந்திருத்தல், ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்து உணரற்பாலது.

(9) வருகஎன வெள்கிச் சென்றாள்:

தலைவன் தலைவியின்பால் 'நின்னை ஒழிய யான் வேறு ஒருத்தியையும் அறியேன்' என்று கூறினான் ஆக, அப்போது தலைவி கூறு வதாக வரும் செய்யுள்ஒன்று, திருக்கோவை யாரில் அமைந்துள்ளது. 'பரத்தையைக் கண் டமைகூறிப் புலத்தல்' என்பது அச்செய்யு ளுக்கு உரிய துறை.

''நின் பரத்தை ஒருத்தி தெருவழியே செல்லா நின்றவள், நம் வாயிற்கண் சிறிது நேரம் நின்றாள்; அங்குத் தேருருட்டி விளை யாடிக் கொண்டிருந்த நம் புதல்வனைக் கண்டு, அவனது உறுப்பு நலங்களை நோக்கி வியந்து, நின்னுடைய புதல்வனோ அல்லனோ என்று முதற்கண் ஐயுற்றாள்; பின்னர் நின் புதல் வனே என்று தெளிந்து, நின்பாற் கொண்ட அன்பினால், நின் புதல்வனை எடுத்துத்தழுவி மகிழ்ந்து கொண்டிருந்தாள். தன் இயலையும் செயலையும் யாரேனும் கண்டுவிடுவரோ, என்ற அச்சமும் ஐயமும் அவளுக்கு இருந்தன. அந் நிலையில் அவளைக் கண்டுகொண்ட நான், 'நீ சிறிதும் ஐயமோ அச்சமோ கொள்ளுதல் வேண்டா! இவன் உனக்கும் மகனே! இவ னொடு உன் உறவு, உண்மையான நல்ல உறவே. இதுவும் உனக்குரிய இல்லமே; இங்கே நீ உள்ளே வருக' என்று அழைத்தேன். கையில் மானை ஏந்திய சிற்றம்பலவனின் புலியூரைப் போன்று, சிறந்த நல்ல அழகியாகிய அவள், பெரிதும் நாணமுற்றுச் சென்றுவிட்டாள். அத னால், யான் நினது அன்பிற்குரிய பரத்தையை அறிவேன்; யான் அவளை அறியேன் என்று நினைத்துக்கொண்டு, நீ பொய்யான புனைந் துரைகளைக் கூறுதல் வேண்டா!'' என்பது, அப் பாடலின் பொருள்.

''நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே,
கூர்எயிற்று அரிவை குறுகினள் யாவரும்
காணுநர் இன்மையிற் செத்தனள் பேணிப்,
பொலங்கலம் சுமந்த பூண்தாங்கு இளமுலை

வருக மாளஎன் உயிர்எனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோட் கண்டுநிலைச் செல்லேன்;
மாசில் குறுமகள் எவன் பேதுற்றனை?
நீயும் தாயை இவற்கென, யான்தற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா,
நாணி நின்றோள் நிலைகண்டு யானும்
பேணினென் அல்லனோ? மகிழ்ந! வானத்து
அணங்கருங் கடவுள் அன்னோள், நின்
மகன்தாய் ஆதல் புரைவதாங் கெனவே!''

என்று, அகநானூற்றில் சிறந்ததொரு பாடல் வருகின்றது! அழகிய இனிய அப்பாடலை முழுவதும் தழுவி,

''ஐயுற வாய், நம் அகன்கடைக்
    கண்டு, வண் தேர்உருட்டும்
மையுறு வாட்கண் மழவைத்
    தழுவ, மற் றுன்மகனே,
மெய்யுற வாம், இதுன் இல்லே
    வருகென வெள்கிச் சென்றாள்,
கையுறு மான்மறி யோன்புலியூர்
    அன்ன காரிகையே''

எனத் திருக்கோவையாரின் கண் வரும் அழகிய இனிய பாடல், மாணிக்கவாசகரது சங்கநூற் பயிற்சியின் மேன்மையினையும், ஈடுபாட்டினையும், இனிது விளக்கும் சான்றாக நிலைபெறும்.

—தொடரும்

'ஈடு' பெயர்க் காரணம்

வடக்குத் திருவீதிப்பிள்ளை என்பவர் எழுதியருளிய, திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்துக்கு, ஈடு என்று பெயர்.

தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்—பிள்ளை, இந்த
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
ஈடு,முப்பத் தாறா யிரம்.

இங்ஙனம் 'ஈடு' எனனும் பெயர் அமைந்ததற்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன. (1) ஈடு—இடுதல், அணியப்பெறுதல்; அஃதாவது உடலின்மேல் அணிந்து கொள்ளப் படுவது என்னும் பொருளில், கவசம் என்பதனைக் குறிக்கும். கவசமானது உடலைக் காப்பது போன்று இம்முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானமும், கற்போராலும் எழுதுவோராலும் வேற்று மக்களாலும் தன்னிலையில் திரிந்து மாறுபட்டு விடாதபடி, திருவாய் மொழியின் பொருளைப் பாதுகாத்துக் கொண்டு விளங்குதலின், ஈடு என்ற சிறப்புப் பெயரினைப் பெறுவதாயிற்று.

(2) ஈடு—இடுதல், எழுதுதல். நம்பிள்ளை என்னும் வைணவ சமயப் பெருந்தகையார், நாடோறும் தம் காலட்சேபத்தில் அருளிச் செய்து கொண்டு வந்தனவற்றை, அங்ஙனமே வடக்குத் திருவீதிப்பிள்ளை ஏட்டில் எழுதி வைத்துப் போற்றிக் காத்தனராதலின், இதனை ஈடு என வழங்கினர் எனலும் பொருந்தும். வடக்குத் திருப்பிள்ளை எழுதிய திருவாய்மொழி 36,000 படி வியாக்கியானம், 'நம்பிள்ளை ஈடு' எனவும் வழங்கும்.

(3) ஈடு—ஒப்பு. பிரம சூத்திரத்திற்கு இராமாநுசர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யம் விளக்கும் ஆழ் பொருள்கள் அனைத்தும் விளங்கும் பொருட்டுச் சுதரிசன பட்டர் என்பவர் இயற்றிய 36,000 கிரந்தங்களையுடைய சுருதப்பிரகாசிகை என்னும் நூலுக்கு ஒப்பு ஆகும்படி இயற்றப் பெற்றதனால், இஃது ஈடு எனப் பெயர் பெறுவதாயிற்று எனவும் கொள்ளலாம்.

(4) திருவாய்மொழியின் சிறந்த பொருள் நலங்களில், மக்கள் அனைவரும் மகிழ்ந்து ஈடுபடும்படி செய்து வருவதாகலின், ஈடு எனப் பெயர் ஏற்பட்டது எனினும் அமையும்.

''மாறன் மறைப் பொருளை
ஈடுபடும்படியிறே அருளிச் செய்தது''

என்பது, பிள்ளை லோகஞ்சீயர் வியாக்கியான சூக்தி.

—ஆசிரியர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்கள், அருள்மிகு மீனாட்சி யம்மையினிடமிருந்து, செங்கோல் வாங்குதல்.

பதிவு எண். எம். 7039



அருள்மிகு ஆலிங்கனமூர்த்தி, திருச்சாய்க்காடு,
சீர்காழி வட்டம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.